அம்பலவாணக் கவிராயர் இயற்றிய...

அறப்பளீசுர சதகம்



சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 559

அம்பலவாணக் கவிராயர்

இயற்றிய

அறப்பளீசுர சதகம்

பதிப்பாசிரியர்:

மணி. மாறன்,

M.A.,(T),M.A.,(H),B.L.I.S.,Dip.in Sanskrit.,

தமிழ்ப் பண்டிதர். சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும்

ஆய்வு மையம்

தஞ்சாவூர்

2014 விலை : ரு. 150

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	**அறப்பளீசுர சதகம்**
பதிப்பாசிரியர்	:	**மணி.மாறன்**
வெளியிடுபவர்	:	**இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்**
வெளியீட்டு எண்	:	559
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	செப்டம்பர் – 2014
தாள்	:	TNPL 18.6 Kg
நூல் அளவு	:	21 x 14 cm
பக்கங்கள்	:	172
படிகள்	:	500
எழுத்து	:	12
அச்சிட்டோர்	:	சிவகாசி பிரஸ், ரயிலடி, தஞ்சாவூர். 9025 709672.
புத்தகக்கட்டு	:	மல்டிகலர் ஆர்ட் போர்டு
பொருள்	:	சிற்றிலக்கியம்
விலை	:	ரூ.150

வெளியீட்டாளர் முகவுரை

தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி என பன்மொழிச் சுவடிகள் நிறைந்த கருத்துக் கருவூலமாகவும், அறிவுத் திருக்கோயிலாகவும் விளங்குவது தஞ்சையில் அமைந்து பன்னெடுங்காலமாக செயல்பட்டு வரும் சரசுவதி மகால் நூலகம் ஆகும். இந்நூலகம் உலகின் மிகச் சிறந்த நூலகங்களில் ஒன்றாகும்.

இதன்கண் உள்ள தமிழ்துறையில் மருத்துவம், இலக்கியம், இலக்கணம், சோதிடம் உள்ளிட்ட துறைகளில் 7,700க்கும் மேற்பட்ட தலைப்புகளில் தமிழ்ச்சுவடிகள் உள்ளன. அவைகளிலிருந்து பல்வேறு பொருண்மைகளில் 200 க்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளன. அவ்வகையில் இந்நூலகத்தில் அமைந்த சிற்றிலக்கியச் சுவடி நூலான **அறப்பளீசுர சதகம்** என்னும் நூல், நூலகத்தின் தமிழ்ப் பண்டிதர் மணி.மாறன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று 559 வது வெளியீடாக வெளிவருகின்றது. 18 ஆம் நூற்றாண்டில் அம்பலவாணக் கவிராயர் என்ற பெரும் புலவரால் இயற்றப்பெற்ற சிறந்த நீதி நூலாக விளங்குவது அறப்பளீசுர சதகம் ஆகும். இதில் பல உயர்ந்த நன்னெறிகள் கூறப்பெற்றுள்ளன. அவற்றில் ஒன்றாக,

செய்ந்நன்றி மறவாத பேர்களு மொருவர்செய்
தீமையை மறந்த பேருந்
திரவியந் தரவரினு மொருவர்மனை யாட்டிமேற்
சித்தம்வை யாத பேரும்
கைகண் டெடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொருளாளர்
கையிற் கொடுத்த பேருங்
காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி
காத்தருள் செய்கின்ற பேரும்
பொய்யென்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகலாத நிலைகொள் பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
பொய்மையுரை யாத பேரும்

ஒருவர் செய்த உதவியை மறவாதவரும், ஒருவர் செய்த தீமையை மறந்தவர்களும், பொருளைக்கொடுத்தாலும், பிறர் மனைவியின்பால் மனத்தைச் செலுத்தாதவர்களும், கையிலே கண்டெடுத்த பொருளைப் பொருளுக்கு உரியவரிடம் கொண்டு போய்க் கொடுத்தவர்களும், உலகில் ஒருவர் செய்த அறம் கெடுதலுறாமல் காப்பாற்றுகின்றவரும், நிலையற்ற செல்வத்தைக் கோடிக்கணக்கில் ஒருவர் கொடுத்தாலும், அழிவழக்குக்கூறாத நிலையுடையவரும், உலகத்திலே தலையே போகும் என்றாலும் கனவிலேயும் பொய் கூறாதவரும், இத்தகையோர்கள் யாவரையும் இவ்வுலகில் அழகிய நன்மக்கள் என்று உலக மாந்தர் மனம் களிப்பார்கள் என்பதாக இப்பாடல் கூறுகின்றது.

இத்தகு சிறப்புமிக்க நீதிக்கருத்துக்கள் கொண்ட இந்நூலினைப் பாடல், அதன் பொருள் விளக்கம் என்று கூறியதோடு நில்லாமல் பாடல் எழுந்த கொல்லிமலையின் வரலாறு, சதக இலக்கியத்தின் வரலாறு, இதுவரை வெளிவந்துள்ள சதக நூல்களின் பட்டியல் இலக்கியத்தில் கொல்லி குறித்த குறிப்புகள் போன்றவற்றை நன்முறையில் பதிப்பித்து வழங்கிய நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. **மணி.மாறன்** அவர்களைப் பாராட்டுகின்றேன்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் சிறப்புற வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. **ம. சங்கரநாராயணன்** B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்** M.A., B.Lit., M.L.I.S., Ph.D., அவர்களுக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் **என். சுப்பையன்** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
20.09.2014

பதிப்பாசிரியர் உரை

தமிழில் சிற்றிலக்கியங்கள் பல தரத்தின, வகையின, காலத்தன. இவ்வகை இலக்கியங்களைப் பிரபந்தங்கள் என்றும் அவைகள் தொண்ணுற்று ஆறு வகைப்படும் என்றும் சான்றோர் வகுத்துள்ளனர். அவற்றுள் ஒன்று சதகம் எனப்படும். சதகமானது நூறு பாடல்களைக் கொண்டதாகும்.

அறப்பளீசுர சதகம் என்னும் இந்நூலானது கொல்லி மலையில் அமைந்துள்ள அறப்பள்ளி ஈசுவரன் மேல் அம்பலவாணக் கவிராயர் எனும் புலவர் பெருமானால் பாடப்பெற்ற நூறு பாடல்களைக் கொண்ட நூலாகும். இந்நூல் எழுந்த காலம் பதினெட்டாம் நூற்றாண்டு ஆகும். இந்நூலின் ஆசிரியர் சீர்காழி அருணாசலக் கவிராயரின் மகனாவார். இது தவிர நூலாசிரியர் குறித்த விரிவான செய்திகள் ஏதும் அறிய இயலவில்லை.

இந்நூல் சிறந்த ஒரு நீதி இலக்கியமாகத் திகழ்கின்றது. ஒரு நல்ல ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும். சிறந்த மாணவன் எப்படி திகழ வேண்டும். ஒரு நல்ல நகரம் எவ்வாறு அமைதல் வேண்டும். நல்ல அரசும், அதற்கு ஆலோசனை வழங்குபவர்களும் எவ்வாறு இருக்க வேண்டும். உடன் பிறப்பு என்பவர் எப்படி தியாக உள்ளத்தோடு திகழ வேண்டும். பொருள் சேர்க்கும் வழிமுறையானது எப்படி நல்வழியில் அமைய வேண்டும். நல்லோர்களின் இயல்பினையும், வாழ்க்கை நிலையாமை யையும், வறுமையின் கொடுமை, நல்வினை, தீவினை செய்தோர் குறித்தும், ஒரு சிறந்த மருத்துவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்தும் சிறந்த பல கருத்துக்களை தன் பாடல்கள் வழி மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது சிறப்பாக அமைந்துள்ளது.

வணிகர்கள், வேளாளர்கள், படைத்தலைவர்கள், அமைச்சர்கள் போன்றோரின் சிறப்புப் பற்றிக் கூறும் கருத்துக்கள் சிறப்பாக அமைந்துள்ளன. கோபம் எவ்வாறு துயரத்தை உண்டாக்கும் என்பதனையும் வலியுறுத்திப் பாடியுள்ளார். சிவமூர்த்தங்கள் பற்றியும், திருமாலின் அவதாரங்கள் பற்றியும் பாடியுள்ளார்கள்.

ஒரு சில பாடல்களில் பெண்கள் குறித்துக் கூறியுள்ள கருத்துக்கள் இன்றைய உலகில் ஏற்புடையதாக இல்லை. அவர் வாழ்ந்த காலத்தில், அவருக்கு உண்டான அனுபவத்தில் இக்கருத்துக்களை கூறியிருக்கலாம்.

இந்நூலினை நூலகத்தில் உள்ள ஏட்டுச் சுவடியினைக் கொண்டும், முன்னர் பதிப்பித்து வெளிவந்த நூல்களை ஒப்பு நோக்கியும், மூலச் சுவடியின் வழி பாடல்களை சரிசெய்தும், பாடல் பொருள் விளக்கம் போன்ற வற்றுடன், சதகம் பற்றியும், சதக நூல்களின் பட்டியல் அளித்தும், கொல்லிமலையின் சிறப்புக்கள் பற்றியும், இலக்கியங்களில் காணப்படும் கொல்லிமலை குறித்த செய்திகளைத் தொகுத்தும் திருந்திய பதிப்பாக செவ்வனே பதிப்பித்து உள்ளேன். சிறந்த ஒரு நீதி நூலான அறப்பளீசுர சதகத்தை சரசுவதி மகால் நூலகம் வெளியிடுவது சிறப்பிற் குரிய ஒன்றாகும். கற்றறிந்த பெரியோர்கள் இந்நூலினை வாங்கிப் படித்துப் பயன்பெறுவதோடு, இதன்கண் உள்ள குற்றங்குறைகளைப் பொறுத்தருளவும் வேண்டுகிறேன்.

அறப்பளீசுர சதகம் சுவடி நூலினைப் பதிப்பித்து வெளியிட அன்புடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நூலக இயக்குநர் டாக்டர் **என். சுப்பையன்**, இ.ஆ.ப., அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் வெளிவரத் துணைநின்ற மாவட்ட ஆட்சித்தலைவரின்

நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் நூலக நிருவாக அலுவலர் (பொ.) ம. சங்கரநாராயணன் B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கணினியில் தட்டச்சு செய்தளித்த நூலகப் பணியாளர்கள் V. பார்வதம், காப்பி பிரிண்டரில் அச்சிட்டளித்த G. ரவி, மெய்ப்புத் திருத்தம் செய்து உதவிய சமஸ்க்ருத பண்டிதர் எல். அனிதா மற்றும் முனைவர் பட்ட ஆய்வு மாணவி கோ. பிரியா ஆகியோருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும், என் உள்ளம் நிறைந்த நன்றிகள்.

தஞ்சாவூர்
20-09-2014

மணி. மாறன்,
தமிழ்ப் பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

பொருளடக்கம்

வ.எண்	பொருள்		பக்கஎண்
1.	சதகங்கள்	-	1
2.	அறப்பளீசுர சதகம்	-	8
3.	சதக இலக்கியம் - பட்டியல்	-	13
4.	கொல்லி மலை	-	20
5.	கொல்லியின் வரலாறு	-	21
6.	உயர் பிறப்பு	-	28
7.	இல்லாளின் சிறப்பு	-	30
8.	நன்மக்கட்பேறு	-	31
9.	சகோதரொருமை	-	32
10.	சற்குருவியல்பு	-	33
11.	நன்மாணாக்கரியல்பு	-	34
12.	பொருள் செயல்வகை	-	35
13.	தீயவழி விலக்கு	-	36
14.	ஒன்றற்கொன்றழகு செய்வன	-	37
15.	ஒன்றில்லாமையால் பயன்படாதவை	-	39
16.	ஒன்றர்க்கொன்று தகாத சேர்க்கை	-	40
17.	குணக்கேடர் இயல்பு	-	44
18.	செய்யத்தக்கவை	-	45
19.	மேன்மேலும் முயற்சி	-	46
20.	செயற்கருஞ் செயல்	-	47
21.	நல்லோர்	-	49
22.	நல்லோர்	-	50

23.	இல்லை	-	51
24.	நிலையாமை	-	52
25.	திருமகள் இருப்பிடம்	-	53
26.	மூதேவி இருப்பிடம்	-	54
27.	இருநிலையினும் பயனற்றவை	-	55
28.	குறைந்தாலும் பயன்படல்	-	56
29.	இதற்குதவி செய்வது இதுவெனில்	-	58
30.	இதனைக் கண்டு மகிழ்வது இதுவெனல்	-	59
31.	ஆகாதவை	-	60
32.	நற்குணங்களுக்கு இடமாகாதவர்	-	61
33.	இதனால் இன்ன முறையனாம் எனல்	-	63
34.	அவரவரிடத்து நடக்குமுறை	-	64
35.	குணத்தைவிட்டுக் குற்றத்தை ஏற்றல்	-	66
36.	குணங்காணும் குறி	-	67
37.	கூடிற் பயன்படல்	-	68
38.	வெற்றியிடம்	-	69
39.	ஒன்றில்லாமையாற் பாழ்படல்	-	70
40.	மூடர்களில் உயர்வு தாழ்வு	-	72
41.	இதற்கிது வேண்டுமெனல்	-	73
42.	வறுமையின் கொடுமை	-	74
43.	இழிவு	-	75
44.	மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்	-	77
45.	தேவர்கள் காலவளவை	-	78
46.	தூய்மை	-	79

47.	அடங்காதவற்றை அடக்கும் வழி	-	80
48.	ஒளியின் உயர்வு	-	81
49.	குணங்குற்றமாதல்	-	82
50.	தாழ்வும் உயர்வுபெறும்	-	83
51.	நல்வினை செய்தோர்	-	84
52.	தீவினை செய்தோர்	-	87
53.	நன்னகர்	-	88
54.	தீ நகர்	-	89
55.	முழுக்கு நாள்	-	90
56.	மருத்துவன்	-	92
57.	உண்மையுணர் குறி	-	93
58.	பிறவிக்குணம் மாறமை	-	95
59.	ஊழ் வழி	-	96
60.	ஒப்புயர் வில்லாமை	-	97
61.	வீணர்	-	98
62.	உதவியின்றிக் கெடுவன	-	100
63.	இவையே போதுமெனல்	-	101
64.	அரியராவோர்	-	102
65.	கற்பு மேம்பாடு	-	103
66.	கோடியுடுக்கும் நாள்	-	104
67.	சகுனம்	-	105
68.	சகுனம் -2	-	106
69.	சகுனம் -3	-	107
70.	உணவில் விலக்கு	-	109

71.	நற்பொருளிற் குற்றம்	-	110
72.	மனை கோல்வதற்கு மாதம்	-	111
73.	விருந்து வாரம்	-	112
74.	பூப்பு வாரம்	-	113
75.	பூப்பு லக்கினம்	-	114
76.	தீவுங் கடலும்	-	116
77.	மாணிக்கங்கள்	-	117
78.	உண்டியிலையும் முறையும்	-	118
79.	கவிஞர் வறுமை	-	119
80.	கவிஞன்	-	120
81.	நற்சார்பு	-	122
82.	பிறந்தநாளுடன் வரும் வாரத்தின் பலன்	-	123
83.	ஏது ?	-	124
84.	மழைநாள் குறிப்பு	-	125
85.	இருந்து முதவாமை	-	126
86.	மறையோர் சிறப்பு	-	127
87.	அரசர் சிறப்பு	-	129
88.	வணிகர் சிறப்பு	-	130
89.	வேளாளர் சிறப்பு	-	131
90.	தானாபதி மந்திரி சேனாபதிகளின் இயல்பு	-	132
91.	அரசவைக் கணக்கர்	-	133
92.	கோபத்தின் கொடுமை	-	134
93.	பல்துறை	-	135
94.	தத்துவத் திரயம்	-	137

95. மன்மதபாணமும் அவற்றின் குணங்ளும் - 138

96. மன்மதனுபகரணங்கள் - 139

97. பகை கொளத் தகாதவர் - 140

98. இதாகிதஞ்செய்து பயன்கொள்வன - 141

99. தருமம் - 142

100. இல்லறம் - 143

101. புராணம் - 144

102. புகழ்ச்சி - 146

103. திருமாலவதாரம் - 147

104. சிவமூர்த்தி - 148

105. கவி வணக்கம் - 159

106. சங்க இலக்கியங்களில் கொல்லி - 150

சதகங்கள்

சதகம் என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். சதம் என்ற பெயருடன் க எனும் எழுத்துப் பேருகொண்டு அமைந்ததாகும். இது போல எழுத்தைப் பெற்று கூட்டியுரைத்தலை வடமொழியாளர் பிரத்தியயம் என்பர். இயல்பாக நூறு செய்யுட்களால் அமைய வேண்டிய சிற்றிலக்கியம் சதகம் ஆகும். இலக்கண விளக்கம் என்னும் பாட்டியல் நூல் சதகத்தின் செய்யுள் எண்ணிக்கையை விளையும் ஒரு பொருள் மேலொரு நூறு, தழைய வுரைத்தல் சதக மென்ப என்னும் நூற்பாவால் வரையறை செய்துள்ளது.

ஆனால் பிற்காலத்தில் புலவர்கள் சதகத்தின் பாடுபொருளை வரையறை செய்யாமல் பலவாகக் கண்டு பாட முற்பட்டனர். அந்நிலையில் புலவர்களின் அவ்வக்காலத்து உள்ள நிலைக்கேற்பச் செய்யுட்களின் எண்ணிக்கையைக் கூட்டியும் குறைத்தும் சதகம் பாடியுள்ளனர். சில சதகங்கள் காப்புச் செய்யுள் இல்லாமல் இறுதியில் அமைந்த வாழ்த்துச்செய்யுளுடன் நூறு பாடல்களைக்கொண்டு விளங்குகின்றன. கைலாசநாதர் சதகம் முதலிய சிலவற்றுள் காப்புச் செய்யுளும், வாழ்த்துச் செய்யுளும் இல்லாமல் நூறு செய்யுட்கள் உள்ளன. தண்டலையார் சதகம், குருநாத சதகம், சிவசங்கர சதகம் போன்றவற்றில் இரண்டு செய்யுட்கள் காப்புச் செய்யுளாக அமைந்துள்ளது.

சிவசங்கர சதகம், கோகுல சதகம், கோவிந்த சதகம், குருநாத சதகம் போன்ற நூல்களில் நூற்றிரண்டு செய்யுட்கள் உள்ளன. அண்ணாமலை சதகம், தண்டலையார் சதகம், ஜெயங்கொண்டார் சதகம் போன்றவற்றில் அவையடக்கமாக ஒவ்வொரு செய்யுள்

இடம்பெற்றுள்ளது. பழமொழியுடன் இணைத்துப் பாடப் பெற்ற தண்டலையார் சதகத்தில் மிகுதியாக ஒன்பது பாடல்கள் உள்ளன. இவை இடைச் செருகலாக இருக்கலாம் என்கிற கருத்து உண்டு.

மக்களின் நல்வாழ்விற்குத் தேவையான நீதிகளையும், அறநூல் கருத்துக்களையும், ஒழுக்கக் கூறுகளையும் வழங்கி அவர்களை நன்கு வாழச் செய்வதே சதக இலக்கியம் ஆகும். மக்கள் உணர்வில் பதியும்படி அறம் பொருள்இன்பம் வீடு பற்றிய செய்திகள், அகம், புறம் பற்றிய செய்திகள் சதக இலக்கியங்கள் வழியாகக் கூறப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் சதகம் என்ற பெயரில் எந்த நூலும் தோன்றவில்லை. பக்தியிலக்கிய காலத்தில் நூறு பாடல்களுடன் கூடிய திருச்சதகம் பாடிய பெருமை மாணிக்கவாசகருக்கு உண்டு. இந்நூலும் இக்காலத்தில் அமைந்துள்ள சதகப்பொருளோ, அமைப்போ கொண்டதாக இல்லை. அந்தாதி அமைப்புடன் பத்து பத்து பாடல்கள் ஒரு பகுதியாக ஒரு யாப்பில் அமைந்துள்ளது. இதனுள் இறைவன் மாணிக்கவாசகரைப் பத்து வகையாகக் காத்து அருளி அடிமை கொண்ட அருள் அனுபவம் விளக்கம் பெறுகிறது. மாணிக்கவாசகர் பாடிய திருச்சதகம் போன்று பிற அருளாளர்கள் பாட முன் வரவில்லை.

கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் எழுந்த கார் மண்டல சதகம் தமிழில் முழுவளர்ச்சி பெற்ற சதகமாக கருதப் பெற்றது. இந்நூல் மண்டல சதக வகையாக அமைந்து, பிற்காலத்தில் தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், பாண்டிய மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் போன்ற நூல்கள் தோன்றக் காரணமாயிற்று. மண்டலத்தின் பல்வேறு சிறப்புக்களை மண்டல சதகங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வடமொழியிலும் சதகம் என்னும் இலக்கிய வகை அமைந்துள்ளது. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் எழுந்த பர்த்ருஹரியின் சதகங்கள் புகழ் பெற்றவையாகும். அவை தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. வைராக்கிய சதகம், நீதிசதகம், சிருங்கார சதகம் போன்றவை சதக இலக்கியத்தின் பொருட்பன்மையை உணரத் துணை புரிகின்றன.

இறைவனை வணங்குவதிலும், வாழ்வியல் அறங்களை வகுத்து வழங்குவதிலும், வரலாற்றை உரைப்பதிலும் சதக இலக்கியம் மற்ற இலக்கிய வகையினின்றும், மாறுபட்டுத் தனிச்சிறப்பு கொண்டது. பாடல்கள் சதக நூல் தலைப்பைத் தம்முள் தாங்கி நிற்பது என்பது குறிப்பிடத்தகுந்த சிறப்பியல்பாகும். செய்யுள்தோறும் ஒரு மகுட அமைப்பு விளங்குவதைக் காணலாம். ஏதேனும் ஒரு மண்டலத்தின் பெயரையோ, ஒரு தெய்வத்தின் பெயரையோ சதக நூல்கள் பெரும்பாலும் தம் மகுடமாகப் பெற்றுள்ளன. காட்டாகக் குமரேச சதகத்தில் 'மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு, மலைமேவு குமரேசனே!' என்று வருதலையும், கார் மண்டல சதகத்தில் "காராளர் மண்டலமே" என்று வருதலையும் குறிப்பிடலாம்.

இத்தகு பொதுவிதிக்கு உட்படாமலும் ஓரிரு நூல்கள் வழக்கில் உள்ளன. உதாரணத்திற்கு "வந்தடிமை கொண்ட கயிலை வாசனே பிராகலிங் கேசனே சிவதை நகர், மாணிக்க மலைநாதனே" என்னும் மகுடம் அமைந்திருந்தும் ஒரு சதகம் திருத்தொண்டர் சதகம் என்ற பெயர் பெற்றுத் திகழ்கிறது.

மகுட அமைப்பில் இறைவன் பெயருடன் தம்மை ஆதரித்துப் போற்றிய வள்ளல் பெயரையும் இணைத்துப் புலவர்கள் பாடும் மரபு உண்டு. அறப்பளீசுர சதகம்

திருவேங்கட சதகம், அண்ணாமலை சதகம் முதலியன இவ்வாறான போக்கில் அமைந்துள்ளன. அண்ணாமலை சதகத்தை அண்ணாமலையார் சதகம் என்றும் வசந்தராயச் சதகம் என்றும் குறிப்பிடுவர்.

சதகங்களை வகைப்படுத்தி மண்டல சதகங்கள், அறச் சதகங்கள், வாழ்த்துச் சதகங்கள், கதைச் சதகங்கள், சிருங்காரச் சதகங்கள், வைராக்கிய சதகங்கள் ஆகிய பகுப்பில் அடக்கலாம்.

மண்டல சதகங்கள் வரலாற்றிற்கு மிகவும் துணை புரிவனவாகும். சில சதகங்களின் வழியாக நாட்டின் எல்லைகளை அறியலாம். மண்டலங்களைப் போற்றிச் சதகம் பாடும் புலவர் பெருமக்கள் தம் நாட்டுப்பற்று மிகுதியால், அம்மண்டலங்களில் தோன்றிய பெரும் புலவர்களையும், அருளாளர்களையும் இயைபுடன் குறித்துச் சென்றுள்ளனர்.

கொங்கு மண்டலத்தில் நிரம்பை என்னும் ஊரில் தோன்றிய சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரைப் போற்றி, "அடியார்க்கு நல்லார் அவதரித்த அருமைப் பொழில் நிரம்பைப் பதியுங் கொங்கு மண்டலமே " என்று நூலின் ஆசிரியர் கார்மேகக் கவிஞர் பாடியுள்ளார்.

திருவீழி மிழலையில் வற்கடம் ஏற்பட்ட காலத்தில் அப்பரும், திருஞானசம்பந்தரும் இறைவனிடம் படிக்காசு பெற்று, வாடிய மக்களின் பசிதீர்த்த வரலாற்றினைச் சோழ மண்டல சதகத்தில் ஆத்மநாத தேசிகர், "கன்னி பாகர் வீழியினிற் கனிவா யப்பர் சம்பந்தர்க் கன்ன தானஞ் செய வேண்டி யளித்த படிக்காசு" என்று பாடியுள்ளார். திருச்செங்கோடு சென்ற திருஞானசம்பந்தர் அங்குத் தம் அடியார்களின் குளிர் சுரத்தினைப் போக்கியருளியதைக்

கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகின்றது. சேக்கிழார் பற்றிய குறிப்புக்களையும் சதக இலக்கியங்களில் காண முடிகின்றது.

சோழன் வீரநாராயணன் தில்லையம்பலத்தில் பொன் வேய்ந்ததையும், தன் பெயரால் வீரநாராயணன் ஏரியை (வீராணம் ஏரி) உண்டாக்கியமை பற்றிய குறிப்பும் கார் மண்டல சதகம் கூறுகிறது "மாவீர நாரா யணப்பெரு மன்னன் பொன் மன்றழகு. மாவீர மாச்செயப்பொன்னும் வழங்கி மலிதடநீர், மாவீர நாராயணப் பெயர் மன்ன வகுத்தனன்" என்று பாடப் பெற்றுள்ளது. கார் மண்டல சதகத்தில் சோழ மன்னர்கள் பலரைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

அம்பலவாணக் கவிராயர் பாடிய இந்நூலான அறப்பளீசுர சதகம், படிக்காசு புலவர் பாடிய தண்டலையார்சதகம், நாராயண பாரதி பாடிய திருவேங்கட சதகம், குருபாததாசர் பாடிய குமரேச சதகம் போன்றவை திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு போன்ற அறநூல்கள் அல்லது நீதி இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியற் கருத்துக்களைத் தாங்கி எழுந்தன. இவை எளிய, இனிய நடையில் அமைந்து மக்கள் நெஞ்சத்தைக் கவர்ந்தன. உலகியல் கூறும் அறச் சதகங்களில் ஆசாரக்கோவையின் செல்வாக்கும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நீதிகளையும், சீலங்களையும் நேரடியாகக் கூறுவது ஒரு புறமிருக்க, அவற்றை எளிய கதைகளின் வாயிலாக மக்களுக்கு உணர்த்தும் உத்தியும் சதகங்களில் உண்டு. சீலமுடைய வாழ்வினால் உடல் நலமும் உள்ளத்து நலமும் பெறலாம் என்று குமரேச சதகம் கூறுகின்றது. கீழைச் சீவல்பட்டி முத்தப்பச் செட்டியார் பாடிய ஜெயங்கொண்டார் சதகம் பழமொழிகளுக்கேற்ற நீதிக்கதைகளை நயம்படக் கூறுகின்றது.

இராமாயணம், மகாபாரதக் கதைகளில் வரும் சுவையான நிகழ்ச்சிகளையும், பெரிய புராணம் போன்ற பல புராணங்கள் கூறும் அரும் பெரும் கருத்துக்களையும் மற்றும் இதிகாசங்கள், புராணங்கள் பெயரிலும் சில சதகங்கள் எழுந்துள்ளன. மக்களிடையே பக்தி நெறி வளர்க்கும் நோக்குடன் எழுந்த சதகங்களில் கடவுளின் பல்வேறு இயல்புகளும் பெருமைகளும் பல படப் பாராட்டப் படுகின்றன. இதுபோன்ற துதி நூல்களாக குருநாத சதகம், அவையாம்பிகை சதகம், அருணாசல சதகம், சிவசங்கர சதகம் போன்றவை அமைந்துள்ளன.

தெய்வங்களைத் துதிக்க முற்பட்ட புலவர்கள் காலப்போக்கில் தமக்கு உதவி புரிந்த புரவலர்களை நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்து அவர்களுடைய பெயர்களையும் இணைத்துப் பாட முனைந்தனர். இதற்கு எடுத்துக்காட்டாக அண்ணாமலை சதகம், அறப்பளீசுர சதகம் ஆகியவற்றைக் கூறலாம்.

சைவம், வைணவம், கௌமாரம், சாக்தம், காணாபத்யம் போன்ற இந்து மதத் தொடர்புடைய சதகங்கள் பல தோன்றியுள்ளன. யாழ்ப்பாணம் அருணாசலம் சதாசிவம் பிள்ளை இயற்றிய இயேசுநாதர் திருச்சதகம் கிறித்துவ மதம் சார்ந்ததாகும். அப்துல் ரகுமான் இயற்றிய அரபிச் சதகம், முகமது சுல்தான் இபின் அகமது இயற்றிய சீறாச் சதகம் ஆகியவை இசுலாமிய சமயம் சார்ந்து எழுந்தவையாகும். கா.மு. சுந்தர முதலியார் காந்திய நெறியை மக்களுக்கு உணர்த்த வேண்டி காந்தி சதகம் படைத்துள்ளார்.

சதகங்கள் மக்கள் வாழ்வியலோடு தொடர்புடைய கருத்துக்களைக் கூற முனைந்ததால் அவை தனித் தமிழைப் பின்பற்றி எழவில்லை. பேச்சு வழக்குச் சொற்களோடு, இனிய எளிய தமிழ்ச் சொற்களும், வடமொழிச் சொற்களும் சதகங்களில் கையாளப்பட்டமை காலத்தின் தேவையாகும். நூல் நுவல் பொருள்களை ஒரே

யாப்பில் பாடிச் செல்வதைக் காணலாம். ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை என்பன பெரும்பாலான சதகங்களில் யாப்பாகும். நூலின் முன் பாயிரம், கடவுள் வணக்கம், அவையடக்கம் என்னும் பகுதிகள் சில வெண்பாக்களால் அமையும். பெரும்பாலும் மண்டல சதகங்கள் கட்டளைக் கலித்துறையாகவும், இறைவாழ்த்துச் சதகங்கள் கலிவிருத்தமாகவும், உலகியல் அறிவுரைக் கூறும் சதகங்கள் ஆசிரிய விருத்தமாகவும் அமைந்துள்ளன. உலகியல் கருத்துக்கள் விரிவாகவும், விளக்கமாகவும் கூற வேண்டியிருத்தலால், ஆசிரிய விருத்தங்கள் அறுசீர், எண்சீர் , பன்னிருசீர் எனப்பெருகி அமைகின்றன. உவமை, உருவகம் முதலிய பல அணிகள் சதகங்களின் நூல் நயத்தை மிகுதிப் படுத்துகின்றது.

திருவேரகத்தின் வளத்தினையும், உமையம்மையின் புதல்வன் திருமுருகனின் எழிலார்ந்த தோற்றத்தினையும் கற்பனைச் சுவைபடக் கார் மண்டல சதகத்தின் கவிஞர் படைத்துள்ளது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். புலவர்களின் சிறந்த கற்பனை ஆற்றல் சதகங்களில் இழையோடுகிறது. திருமுருகன் ஒரு பக்கத்தில் பிடியையும் (தேவயானையையும்), மற்றொரு பக்கத்தில் கொடியையும் (வள்ளியையும்) அணைத்துக்கொண்டு காட்சியளிக்கின்றான். ஐராவதம் என்ற யானையால் வளர்க்கப்பட்ட இந்திரன் மகளாகிய தேவயானை பிடி என்று உருவகிக்கப்பட்டமையும், வள்ளிக்கிழங்கு அகழ்ந்தெடுக்கப்பெற்ற குழியில் மான் ஈன்ற மகள் வள்ளிக்கொடி என்று உருவகிக்கப்பட்டமையும் சிறந்த கற்பனைத் திறனாகும். அனைத்துச் செய்யுள் நலங்களையும் தாங்கி, உலகியலுக்கும் அருளியலுக்கும் வேண்டிய செய்திகளைக் கொடுத்து சதக இலக்கியங்கள் மக்களின்வாழ்வியல் இலக்கியங்களாக மலர்ந்து மணம் பரப்பி வருகின்றன.

அறப்பளீசுர சதகம்

தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் உள்ள குன்றுத்தொடர் கொல்லி மலை ஆகும். இப்பகுதி சங்க காலத்திலேயே சிறப்புற்று இருந்தது. சங்கப் பாடல்கள் இம்மலை பற்றிப் பேசுகின்றது. இந்த மலைத்தொடரின் நீளம் சுமார் 27 கி.மீட்டராகும். ஆத்தூர், நாமக்கல் வட்டங்கள் வழியாக இத்தொடர் செல்கின்றது. கொல்லிமலைத் தேன் மிகவும் பெயர் பெற்றது. இம்மலையில் வாழும் மக்கள் மலையாளிப் பழங்குடி மக்களாவர். இவர்கள் பல்வேறு மலைகளில் வாழ்வதால் இம்மலை மக்கள் கொல்லி மலையாளிகள் என்றழைக்கப்படுகின்றனர். ஒரு காலத்தில் இவர்கள் காஞ்சியிலிருந்து குடியேறியவர்கள் ஆவர்.

கொல்லிமலையின் மேற்குப் பக்கத்தில் இடம் பெறும் தெய்வம் கொல்லிப்பாவை என்பதாகும். "வல்லவன் தைஇய பாவைகொல்" "தெய்வம் எழுதிய வினைமாண் பாவை" என்னும் சங்க இலக்கியத் தொடர்களால் இப்பாவை தெய்வத் தச்சனால் இயற்றப் பட்டது என்பதை அறியலாம்.

இப்பாவை கரிய கண்களைக் கொண்டது. புதுமையான நடைகொண்டு இயங்கும் தன்மையது. எவராலும் பெறுதற்கரிது. பலர்புகழும் வடிவழகினைக் கொண்டது. இப்பாவை சிரித்துத் தன்முன் வந்தாரைக் கொல்லும் ஆற்றல் வாய்ந்தது. இப்பாவையைக் கண்டவர்கள் காமநோய் கண்டு நெஞ்சம் கலங்கி மயங்கி வீழ்ந்து உயிர் விடுவர். சங்கப் புலவர்கள் தம் இலக்கியத் தலைவியரின் அழகினைக் கொல்லிப் பாவையின் அழகோடு உவமித்துக் கூறுவதைக் காணலாம்.

சங்க நூல்களான நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற

வற்றிலும், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களிலும், பிற்கால நூல்கள் பலவற்றிலும் கொல்லிப்பாவை குறித்த செய்திகள் காணப்படுகின்றது. கொல்லிப்பாவை பாவை என்ற சொல்லாலேயே புலவர்களால் வழங்கப்படுகின்றது.

இத்தகு சிறப்பு மிக்க கொல்லிமலைச் சாரலிலுள்ள சதுரகிரியாகிய திருத்தலத்தே அறப்பள்ளி என்னும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஈசன் மீது பாடப்பெற்ற நூறு பாடல்களைக் கொண்ட பிரபந்தமே கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் எழுந்த அறப்பளீசுர சதகம் என்னும் நூலாகும்.

அறப்பளீசுர சதகம் என்பது சதுரகிரி என்னும் திருப்பதியிலுள்ள அறப்பள்ளி என்னும் திருக்கோயிலி ல் எழுந்தருளி உள்ள சிவபெருமானை வாழ்த்தும் முறையில் உலகியலைப் பற்றிக் கூறும் நூறு செய்யுள் கொண்ட நூல். அறப்பள்ளி + ஈசுவரன் = அறப்பளீசுரன் அறப்பள்ளியில் எழுந்துள்ள ஈசுரன்: ஏழாம் வேற்றுமைத்தொகை. அறப்பளீசுரன் + சதகம்= அறப்பளீசுரனது சதகம் ஆறாம் வேற்றுமைத்தொகை. ஆகவே மூன்று சொற்களும் இரண்டு சந்திகளும் கொண்ட தொடர் அறப்பளீசுர சதகம்.

> விளையும் ஒரு பொருள்மேல் ஒரு நூறு
> தழைய வுரைத்தல் சதகம் என்ப - இலக்கண விளக்கம்

ஒருபொருளென்பது அகப்பொருள் புறப்பொருள் இதில் ஒன்றைக் குறிக்கும். இந்நூல் புறப்பொருளைப்பற்றியது. புறப்பொருள் ஆவது மக்களின் வீரம், கொடை, ஒழுக்கம் முதலியவற்றைக் குறிக்கும்.

அறப்பளீசுர சதகத்தை இயற்றியவர் அம்பலவாணக் கவிராயர் ஆவார். ஆதலின் இந்நூலின் இறுதிச் செய்யுளில் 'அம்பலவாண கவிராயனாகும்' எனத் தம்மைக் குறிக்கிறார். இவர் சோழ நாட்டில் தில்லையாடி எனும்

ஊரில் வேளாளர் குலத்தில் சுமார் முந்நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்து, சீர்காழியில் தங்கியிருந்து இராம நாடகம் பாடிய புகழ்பெற்ற அருணாசலக் கவிராயரின் மூத்த புதல்வர் ஆவார்.

நல்ல புலமையும், உலகியல் அனுபவமும், இறைபக்தியும் கொண்டவராக விளங்கியமையால் இப்புலவர் பெருமகன் தான் படைத்த இச்சதகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "அனுதினமும் மனதில் நினைதரு சதுர கிரிவளர் அறப்பளீசுர தேவனே" என்று மகுடம் அமைத்துள்ளார்.

இந்நூலின் முடிவு தோறும்.

"அருமை மதவேள் அனுதினமும் மனதில்நினை
தருசதுர கிரிவளர் அறப்பளீ சுரதேவனே" எனவும்,

முதல் செய்யுளில்,

'மோழைபூ பதிபெற்ற அதிபன் எமதருமை
மதவேள்' எனவும்,

மூன்றாவது செய்யுளில்,

"நீதி சேர் அரசன் எமதருமை மதவேள்" எனவும்,

ஏழாவது செய்யுளில்,

"கங்கா குலத்தலைவன் மோழைதரும் அழகன்
எமதருமை மதவேள்" எனவும்,

பத்தாவது செய்யுளில்,

"கற்பதரு வாகுமெமதருமை மதவேள்" எனவும்,

நாற்பத்தேழாவது செய்யுளில்,

"அவனிபுக ழருமை மதவேள்" எனவும்,

எழுபத்து மூன்றாவது செய்யுளில்,

"ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலகன்
ஆகும் எமதருமை மதவேள்" எனவும்,

குறிப்பிட்டு இருப்பதால், இந்நூலை ஆதரித்தவர் வேளாளர் குலத்தைச் சேர்ந்த மோழை பூபதி என்பவரின் மகன் மதவேள் எனப்படுபவர் என்றும், அவர் சிறந்தவர் என்றும், கங்கை குலத்தவர் என்றும் அறியலாம்.

மதவேள் கொல்லிமலையில் உள்ள குண்டுணி நாட்டுத் தலைவராகிய கருமக் கவுண்டர் என்றும், இவரின் தந்தை மோழைக் கவுண்டர் என்றும் சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

நீதி கூறும் சதக இலக்கியங்களுக்கு இந்நூல் சிறப்பான முன்னோடியாகப் படைக்கப்பட்டுள்ளது. நல்லவை தீயவை உணர்ந்து முறையாக மக்கள் அறநெறிகளையும், நற்பண்புகளையும், பழக்க வழக்கங்கலளையும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் கொண்டு விளங்கினால் அதுவே தெய்வநல மாட்சிக்குரியது என்பது நூலாசிரியரின் கருத்து. எனவே தாம் பாடிய அறப்பளீசுர சதகத்தில் உயர் சிறப்பு. இல்லாளின் சிறப்பு, நன் மக்கட் பிறப்பு, உடன் பிறப்பு, நல்லாசிரியர் இயல்பு, நன்மாணாக்கர் இயல்பு, திருமகள் இருப்பிடம், கற்பு மேம்பாடு, நற்சார்பு முதலியவற்றையும், நால்வருணத்தார் இயல்புகளையும், முப்பத்திரண்டு அறங்களையும் முப்பொருள் உண்மைகளையும், புராணங்களையும், திருமாலின் அவதாரங்களையும், சிவமூர்த்தியின் பெருமைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சகுன பலன், முழுக்கு நாள், புத்தாடை அணியும் நாள், மனைகால் கொள்வதற்கு உரிய திங்கள், மாணிக்க இலக்கணம், மழை நாள் குறிப்பு, வறுமையின்

கொடுமை போன்ற செய்திகளையும் இச்சதக நூலில் பாடியுள்ளார்.

இந்நூல் நீதி நூலாக இருப்பினும் கவிதை நலமும் அமைய காணப்படுவது சிறப்பிற்குரிய ஒன்றாகும். மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்த சிவன் செயலையும், சுந்தரருக்காகப் பரவையாரிடம் தூது சென்ற சிவன் செயல் போன்ற புராணச் செய்திகளும் இந்நூலின் இடையிடையே கூறப்பெற்றுள்ளன. உடன்பிறந்தவர்களுக்கு நேர்ந்த வருத்தம், இன்பம், பொருள், புகழ், நிந்தை, பழிப்பு, தவம் முதலியவை தமக்கு நேர்ந்தவை போலக் கொள்ளுதல் வேண்டும் என்னும் நீதி கூறப் படுகிறது.

ஐந்து தலைப்பாம்பு தன் வாய்கள் ஐந்தாலும் ஏற்கும் உணவு ஒரே மிடற்றின் வழியாக ஒரே வயிற்றுக்குச் செல்வது போல உடன்பிறந்தார் ஈட்டுகின்ற செல்வம் ஒருங்கே பயன்படல் வேண்டும் என்று நூலாசிரியர் கூறுவது சிறப்பானதாகும். வடமொழிச் செல்வாக்கு மிகுந்து இருந்த காலத்தில் இந்நூல் எழுந்தமையால் வடசொற்கள் பலவற்றை இந்நூலினுள் காண முடிகின்றது. இலக்கிய வழக்குச் சொற்களே யல்லாமல் பேச்சு வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. திருக்குறள் கருத்துக்கள் பலவும் இந்நூலின்கண் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கின்றது.

இதுவரை தெரியவந்துள்ள சதக இலக்கியங்களின் அகரவரிசைப் பட்டியல்

நூற்பெயர்	ஆசிரியர்
அகத்தீசர் சதகம்	மத்தான் சாகிபு
அடைக்கலச் சதகம்	வயிரவநாதன் கவிராயர்
அண்ணாமலைச் சதகம்	திருச்சிற்றம்பல நாவலர்
அண்ணாமலையார் சதகம்	திருச்சிற்றம்பல நாவலர்
அபயாம்பிகை சதகம்	கிருஷ்ணையர்
அப்துல்ரகுமானீற்றகீம் சதகம்	மு. பவானிப்புலவர்
அரபிச் சதகம்	அப்துல் ரஹ்மான்
அருணாசல சதகம்	காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார்
அர்ச்தேவமாதாவின் சதகம்	கி.அ. பொன்னுசாமி முதலியார்
அவிநாசிக் கருணாம்பிகை சதகம்	வாசுதேவ முதலியார்
அழகம்மை சதகம்	அப்பாச்சாமி
அறப்பளீசுர சதகம்	அம்பலவாணக்கவிராயர்
ஆண்டவர் சதகம்	- -
ஆபத்சகாயர் சதகம்	ஆபத்சகாயஞ் செட்டியார்
இணுவில் சிவகாமியம்மைசதகம்	சி. சின்னத்தம்பிப் புலவர்
இயேசுநாதர் சதகம்	அருணாசலம் சதாசிவம்பிள்ளை
இயேசுநாதர் சதகம்	ஆணல்
இராமலிங்க சதகம்	சங்கரமூர்த்திப் புலவர்
இராமாயண சதகம்	கேசவ சுப்பராயச்செட்டியார்
இராமாயண சதகம்	முருகேசச்செட்டியார்
இலக்குமிகாந்த சதகம்	சீனிவாசய்யர்
ஈழமண்டல சதகம்	ம.க.வேற்பிள்ளை
உண்ணாமுலையப்பன் சதகம்	சின்னணாக்கவுண்டர்
உமாமயேசுர சதகம்	- -

உருக்குமாங்கதன் சதகம்	கு. சுப்பிரமணிய ஐயர்
எதிராஜ சதகம்	புதுவை இராமானுச நாவலர்
எம்பிரான் சதகம்	ஸ்ரீபெரும்புதூர் கோபாலகிருஷ்ணதாசர்
ஏகாம்பரநாதர் சதகம்	பாரதப்பிரசங்கம் இரகுநாதய்யர்
கஞ்சகிரி சித்தேசர் சதகம்	அனந்தநாராயண சர்மா
கடிகா சதகம்	கடிகாசதக அம்மான்
கதிர்காமச் சதகம்	கணபதிப்பிள்ளை புலவர்
கந்தபுராணச் சதகம்	முத்துக்குமாரதாசர்
கந்தபுராணச் சதகம்	சந்திரசேகர உபாத்தியாயர்
கந்தர் சதகம்	முத்து வைத்தியநாத பண்டாரம்
கருணாம்பிகை சதகம்	வாசுதேவ முதலியார்
கருப்பண்ணசாமி சதகம்	மிதிலைப்பட்டி அ. இராமசாமிக்கவிராயர்
கலைவாணி சதகம்	கி. சுந்தராச்சாரியார்
கழுகாசல சதகம்	கழுகாசலப் புலவர்
கழுகாசல சதகம்	திருமயிலை சண்முகம்பிள்ளை
காந்தி சதகம்	நா. முத்து சுந்தர முதலியார்
கார்க்கூர்ச் சங்கர சதகம்	லா.சி.சுப்பிரமணியஞ் செட்டியார்
கார்மண்டல சதகம்	அவிநாசி ஆறைகிழார்
கானாட்டுச் சதகம்	--
குமரேச சதகம்	குருபாததாசர்
குருசிஷ்யஅந்தாதிச் சதகம்	வேதாந்த சிதாகாச சுவாமி
குருநாதர் சதகம்	கருணையானந்த சுவாமி
கேசவர் சதகம்	வெங்குப்பிள்ளை
கைலாசநாதர் சதகம்	சேலம் தம்பரம்பிள்ளை (சிதம்பரவாணர்)
கைலாசநாதர் சதகம்	கைலாசநாதக் கவிஞர்
கொங்குமண்டல சதகம்	கார்மேகக்கவிராயர்
கொங்குமண்டல சதகம்	வாலசுந்தரர்

கோகுல சதகம்	பாலூர் அமிர்தகவிஞர்
கோதண்டராம சதகம்	இராமதாசர்
கோமதியம்மை சதகம்	திருக்கமலப்புலவர்
கோவிந்த சதகம்	வெண்மணி நாராயணபாரதி
கோவிந்த சதகம்	முத்தப்பச்செட்டியார்
சங்கர சதகம்	லா. சி. சுப்பிரமணியஞ் செட்டியார்
சண்முகநாதன் சங்கம்	அருணாசல நாவலர்
சதகப்பதிகம் (10 சதகங்களின் தொகுப்பு)	வண்ணச்சரபம்
சதனபுரீசர் சதகம்	இராமச்சந்திர குருசாமிதாசர்
சதானந்த சதகம்	பொன்னைய சுவாமிகள்
சதுர்லிங்க சதகம்	---
சதுர்லிங்க தசகோத்திர சதகம்	ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார்
சப்த சதகம் (7 சதகங்கள்)	வண்ணச்சரபம்
சயவரதர் சதகம்	வே.கி. நாராயணசாமிப்பிள்ளை
சல்லாசர் சதகம்	---
சன்மார்க்க சதகம்	முத்து வைத்தியநாதபண்டாரம்
சிங்கார வேலாயுதச் சதகம்	முத்துசாமிக் கவிராயர்
சிருங்கார சதகம்	சுவாமிநாத தேசிகர்
சிவகாமி சதகம்	முத்து வைத்தியநாதபண்டாரம்
சிவகாமியம்மை சதகம்	மாயூரம் கிருஷ்ணையர்
சிவகுரு சதகம்	சிவானந்த சரசுவதி
சிவசங்கர சதகம்	எழுமூர் வீராசாமி உபாத்தியாயர்
சிவபெருமான் சதகம்	வண்ணச்சரபம்
சிற்சுகவாரிதிச் சதகம்	அ. மாத்ருபூதம்பிள்ளை
சீரங்க நாராயண சதகம்	வண்ணச்சரபம்
சீறாச்சதகம்	மகமத் சுல்தான் இபின் அகமத்
சீனிவாச சதகம்	அனந்தநாத சுவாமிகள்

சுமதி சதகம்	எம். ஆர். சீனிவாசய்யங்கார்
சுமதி சதகம்	சமரபுரி முதலியார்
செந்தில்நாயக சதகம்	வண்ணச்சரபம்
செயங்கொண்டார் சதகம்	முத்தப்பச்செட்டியார்
செயவரதர் சதகம்	வெங்குப்பிள்ளை
செல்லாண்டியம்மன் சதகம்	சக்ரபாணி ஆச்சாரியார்
சொக்கநாதர் சதகம்	சங்குப்புலவர்
சொக்கநாதர் மலைச் சதகம்	கவிஞர் அடிகள் கு.ஆ. அரங்கநாதனார்
சோழமண்டல சதகம்	ஆத்மநாத தேசிகர்
சௌந்தரிய நாயகி சதகம்	தே. பெரியசாமிப்பிள்ளை
ஞான சித்தர் சதகம்	மகாதேவ யோகீந்திரர்
தசரத ராமச் சதகம்	இ. மாவிலிங்கம் பிள்ளை
தசரத ராமச் சதகம்	சீனிவாசாச்சாரியார்
தசாவதாரச் சதகம்	---
தண்டலையார் சதகம்	தண்டலைச்சேரி சாந்தலிங்கக் கவிராயர்
தண்டலையார் சதகம்	படிக்காசுத் தம்பிரான்
தரிசனமாலைச் சதகம்	மீரான் சாகிப் புலவர்
தியாகராசசுவாமி சதகம்	ப. சோமசுந்தரதேசிகர்
திருக்குறுங்குடி நம்பி சதகம்	வரராமயோகி
திருக்கூட்டச்சதகம்	தியாகராச தேசிகர்
திருச்சதகம்	சதாசிவம்பிள்ளை
திருச்செங்கோட்டுச் சதகம்	கிருஷ்ணசாமி முதலியார்
திருச்செங்கோட்டுச் சதகம்	சதாசிவ பண்டிதர்
திருச்செந்தில் நாயகச் சதகம்	தண்டபாணி சுவாமிகள்
திருச்செந்தூர் சண்முக சதகம்	வரராமயோகி
திருத்தொண்டர் சதகம்	மலைக்கொழுந்து நாவலர் கொடுமுடி
திருப்போரூர் சதகம்	பு. அ. சபாபதி முதலியார்

திருப்போரூர் பிரணவாசலச் சதகம்	பு. அ. சபாபதி முதலியார்
திருவரத்துறைநாத சதகம்	அர. அரங்கசாமி ஐயங்கார்
திருவருட்சதகம்	வி.மெ.மெய்யப்பச் செட்டியார்
திருவாசக திருச்சதகம்	மாணிக்கவாசகர்
திருவிளையாடற்சதகம்	கு. சுப்பிரமணிய ஐயர்
திருவுரு அட்டபந்தன சதகம்	சிவ. சு. குமாரசாமித்தேசிகர்
திருவேங்கடசதகம் (அ) மணவாளநாராயணசதகம்	வெண்மணி நாராயண பாரதி
திருவேங்கடநாத சதகம்	
திருவேங்கடசுவரர் சதகம்	கற்பூர வேங்கடசாமி செட்டியார்
தில்லைக் கற்பகவிநாயகர் சதகம்	சிதம்பரஞ்செட்டியார்
தில்லைக் கற்பகவிநாயகர் சதகம்	ஐயாத்துறை ஞானியார்
தில்லை நடராசர் சதகம்	ஐயாத்துறை ஞானியார்
தில்லை நடராசர் சதகம்	மாயூரம் இராமையா
தொண்டமண்டல சதகம்	வடலூர் இராமலிங்க சுவாமிகள்
தொண்டைமண்டல சதகம்	படிக்காசுப் புலவர்
நடராசர் சதகம்	சிதம்பரநாத முனிவர்
நந்த மண்டல சதகம்	சொ. தெய்வநாயகப்பெருமாள் நாயுடு
நந்த மண்டல சதகம்	திருவேங்கடப் புலவர்
நந்த மண்டல சதகம்	மாத்ருபூதமையர்
நந்தீசர் சதகம்	மஸ்தான் சாகிபு
நாராயண சதகம்	---
நானிலைச் சதகம்	தண்டபாணி சுவாமிகள்
நியாய சதகம்	---
நீதி சதகம்	சுவாமிநாத தேசிகர்
பர்த்துருகரி நீதி சதகம்	பர்த்துருகரி
பர்த்துருகரி நீதி சதகம்	ம. மாணிக்கவாசகம்பிள்ளை
பர்த்துருகரி வைராக்கிய சதகம்	வீரசுப்பையா ஞானதேசிகர்

பழனியாண்டவர் சதகம்	சேலம் குமாரசாமி முதலியார்
பழனியாண்டவர் சதகம்	ஐயம்பெருமாளாசிரியர்
பாண்டிமண்டல சதகம்	ஐயம்பெருமாளாசிரியர்
பிரணவவாசல் சதகம்	பு. அ. சபாபதி முதலியார்
பிராதான சதகம்	---
பிரமோத்தரகாண்ட சதகம்	கு. சுப்பிரமணிய ஐயர்
புவனேசுவரி சதகம்	---
பூவைச் சிங்காரச் சதகம்	மனோன்மணியம்மையார்
பொய்யாமொழியீசர் சதகம்	---
மகாத்மாகாந்தி சதகம்	மாப்பேராசிரியர் முத்துசுந்தர முதலியார்
மகாபாரத சதகம்	கிருட்டிணமூர்த்தி ஐயர்
மதலைச் சதகம்	பார்த்தசாரதி முதலியார்
மயிலாசல சதகம்	ப. நமச்சிவாய நாவலர்
மருந்தீசர் சதகம்	குட்டியக்கவுண்டர்
மழவைச் சிங்கார சதகம்	மகாலிங்கையர்
மனுநீதி சதகம்	இராசப்ப நாவலர்
மனுநீதி சதகம்	வேதகிரி முதலியார்
மனுவியாக்கியானச்சதகம்	வேதகிரி முதலியார்
மிழலைச் சதகம்	சர்க்கரை முத்து முருகப்பப் புலவர்
மிழலைச் சதகம்	சின்ன சருக்கரைப்புலவர்
மீனாட்சி சுந்தரேசுவரர் சதகம்	புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார்
மீனாட்சியம்மை சதகம்	மீனாட்சி சுந்தரம்பிள்ளை
முகியித்தீன் சதகம்	அப்துல் காதிறு பேகம்பூர்
முகியித்தீன் வரலாற்று சதகம்	முகம்மது நாகூர் முத்துப்புலவர்
முருகேசர் சதகம்	சீனிவாச நாடார்
மூனாசாத்து சதகம்	சுல்தான் அப்துல்காதிர் மரைக்காயர்

மெய்கண்ட வேலாயுத சதகம்	தஞ்சை அழகுமுத்துப்புலவர்
மெய்வரோதய சதகம்	வண்ணச்சரபம்
வடவேங்கடநாராயண சதகம்	நாராயணதாசர்
வடிவேலர் சதகம்	முத்துசாமிக்கவிராயர்
வரதராசப்பெருமாள் சதகம்	வேங்கடரமண ஐயர்
வானமாமலைச் சதகம்	சோ. தெய்வநாயகப் பெருமாள் நயினார்
விசுவகுரு சதகம்	பெருநகர் சண்முகாசாரியர்
விநாயகர் சதகம்	சி. இராமசாமி ஐயங்கார்
விருத்தீசுவரர் சதகம்	வாணியம்பாடி சுப்பராயப் புலவர்
விவரண சதகம்	கோனேரிதாஸ்யை
விரட்டேசுர சதகம்	திருச்சிற்றம்பல நாவலர்
வீரபத்திரர் சதகம்	தா. சின்னத்தம்பி உபாத்தியாயர்
வீரராகவர் சதகம்	வீரராகவதாசர்
வீரராகவர் சதகம்	சின்னதம்பி
வேங்கடேச சதகம்	புட்பகிரி அரிதாசர்
வேலாயுத சதகம்	அழகுமுத்துப்புலவர்
வேலாயுத சதகம்	திரு. கந்தப்பையர்
வேலாயுத சுவாமிமலை சதகம்	கவிஞர் அடிகள்
	கு. ஆ. அரங்கநாதனார்
வைகுந்த சதகம்	
வைத்திய சதகம்	---
வைராக்கிய சதகம்	சாந்தலிங்க சுவாமிகள்
வைராக்கிய சதகம்	சுவாமிநாத தேசிகர்

கொல்லி மலை

கொல்லி மலை சேலம் மாவட்டத்தில் இராசிபுரம் - நாமக்கல் வட்டத்தில் அமைந்துள்ளது. சதுரமாக மலை அமைந்திருப்பதால் இதற்கு சதுரகிரி என்றொரு பெயரும் உண்டு. தமிழகத்தின் வளமான மலைகளுள் இதுவும் ஒன்றாகும். மா, பலா, வாழை என்று முக்கனிகளையும், வானளாவக்கூடிய மரங்களும், கோதுமை, மொச்சை போன்ற தானிய வகைகளும் விளையக்கூடிய சந்தன மரங்களும், மருத்துவம் நிரம்பிய மூலிகைச் செடிகளும் இங்குள்ளன. இங்குள்ள குகைகளில் முனிவர்கள் பலர் பழங்காலத்தில் தங்கியிருந்து தவம் மேற்கொண்டனர்.

கொல்லிமலை கடல் மட்டத்திற்கு மேல் 4500 அடி உயரம் கொண்டது. 87 சதுரக்கல் பரப்பளவில் தென் வடலாய் 27 கிலோ மீட்டர் நீளமும், கீழ்மேலாய் 19 கிலோ மீட்டர் அகலமும் கொண்டது இம்மலை. வற்றாத அருவிகள் பல இம்மலைக்கு அழகு சேர்க்கின்றன. ஆகாய கங்கையில் மாசிமலையருவி, தாழிகையாறு, நாக்காட்டாறு, கானம்பாடி, முல்லையாறு போன்றவை வளம் சேர்க்கின்றன.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வைரிச்செட்டிப் பாளையம் சென்று, அங்கிருந்து மூன்று கல் சென்றால் புளியஞ்சோலை. அந்தக் கொல்லிமலை அடிவாரத்திலிருந்து 10 கி.மீ. தூரம் மரம், செடி, கொடி இவற்றுள் சென்றால் அறப்பளீசுவரர் ஆலயத்தினை அடையலாம். திருச்சி, நாமக்கல், சேந்தமங்கலம் வழியாகக் கொண்டையூசி வளைவுகள் 70 உடைய தார்ச்சாலை ‘செம்மேடு’ என்ற இடத்தோடு நின்றுவிடும். அங்கிருந்து 12 கிலோ மீட்டர் சென்றால் அறப்பளீசுரர் கோயிலை

அடையலாம். இக்கோயில் முடியுடை மூவேந்தர்களாலும் போற்றப் பெற்றது. பல்லவ, நாயக்க மன்னர்கள் பலர் திருப்பணிகளைச் செய்து உள்ளார்கள்.

கொல்லி மலைக்கு மிக அழகு தருவது ஆகாய கங்கையாகும். மேலே ஐந்து அருவிகள் ஒன்று சேர்ந்து மாவாறு என்னும் மீன் பள்ளியாற்றில் கலந்து 600 அடி உயரத்தில் இருந்து நீர்வீழ்ச்சியாக வீழ்கிறது. இக்காட்சி பார்ப்போர் தம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். இந்த அருவியினைக் காண இரண்டு கிலோமீட்டர் தூரம் கீழ்நோக்கி மலை அடிவாரம் வரை நடந்தே செல்ல வேண்டும்.

கடையெழு வள்ளல்கள் என்று போற்றப் பெற்றவர்களுள் ஒருவனாகிய 'ஓரி' என்பான் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இம்மலையினை ஆட்சி செய்தான். பின் மழவர்கள் கைக்கு ஆட்சி மாறியது. அதன் பின்னர் சோழர்களின் ஆட்சி சிறந்தோங்கியது.

வல்வில் ஓரிக்கு இன்றும் ஆண்டுதோறும் விழா எடுக்கப்படுகிறது.

கொல்லியின் வரலாறு

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரி ஆற்றின் வடகரையில் இலால்குடி, முசிறி, திருச்சி வட்டங்கள் அடங்கிய பகுதி முற்காலச் சோழர் காலத்தில் மழநாடு என்று பெயர் பெற்று விளங்கியது. மழநாடு என்பது மழவர்களுக்குரிய நாடு என்று பொருள் ஆகும். காவிரியின் வடகரையில் அமைந்திருந்ததால் வடகரை மழநாடு என்றே கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறுகின்றது. சங்க காலத்தில் இப்பகுதி மழபுலம் என்றழைக்கப்பெற்றது.

கொல்லிமலை அடிவாரம் வரையிலும் இம்மழநாடு முன்னர் பரவி இருந்தது. இதனாலேயே கொல்லி மழநாடு என்று இப்பகுதி வழங்கப்பட்டது. கொல்லி மழவன் ஒற்றியூரன் பிரதி கண்டவன்மன் என்றொரு தலைவன் சுந்தர சோழன் காலத்தே வாழ்ந்தான். கண்டிராதித்திய சோழனின் மனைவி செம்பியன் மாதேவியின் தந்தையார் கொல்லி மழவரையர் ஆவார்.

மழநாடு செம்புறை கண்டம், கழார்க்கூற்றம் கீழ்கூறு, கழார்க் கூற்றம் மேல்கூறு, மீமலை நாடு, பாய்ச்சில் கூற்றம் கீழ்ப்பிலாறு, பாய்ச்சில் கூற்றம் மேல்பிலாறு, வெம்கோன்குடிக் கண்டம், வடவழி நாடு, வெள்ளையூர்க் கண்டம், திருப்பிடவூர் நாடு, பிரமபுரி நல்லூர்க் கண்டம் என பல உட்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. திருப்பாச்சிலாச்சிராமம் சிலகாலம் இந்நாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்தது.

மாமன்னன் இராஜராஜ சோழன் காலத்தில் பல புதிய வளநாடுகள் அமைக்கப்பட்டபொழுது, இராஜராஜனின் பட்டப்பெயர்களுள் ஒன்றான இராஜாசீரயன் என்னும் பெயரில் மழநாடு இராஜாசீரய வளநாடு என்ற பெயர் பெற்றது. பின் இவற்றின் பெரும்பகுதி இராஜராஜ வளநாடு என்று பெயர் மாற்றம் பெற்றது. இந்த ராஜராஜ வளநாடு கீழ்முறி என்றும் மேல்முறி என்றும் இரு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது.

திருச்சிராப்பள்ளி உசாவடிக்குச் சேர்ந்த மழநாடு என்பது ஒரு கல்வெட்டுத் தொடர். சோழர் காலத்து அரசியல் தலைவன் ஒருவன் மழநாட்டு வேள் என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறுகின்றான். சில மழநாட்டுத் தலைவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பல கொடைகள் வழங்கியுள்ளனர்.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் தம் சொல்லதிகார நூற்பா உரையொன்றில் மங்கலம் என்பதோர் ஊருண்டு போலும் மழநாட்டுள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் மழநாடு தன் பழம்பெயரை இழந்து மழைநாடு என வழங்கப்படலாயிற்று.

கொல்லிமலை போன்ற பல குறிஞ்சி நிலப் பகுதிகளில் மட்டுமே முதலில் வாழ்ந்த மக்கள் மழவர் எனப்பட்டனர். இவர்கள் வீர மரபினர். சங்க நூல்களில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் பரவலாகக் காணப்பெறுகின்றன. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த இவர்கள் பின்னர், படிப்படியாக முல்லை, மருத நிலப் பகுதிகளில் வாழ்க்கையை மேற்கொண்டு வாழத் தலைப்பட்டனர். ஆநிரை கவர்தல் ஆகிய வெட்சித் திணை வாழ்க்கையைச் சிலர் மேற்கொண்டனர். மழவர்கள் பேரரசர்கள் சிற்றரசர்களின் படைகளில் சேர்ந்து போர்த் தொழில் மேற்கொண்டனர்.

சேர மன்னர்களுள் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும், பல்யானைச் செல் கெழுகுட்டுவனும் மழவர் மெய்ம்மறை எனப்பட்டனர். தகடூர் அதியமானும், கொல்லியாண்ட வல்வில் ஓரியும் மழவர் பெருமகன் என்று புகழப்பெற்றனர். இம்மக்கள் வீரக்கழல் அணிந்தவர்கள். பொற்பூச்சூடி வீரமத்தளம் வாசித்துப் பூந்தொடை விழா கொண்டாடி ஊன் புழுக்கையும், சுட்ட கொழுப்பு ஆவையும் உண்பார்கள். இவர்கள் நெடுவேல், குறும்படை, வயவாள், கூர்ம்படை. வெள்வேல் போன்ற போர்க்கருவிகளைக் கொண்டவர்கள்.

போர் ஆயுதங்களைக் கையாள்வதில் சிறந்த பயிற்சி உடையவர்கள் இம்மக்கள். இவர்கள் யானைகளையும், குதிரைகளையும் பழக்கிப் பயன்படுத்தினர்.

தேவாரத்திலும், பெரியபுராணத்திலும் இப்பகுதி சிறப்பிக்கப் பெறுகின்றது. மழபாடி மழவர் என்று கல்வெட்டு பகர்கின்றது. தஞ்சாவூர் கல்வெட்டில் மழபாடி தலைவர்கள் குறிக்கப் பெறுகின்றனர். பிற்காலத்தில் இவ்வூர் மழுவாடி, மலவாடி என்று குறிக்கப்பட்டது.

கொங்கு, கொங்கநாடு, கொங்கு மண்டலம் என்றும் இப்பகுதி வழங்கப்பெற்றது. தமிழகத்தின் பண்டைய நாடுகள் ஐந்தினுள் இதுவும் ஒன்று. மற்றவை, சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகள் ஆகும். கிழக்கில் குளித்தலையும், மேற்கில் வெள்ளியங் கிரியும், தெற்கில் பழனி மலையும், வடக்கில் தலை மலையும் கொங்கு நாட்டின் எல்லைகளாக விளங்கின.

கொங்குநாட்டு எல்லையாக, பெருந்தொகை பொருளியலில்

வடக்கு பெரும்பாலை வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
களித்தண் டலைமேவுங் காவிரிசூழ் நாட்டுக்
குழித்தண் டலையளவுங் கொங்கு. (2105)

கூறப்பட்டுள்ளது.

மேலும், கொங்கு இருபத்து நான்கு நாடுகளைக் குறிப்பிடும் பெருந்தொகை பொருளியலின் செய்யுளாவது,

சொல்லவரி தானபூந் துறைசைதென் கரைநாடு
தோன்றுகாங் கேய நாடு
தோலாத பொன்கலூர் நாடுதிக ழாறையளி
தோய்ந்தவா ரக்க நாடு
வல்லமை செறிந்ததிரு வாவினன் குடிநாடு
மணநாடு தலைய னாடு
வரதட்டை பூவாணி யரைநா டொடுவங்க
வடகரை கிழங்கு நாடு

நல்லூருக் கன்னாடு வாழவந் தியுமண்ட
நாடுவெங் கால நாடு
நாவலர்கள் சொல்கா வடிக்கநா டானைமலை
ராசிபுர நாடு நிதமும்
இல்லறம் வளர்ந்துதவு மல்குகாஞ் சிக்கோயி
லியல்செறி குறும்பு நாடும்
இனியபுகழ் சேர்கொங்கு மண்டலந் தனிலான
விருபத்து நான்கு நாடே. (2106)

கிழக்கே சோழநாடும், மேற்கே சேரநாடும், தெற்கே பாண்டி நாடும், வடக்கே அதியமான் நாடும் கொங்கு நாட்டைச் சுற்றிலும் அமைந்திருந்தன. சோழர்கள் காலத்தில் இந்நாடு வீரசோழ மண்டலம், அதிராஜராஜ மண்டலம், சோழ-கேரள மண்டலம் என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளது. புவியியல் அடிப்படையில் கொங்குநாடு எழு கரை நாடு என்றும், ஒன்பது கரைநாடு என்றும் வழங்கப்பெற்றது. காலப்போக்கில் பல்வேறு மரபு மன்னர்களின் ஆளுகையின் கீழ் இப்பகுதி விளங்குகின்றது.

கல்வெட்டு, இலக்கியச் சான்றுகளினால் இந்நாடு வட கொங்கு, தென்கொங்கு என இருபெரும் பிரிவுகளாகத் திகழ்ந்ததை அறிய முடிகின்றது. மேலும், மேல் கொங்கு, கீழ்கொங்கு (மழ கொங்கம்) என்கிற பிரிவும் சில காலம் இருந்துள்ளது.

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலும் கொங்குநாடு சிறந்த நாகரிகத்தைப் பெற்றிருந்ததுஎன்பதனைக் கருவூர், முட்டம், கொடு மணல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப் பெற்ற அகழாய்வுகளாலும், இப்பகுதியில் கிடைத்த கற்கருவிகள், கற்பதுக்கைகள், முதுமக்கள் தாழிகள் முதலியவற்றாலும் அறியலாம். சங்க காலத்தில் கொங்கு நாட்டின் பகுதிகளில் பல குறுநில மன்னர்கள் ஆண்டு வந்துள்ளனர். அவர்களுள் அதிகமான், பேகன், ஓரி, குமணன், நன்னன், நள்ளி, மோகூர்ப்

பழையன், ஆமூர் மல்லன் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

குறிப்பாக முற்காலப் பாண்டியர் மழ கொங்கத்தைக் கைப்பற்றினர். அவர்களுள் முதலாம் வரகுண பாண்டியன் (768-815), சீமாற சீவல்லப பாண்டியன் (815-862) போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். கொல்லி பகுதி கொங்குப் பகுதியாகவும் இருந்து வரலாற்றிற்குப் பெருமை சேர்த்துள்ளது.

தமிழ்நாட்டின் கொல்லி மலை, சேர்வராயன் மலை, சவ்வாது மலை, ஏலகிரி மலை, பச்சை மலை ஆகியவற்றில் வாழ்கின்ற மக்கள் மலையாளிப் பழங்குடி மக்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். மலையாளிகள் என்றவுடன் கேரள மாநிலத்தில் வாழும் மலையாளம் பேசுகின்ற மக்களே நினைவிற்கு வருவர். ஆனால் தமிழ் பேசும் இப்பழங்குடி மக்கள் மலையில் வாழ்வதால் 'மலையாளிகள்' எனப் பெயர் பெற்றனர். இப்பழங்குடி மக்கள் ஒரே இனத்தைச் சார்ந்திருந்தாலும், வெவ்வேறு இடங்களில் பரவி வாழ்வதால், பழக்க வழக்கங்கள், பேசும் மொழி ஆகியவற்றில் ஓரளவு வேறுபடுகின்றனர். சேர்வராயன் மற்றும் கல்வராயன் மலைகளில் வாழ்பவர்கள் கொல்லி மலையாளி என்றும், பச்சை மலையில் வாழ்பவர்கள் பச்சை மலையாளி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இம்மலையாளிகளை மலை வெள்ளாளர் எனவும், கொங்கு வெள்ளாளர் எனவும், காஞ்சி மண்டலத்தார் எனவும், மலைக்களன் எனவும், மலைக் கவுண்டன் எனவும், கவுண்டன் எனவும் அழைக்கின்றனர். இப்பழங்குடி மக்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் கவுண்டன் என்னும் பட்டப் பெயரைச் சேர்த்துக் கொள்கின்றனர்.

பெரியண்ணன், நடுவண்ணன், சின்னண்ணன் என்கின்ற மூன்று சகோதரர்கள் சாதியினின்றும் நீக்கப்பட்டனர். நீக்கப்பட்ட இவர்களுள் ஒருவர் கைக்கோளர் பெண்ணையும், அடுத்தவர் வேடர் பெண்ணையும், மற்றவர் பள்ளர் பெண்களையும் மணந்துகொண்டு கல்வராயன் மலை, பச்சைமலை, கொல்லிமலை போன்ற பகுதிகளில் வாழ்ந்தனர். காஞ்சிபுரத்திலிருந்து இம்மலைப் பகுதியில் குடியேறிய வேளாளரே மலையாளிகள் என்றும், வேளாளர் இனத்தைச் சார்ந்த இம்மக்கள் இவர்களுக்கும் முன்னரே மலைப்பகுதியில் வாழ்ந்த வேடர்களுடன் கலந்து வாழ்ந்த இனமே மலையாளிகள் என்றும் கதைகள் இவர்களிடையே நிலவுகின்றன.

கொல்லிமலை மலையாளிகள் கோவணம் கட்டி, தலைப்பாகை அணிவர். ஆண்கள் தலையில் கட்டும் துணிக்குத் 'தலவாட்டி' என்றும், பெண்கள் தலையில் கட்டும் துணிக்கு 'முண்டு' என்றும் பெயர். இப்பழங்குடி மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மை ஆகும். வரகு, கம்பு, தினை, சாமை போன்றவற்றைப் பயிரிடுகின்றனர். உழுது பயிர் செய்யும் காட்டை உழவுக்காடு என்றும், காட்டைஅழித்து மண்வெட்டியால் கொத்துகின்ற காட்டைக் கொத்துக்காடு என்றும் கூறுவர். இவர்கள் வேட்டையாடவும் செய்கின்றனர். சிலர் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும், மேலும் சிலர் காப்பித் தோட்டங்களில் கூலியாளாக வேலை செய்தும் வாழ்ந்து வருகிறார்கள்

அம்பலவாணக் கவிராயர்
இயற்றிய

அறப்பளீசுர சதகம்

காப்பு

நேரிசை வெண்பா

உம்பர்கோ னெம் பெருமா னோங்கறப்ப ளீசுரன் மேற்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே - அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

பொருள்: வானவர் தலைவனும் எம் இறைவனுமாக உயர்ந்த அறப்பள்ளி என்னும் தலத்தில் எழுந்தருளிய இறைவனைக் குறித்து, புதிய பொருளமைந்த சதகத்தைப் பாடுவதற்கு உலகோர் செய்யும் வாழ்த்துக்களை உடையவனும், அன்புடையவர்களுக்கு இன்பத்தை அருளிக் காப்பாற்றும் தும்பிக்கை உடைய மூத்த பிள்ளையார் காவல்.

அறப்பள்ளி - சதுரகிரியில் உள்ள சிவநகர், அம்பர் இம்பர் உம்பர் என்பவை சுட்டடியாகப் பிறந்த இடங்கள். உம்பர்-மேலிடம், வானுலகம். அங்குள்ளோரையும் உம்பர் என்றது இடவாகுபெயர். துதிக்கை - துதித்தல் : யானையின் கை. காப்பு - தொழிற்பெயர்.

உயர் பிறப்பு

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினுள்மிக்க
காட்சிபெறு நரசென்ம மாய்க்
கருதப் பிறத்தலரி ததினுமுயர் சாதியிற்
கற்புவழி வருத லறிது

வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலத தனினு மரிது
வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்ற லரிது
நெடியதன வானாத லரிததி னிரக்கமுள
நெஞ்சினோ னாத லரிது
நேசமுட னுன்பதத் தன்பனாய் வருதலின்
நீணிலத் ததினு மரிதாம்
அடியவர்க் கமுதமே மோழைபூ பதிபெற்ற
வதிபனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 1

நரர் - மனிதர், மாசில் வழி - மாசு அற்ற வழி
நீள் நிலத்து - பெரிய இந்த உலகத்து

பொருள்: அடியவர்களின் துன்பத்தை நீக்குபவனே, மோழை எனப்படும் தலைவன் பெற்ற தலைவன் எம் அரிய மதவேளே. எப்போதும் உள்ளத்தில் வழிபடுகின்ற சதுரகிரியில் எழுந்தருளியுள்ள அறப்பளீசுர தேவனே. கடலால் சூழப்பட்ட நிலத்தில் வாழ்கின்ற எழுவகையாய் தோன்றிய உயிர்களுள் மிகுந்த அறிவுடைய மக்கட் பிறப்பாய் பிறத்தலரிது. அப்பிறப்பினுள்ளும் உயர்குணமுடைய குலத்திலே கற்பு ஒழுக்கமுடைய மரபிலே தோன்றுதல் அருமை. அவ்வாறு பிறப்பவர்களுள்ளும் அழகுடன் உறுப்புக் குறைபடாமலும், பிழை இல்லாமலும் பிறப்பது அருமை. அவ்வாறு பிறப்பினும் நன்று இது, தீது இது என நினைத்துக் குற்றமில்லாத நெறியில் நிற்றல் அருமை. அதனினும் பெரிய செல்வனாவது அருமை. அதனினும் அருட்பண்புடைய உளத்தோன் ஆவது அருமை. அதனினும் உன் திருவடிகளிலே அன்பு தவழும் அடியவனாக வருதல் இப்பேருலகிலே அருமையாகும்.

எழுவகைப் பிறப்பு, வானவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம், பூ - உலகம். பதி - தலைவன். பூபதி - அரசன். தங்களுக்கு உதவிய பெருமக்களைப் பூபதி என்று புகழ்தல் அக்காலப் புலவர் வழக்கம்.

அறிவுடைமை மக்கட் பிறப்பாகப் பிறந்து அழகு, செல்வம், ஒழுக்கம், கடவுள் வழிபாடுகள் உடையவராக இருத்தல் அருமை.

இல்லாளின் சிறப்பு

கணவனுக் கினியளாய் மிருதுபாஷி யாய்மிக்க
கமலைநிக ரூப வதியாய்க்
காய்ச்சின மிலாளுமாய் நோய்பழியி லாததோர்
கால்வழியில் வந்த வளுமாய்

மணமிக்க நாணமட மச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்க வதியாய்
மாமிமா மர்க்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்பு பவளாய்

இணையின் மகிழ் நன்சொல்வழி நிற்பவளு மாய்வந்தி
எனபெய ரிலாத வளுமா
யிரதியென வேலீலை புரிபவளு மாய்பிறர்தம்
மில்வழி செலாத வளுமாய்

அணியிழை பொருத்தியுண் டாயினவள் கற்புடைய
ளாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 2

மிருது பாஷி – மென்மொழியாள், கமலை நிகர் – மகாலட்சுமி போன்ற
காய்ச்சினம் – வெறுப்பூட்டும் கோபம், மகிழ்நன் – கணவன், வந்தி – மலடி.

பொருள்: எமது தேவனே, கணவன் பார்வைக்கு அழகியவளாய், இன்மொழி பேசுபவளாய்,

மகாலெட்சுமியை ஒத்தவளாய் வெறுக்கத்தக்க கோபம் இல்லாதவளுமாய், நோயும், இழிவும் இல்லாத ஒப்பற்ற மரபிலே பிறந்தவளாய், புகழத்தக்க நான்கு பண்புகளும் பொருந்திய நல்லொழுக்கம் உடையவளாய், மாமிக்கும், மாமனுக்கும் நலம் புரிபவளாய், வாயிலில் வரும் விருந்தினர்களை ஆதரிப்பவளாய், ஒப்பற்ற கணவன் மொழிப்படி நடப்பவளாய் மலடி எனும் பெயரில்லாத வளாய், இரதியினைப்போல இன்பக் கலவி செய்பவளாய், மற்றவருடைய வீட்டு வழி செல்லாதவளாய், அழகிய அணிகலன்களை உடைய ஒரு மங்கை இருந்தால் அவள் கற்பு உடையவள் எனப்படுவாள்.

நன்மக்கட் பேறு

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்து வரலுந்
தன்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
சாதக னெனப் படுதலும்

மங்குத லிலாததன் றந்தைதாய் குருமொழி
மாறாதுவழி பாடு செயலும்
வழிவழி வருந்த மதுதேவ தாபத்தின்
மார்க்கமுந் தீர்க்கா யுளும்

இங்கித குணங்களு வித்தையும் பத்தியு
மீகையுஞ் சன்மார்க் கமு
மிவையெலா முடையவன் புதல்வனா மவனையே
யீன்றவன் புண்ய வானாம்

அங்கச விரோதியே சோதியே நீதிசே
ரரசனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 3

அங்கசன் - மன்மதன்

பொருள்: மன்மதன் விரோதியே, ஒளியே நீதி மிக்க மன்னனே. அருமை தேவனே, பெரியோர்கள் செய்து வந்த தருமங்களைத் தம் குலம் விளங்கிட தொடர்ந்து செய்து வருவதும், சிறந்த வெகு தானங்கள் செய்வதும், மிக்க வாய்ப்பு உடைய யோகங்கள் நிறைந்த சாதகன் எனப்படுவதும் குறைவு இல்லாத தன் தந்தையார், தாயார், குரு ஆகியோரது சொல் மாறாது வழிபாடு செய்தலும், தம்முடைய வழிவழியாக வரும் மரபின்படி கடவுளிடம் பக்தி செலுத்துவதும், நீண்ட ஆயுளும், நல்ல குணங்களும், கல்வியும், அறிவும், வள்ளல் தன்மையும் அனைவரையும் சமமாக நடத்தக்கக்கூடிய இவை எல்லாம் கொண்டவன் நல்ல மகனாவான். அவனைப் பெற்றவன் பெரும் புண்ணியம் செய்தவனாவான்.

சகோதர ரொருமை

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுக மெனக்
கொண்டுதாந் தேடுபொரு ளவர்தேடு பொருளவர்
கொள்கோதில் புகழ்தம் புகழெனத்
தேடுற்ற வவர்நிந்தை தன்னிந்தை தந்தவந்
தீதிலவர் தவமா மெனச்
சீவனொன் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச்
சீரறவ மணிவாய் தொறும்
கூடுற்ற லிரையெடுத் தோருடனி றைத்திடுங்
கொள்கைபோற் பிரி வின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவது வேதரும மாம்
ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 4

கோதில் புகழ் - குற்றமில்லாத புகழ்.

பொருள்: ஆடிச் சிவந்த செந்தாமரை மலரடிகளை உடையவனே, தலைவனாகிய எமது தேவனே. உடன் பிறந்தவர்களுக்கு நேர்ந்த வருத்தம் தம் வருத்தம், அவர்கள் கொள்ளும் இன்பம் தம் இன்பம் என்றும், தாம் முயன்று சேர்க்கும் பொருள் அவர்கள் சேர்க்கும் பொருள் என்றும், அவர்கள் கொண்ட குற்றமற்ற புகழ் தம்முடைய புகழ் என்றும், அவர்கள் கொண்ட பழிப்பு தம்முடைய பழிப்பு, தம்முடைய தவம் குற்றமற்ற அவருடைய தவமாகும். என்றும், இவர்களுக்கு உயிர் ஒன்று மெய் மட்டும் வேறு என்றும், சீறுகின்ற பாம்பின் மாணிக்கங்களையுடைய ஐந்து தலைகளிலும் உள்ள வாய்தோறும் கிடைத்த உணவை எடுத்து ஒருடலை நிறைக்கின்ற இயற்கை போல பிரிவேயில்லாமல் கூடி வாழ்கின்றவர்களையே உடன்பிறந்தோர் என்று கூறுவது அறமாகும்.

ஐந்து தலை பாம்பு தன் வாய்கள் ஐந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும் உணவு ஒரே மிடற்றின் வழியே ஒரே வயிற்றுக்குள் செல்வதுபோல உடன் பிறந்தோர் ஈட்டிய பொருள் ஒருங்கே பயன்படல் வேண்டும்.

சற்குருவியல்பு

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விவரவிஞ் ஞான பூர்ண
வித்யா விசேஷசற் குணசத்ய சம்பன்ன
வீரவை ராக்கிய முக்கிய

சாதா ரணப்பிரிய யோகமார்க் காதிக்ய
சமாதிநிஷ் டானுபவ ராய்ச்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர
தருமமும் பர சமயமும்

நீதியி லுணர்ந்துதத் துவமார்க்க ராய்பிரம
நிலைகண்டு பாச மிலராய்
நித்தியா னந்தசை தன்யரா யாசையறு
நெறியுளோர் சற்கு ரவராம்

ஆதார மாயுயிர் குயிராகி யெவையுமா
மமலவெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 5

க்ய சமாதி - யோகத்தின் மூலம் உடல் சமாதி நிலை அடைதல்,
சட்சமயம் - அறுவகை சமயங்கள்.

பொருள்: உலகிற்கு ஆதரவாய், உயிர்களுக் கெல்லாம் உயிராகி, எவ்வகைப் பொருளும் ஆகிய தூய பொருள் எமது தேவனே, வேதாந்த சித்தாந்த நெறிகளை ஆராய்ந்தறிந்து ஒழுக்கத் தெளிவு, விஞ்ஞானத்தின் நிறைவு, கல்விச் சிறப்பு, நற்பண்பு, உண்மையாகிய செல்வம், உறுதியான வீரம், தலைமை, அருள், யோக நெறியிலே மேன்மை, சமாதி கூடுதலிற் பயிற்சி உடையவராய், அறுசமயத் தன்மையும், மேலான மந்திரம், மேலான தந்திரம் என்பவற்றின் நிலையையும், பிற மதங்களையும் நெறிப்படி அறிந்து உண்மை நெறியினராகி, தூய பொருளின் நிலையை அறிந்து, பற்று நீங்கியவராய் உண்மை இன்ப அறிவுருவினராய், பற்றற்ற நெறியில் நிற்போர் நல்லாசிரியராவர்.

நன்மாணாக்கரியல்பு

வைதாலு மோர்கொடுமை செய்தாலு மோசீறி
மாறா திகழ்ந்தா லுமோ
மனதுசற் றாகிலும் கோணாது நாணாது
மாதா பிதா வெனக்குப்

பொய்யாம னீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்துபொரு ளுட லாவியும்
புனிதவென் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றிமல ரடியில் வீழ்ந்து

மெய்யாக வேரவி யுபதேச மதுபெற
விரும்புவோர் சற் சீடராம்
வினைவேறு ரறும்படி யவர்க்கருள்செய் திடுவதே
மிக்கதே சிகரது கடன்

ஐயா புரம்பொடி படச் செய்த செம்மலே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 6

புரம்பொடி பட – திரிபுரத்தை அழித்து பொடிபட.

பொருள்: முப்புரங்களை நீறுபடச் செய்த பெரியோனே, தலைவனாகிய எமது தேவனே, திட்டினும், ஏதேனும் கொடுமையிழைக்கினும், மாறாமல் சினந்து இழிவு படுத்தினும் சிறிதும் மனங்கோணாமலும், வெட்கப் படாமலும், உண்மையாக எனக்கு அன்னையும், தந்தையும் நீயே என்று கூறி மனங்கனிந்து வழிபாடு செய்து என் பொருளும் உடலும் உயிரும் உன்னுடையவை என்று கூறி கொடுத்து இரவும் பகலும் விடாமல் வணங்கி ஆசிரியரின் மலர் போன்ற திருவடிகளில் உண்மையாகவே வீழ்ந்து புகழ்ந்து கூறி, அறிவு பெற விழைவோர் நல்ல மாணவராவார். அவர்களுக்கு வினையின் வேர் கெடும்படி அருள் செய்வது சிறந்த ஆசிரியரது கடமையாகும்.

பொருள் செயல்வகை

புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்க வேண்டும்
புத்தியுட னதுவொன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்க வேண்டும்

உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த் ராபரண
முடலிற் றறிக்க வேண்டு
முற்றபெரி யோர்கவிஞர் தமரா துலர்க்குதவி
யோங்குபுகழ் தேட வேண்டும்

மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டு முயர்மோக்ஷ
வழிதேட வேண்டு மன்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்க மறியாக் குருடராம்

அண்ணலே கங்கா குலத்தவன் மோழைதரு
மழகனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 7

தமர் - சுற்றத்தார், ஆதுலர் - வறியவர், வறிதல் - வீணாக.

பொருள்: தலைவனே, கங்கை குலத்தின் தலைவனே, மோழை பெற்ற அழகனே, அருமை தேவனே, நல்ல வழியில் செல்வம் வர வேண்டும், அவ்வாறு வந்த பொருளைச் சிறப்பாக பாதுகாக்க வேண்டும். அறிவுடன் செயல் புரிந்து அப்பொருளை ஒன்று நூறாக வளரச் செய்து வளர்க்க வேண்டும். நல்ல உணவு வகைகளை உண்ண வேண்டும். சிறந்த ஆடை அணிகலன்களை உடலில் அணிய வேண்டும். சுற்றத்தாருக்கும், ஏழை எளியோருக்கும் உதவி செய்து பெரியோர் கவிஞர் பாடிப் போற்ற உயர்ந்த புகழ் பெறல் வேண்டும். மண்ணில் நிறைய தருமங்கள் செய்திட வேண்டும். வானுலகில் நல்ல உயர் இடம் பெறவேண்டும். அதின்றி வீணாக யாருக்கும் பயன்படாமல் பொருளைப் புதைத்து வைத்தவர்கள் நல்வழியறியாத குருடர்களாவார்.

தீயவழி விலக்கு

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற் செல்லொ ணாது
வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடையர்முன் னிற்கொ ணாது

கொஞ்சமே னுந்தீது செய்யொணா தொருவர்மேற்
குற்றஞ்சொ லொண்ணா தயற்
கோதையர்க ளோடுபரி காசஞ்செ யொண்ணாது
கோளுரைகள் பேசொ ணாது
நஞ்சுதரு மரவொடும் பழகொணா திருள்வழி
நடந்துதனி யேகொ ணாது
நதிபெருக் காகினதி னீஞ்சல்செய் யொணாது
நல்வழி மறக்கொ ணாது
அஞ்சாம லரசர்முன் பேசொணா திவையெலா
மறியுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 8

ஒணாது - கூடாது.

பொருள்: இங்கு கூறப்பட்டவற்றை எல்லாம் அறிந்த எமது தேவனே, வஞ்சகரைக் கூடிப் பழகல் தகாது. அன்பில்லாதவரின் வீட்டு வாயிலை அடைதல் கூடாது, எவரிடமும் வாதிடுதல் கூடாது. அறிவு இல்லாத பேதைகளின் எதிரில் செல்லக் கூடாது. சிறிதாயினும் தீய செயலைச் செய்தல் ஒவ்வாது. ஒருவர் மேல் குறை கூறல் கூடாது. பிற மங்கையருடன் நகைத்துப் பேசுதல் கூடாது. கோள் மொழிகள் சொல்லக் கூடாது. நஞ்சைத் தரும் பாம்போடு பழகல் கூடாது. இருண்ட நெறியிலே தனியே நடந்து செல்லக் கூடாது. ஆறு பெருகிச் சென்றால் அதை நீந்திச் செல்லுதல் கூடாது. நல்ல நெறிகளை மறத்தல் கூடாது. அரசரிடம் அச்சம் இன்றிப் பேசுதல் கூடாது.

ஒன்றற்கொன் றழகுசெய்வன

வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்விகல் விக்கழகு
மாநிலந் துதிசெய் குணமாம்

சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றி லதற்கழகு தான்
றூயதவ மேன்மையுப காரம்விர தம்பொறுமை
சொல்லறிய பெரியோர் களைத்

தாழ்தல்பணி விடைபுரிதல் சீலநே சங்கருணை
சாற்றுமிவை அழகென்பர் காண்
சௌரிமல ரோனமரர் முனிவர்முச் சுடரெலாஞ்
சரணமெமை ரட்சி யெனவே

ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 9

சௌரிமலரோன் – திருமால்.

பொருள்: திருமாலும், பிரமனும், வானவரும், முனிவரும், முச்சுடரும் ஆகிய எல்லோரும் அடைக்கலம் எங்களை ஆதரி என்று வேண்ட, ஆழமான கடலில் தோன்றிய நஞ்சை உண்ட நீலகண்டனே. தலைவனாகிய எமது தேவனே, வாழும் இல்லத்திற்கு அழகு நற்குடியில் பிறந்த மங்கையாவாள். குல மங்கையின் வாழ்விற்கு அழகு செய்பவர் நன்மக்கள். வளரும் சிறுவருக்கு அழகு செய்வது கல்வி, கல்விக்கு அழகாவது பேருலகம் புகழும் நற்பண்பாகும். பொருந்தி அந்த நற்பண்பிற்கு அழகு செய்வது பெருமை மிக்க அறிவு. பேரறிவு உண்டானால் அதற்கு அழகு செய்பவை நல்ல தவமும், பெருந்தன்மையும், உதவியும், நோன்பும், பொறையும், புகழ்தற்கரிய பெரியோர்களை வணங்குதலும், அவர்களுக்குத் தொண்டு புரிதலும், சைவப் பற்றும், அருளும் என கூறப்பட்ட இவைகள் அழகாகும் என்பார்கள் அறிஞர்கள்.

ஒன்றில்லாமையால் பயன்படாதவை

கோவிலில் லாதவூர் நாசியில் லாமுகங்
கொழுந னில்லாத மடவார்
குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
குஞ்சர மிலாத சேனை

காவலில் லாதபயிர் பாலரில் லாதமனை
கதிர்மதி யிலாத வானங்
கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண்
காவல ரிலாத தேசம்

ஈவதல் லாததனம் நியமமில் லாதசெப
மிசைலவண மில்லாத வூ
ணிச்சையில் லாதபெண் போகநல மிவைதம்மி
னேதுபல னுண்டு கண்டாய்

ஆவியனை யாட்கிடந் தந்தவா கற்பதரு
வாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே.

கொழுநன்-கணவன், மடவார் - பெண்கள், குஞ்சரம் - யானை, லவணம்-உப்பு

பொருள்: உயிரனைய உமையம்மைக்கு மெய்யில் இடப்பாகத்தை அருளியவனே. கற்பதரு என உலகிற்குப் பயன்படுகிற எமது தேவனே. திருக்கோயில் இல்லாத ஊரும், மூக்கு இல்லாத முகமும், கணவன் இல்லாத பெண்களும், நல்ல பண்பை வளர்க்காத கல்வியும், நறுமணம் இல்லாத பூவும், யானை இல்லாத படையும், வேலியில்லாத பயிரும், மழலைச் செல்வங்கள் இல்லாத இல்லமும், சூரியன், சந்திரன் இல்லாத வானமும், புலவர்கள் இல்லாத அவையும், இசையும் தாள அளவும் இல்லாத சங்கீதமும், மன்னன் இல்லாத நாடும், கொடையில்லாத பொருளும்,

ஒழுங்கு இல்லாத வழிபாடும், ஏற்ற அளவு உப்பில்லாத உணவுப்பொருளும், விருப்பமற்ற மங்கையின் இன்பமும் ஆகிய இவற்றால் என்ன நன்மையுண்டு கண்டாய்.

ஒன்றர்க்கொன்று தகாத சேர்க்கை

பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே
பொருளை யருளிச் செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத மிடி வைத்தனை

நீதியகன்ற மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறிமா தரைத் தந்தனை
நிதானமுள வுத்தமர்க் கிங்கித மிலாதகொடு
நீலியைச் சேர்வித் தனை

சாதியி லுயர்ந்தபே ரீனர்பின் னேசென்று
தாழ்ந்து பரவச் செய்தனை
தமிழருமை யறியாத புல்லர்மேற் கவிவாணர்
தாம்பாட வேசெய் தனை

ஆதரவி லாமலிப் படிசெய்த தென்சொலா
யமலவெம தருமை மதவே
ஏனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 11

பூததயை - ஆன்மாக்கட்குச் செய்யுந்தயை, லோபி - கஞ்சன், சற்சனன் - நல்ல குணமுடைய பெரியோர், மிடி, மிடிமை - வறுமை.

பொருள்: குற்றம் அற்றவனே எமது தேவனே. உயிர்களிடம் இரக்கம் காட்டாத கஞ்சனிடத்திலே செல்வத்தைக் கொடுத்து அருளினை நன்மை புரிகின்ற நல்லோரிடம் கொடிய வறுமையைக் குடியாக்கினாய். அறத்தின் நீங்கிய அறிவிலிகளிடம் அருந்ததி போன்ற கற்புடைய காரிகையரைச்

சேர்த்தாய், அமைதியான நல்லோர்களுக்குக் குறிப்பறிந்து நடவாத கொடிய புரட்டியைக் கூட்டிவிட்டாய், உயர்குடியிலே தோன்றியவர்கள் இழிந்தவரின் பின்போய் வணங்கிப் போற்றப் புரிந்தாய், தமிழின் இனிமையைக் காணாத கயவரைக் கவிஞர்கள் பாடுமாறு செய்தாய் இவ்வாறு ஒருவருக்கொருவர் பற்றில்லாமல் செய்தது ஏன்? கூறுவாயாக.

பழையனூர் நீலி: தமிழகத்தில் வழங்கிவரும் தொன்மையான கதைகளுள் பழையனூர் நீலிக்கதையும் ஒன்று. வாய்மொழி இலக்கியம், ஏட்டிலக்கியம் ஆகிய இரண்டிலும் இடம்பெற்ற இந்தக் கதையைப் பற்றி முதன் முதலில் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். அவர், 'முனைநட்பாய், வஞ்சப்படுத்தொருத்தி வாணாற்கொள்ளும் வகைகேட்டு, அஞ்சும் பழையனூர் ஆலங்காடு' என்கிறார். சேக்கிழார் இந்நிகழ்ச்சியை விரிவுபடுத்தி, சொன்ன உறுதி மொழியைக் காக்கச் சான்றோர் உயிர்துறந்தனர் என்கிறார். அவர் 'எஞ்சலிலா வகைமுறையே பழையனூரார், இயம்புமொழி காத்தகதை சிறப்பித் தேத்தி' எனக் குறிப்பிடுகிறார். உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் நாயனார் புராணத்தில் இந்த நிகழ்ச்சியை விரிவாகக் கூறுகின்றார். அவர் பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வேளாளர் எழுபதுபேர் தீயில் விழுந்து உயிர்நீத்தனர், என்பதையும் அவர்கள் அம்பலத்தாடுவான் அடியிணைக்கீழ் பேறுபெற்றனர் என்பதையும் குறிப்பிடுகின்றார். படிக்காசுப் புலவர் தொண்டைமண்டல சதகத்தில் 'இன்னும் புகழ் நிற்க' என்னும் பாடலிலும், தமிழ் நாவலர் சரிதை ஆசிரியர் யாவரே காராளர் எல்லை பல கடந்தாங்கு பிழைத்தாரோ எனத் தொடங்கும் மூன்று வெண்பாக்களிலும், சுப்பிரதீபக் கவிராயர் கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது இலக்கியத்திலும் பழையனூர் நீலி கதையைத் தேவைக் கேற்பச் சுட்டிச் செல்கின்றனர். இக்கதை வேளாளரின் வாய்மொழி காக்கும் உறுதிப்பாட்டினை வெளிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வாய்மொழி இலக்கியத்திலும் பழையனூர் நீலி கதை செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. இராமசாமிப் புலவர் பாடிய 'பழகைநல்லூர் நீலி கதை' சு. சண்முகசுந்தரம் வெளியிட்ட 'பழையனூர் நீலி', ஆறுமுகப் பெருமாள் நாடார் வெளியிட்ட 'பழகை நல்லூர் நீலி அம்மன் கதை' ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அரு. இராமநாதன் பழையனூர் நீலி கதையை உரைநடையில் தந்துள்ளார்.

தென்பாண்டி நாட்டில் உள்ள நீலி கோயில் கொடைவிழாவில் இக்கதை வில்லுப்பாட்டாகப் பாடப்பெறுகிறது. மேலும், கணியான் பாடகர்களும் இதனைப்பாடுகிறார்கள். திருஞானசம்பந்தர் குறிப்பிடும் 'பழையனூர் ஆலங்காடு' செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தது. நீலிக்கதை தென்பாண்டி நாட்டின் இசக்கி வழிபாட்டோடு இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வாய்மொழி மரபின் பரவல் முறையால் தமிழகத்தின் பல இடங்களுக்கும் இக்கதை பரவியுள்ளது எனலாம்.

இது தொடர்பாக கூறப்படும் கதைகள்: முற்பிறப்பில் நவஞானி என்னும் பார்ப்பனியும் அவள் பிள்ளையும் அவள் கணவனால் கொலை செய்யப்பெற்றனர். அதற்குப் பழிவாங்க அடுத்த பிறப்பில் அவள் திருவாலங்காட்டில் புரிசைகிழாருக்கு மகளாகப் பிறந்தாள். அவள் பேய்த் தோற்றம் உடையவளாக இருந்ததால் ஊரார் அவளை அஞ்சி ஒதுக்கினர். அவள் காட்டில் திரிந்து கொண்டிருந்தாள். ஒரு சமயம் தரிசனச்செட்டி காட்டுவழி சென்றுகொண்டிருந்தான். அவள் அவனைத் தொடர்ந்தாள். தன்னைத் தொடர்வது பேய்தான் என்பதை அறிந்த தரிசனச்செட்டி பழையனூர் வேளாளரிடம் அடைக்கலம் புகுந்தான். பெண்ணுருக் கொண்ட பேய், தரிசனச் செட்டிதான் தன் கணவன் என்றும், தன்னைப் புறக்கணித்துவிட்டதாகவும் வேளாளரிடம் முறையிட்டது. இருவரின் மொழிகளையும் கேட்ட வேளாளர்கள்

மறுநாள் காலை வழக்கை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதாகச் சொன்னார்கள். தரிசனச்செட்டி எவ்வளவோ மன்றாடியும் கேளாமல் வேளாளர்கள் அவன் உயிர்க்குத் தாங்கள் பிணை கொடுப்பதாக வாக்களித்து அவனையும் பெண்ணுருக்கொண்ட பேயையும் அன்றிரவு தனிமனைப் படுத்தினர். மறுநாள் காலை பேயால் தரிசனச்செட்டி கொல்லப்பட்டதை அறிந்தார்கள். செட்டியின் உயிர்க்குப் பிணையாக வேளாளர்கள் எழுபது பேரும் தீ மூட்டி உயிர் துறந்தனர்.

பழையனூர் நீலி கதையின் மற்றொரு வடிவம் உள்ளது. காஞ்சிபுரத்து வணிகன் ஒருவனுக்கு இரு மனைவியர். அவன் இளையாளிடம் மோகம் கொண்டிருந்தான். அவள் தூண்டுதலால் அவன் மூத்தாளைக் கொன்றுவிட்டான். மூத்தாள் பேயாகிப் பழையனூர்க் காட்டில் திரிந்துகொண்டிருந்தாள். வணிகன் அவ்வழியே செல்ல நேர்ந்தது. பேய் அவனைப் பின் தொடர்ந்தது. நிலைமையை உணர்ந்த வணிகன் பழையனூர் வேளாளரிடம் அடைக்கலம் புகுந்தான். பெண் வடிவில் நின்ற பேய் தன்னை வணிகனின் மனைவி என்றும் இளையாளின் பேச்சைக் கேட்டுத் தன்னை அவன் புறக்கணித்துவிட்டான் என்றும் கூறியது. பொழுது சாய்ந்துவிட்டதால் வேளாளர் அன்றிரவு அவ்விருவரையும் ஒரு வீட்டில் தங்கச் செய்தனர். வணிகன் வேளாளரிடம் தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சினான். அவனுக்குத் தாங்கள் பிணை இருப்பதாக வாக்குறுதி அளித்தனர். மறுநாள் வணிகன் பேயால் கொல்லப்பட்டதை அறிந்த வேளாளர் எழுபது பேரும் உயிர் நீத்தனர்.

வாய்மொழி இலக்கியம் வேறொரு வடிவினைத் தருகிறது. பழகநல்லூர் அம்மையப்பர் திருக்கோயில் தாசி ஒருத்தியும் கோயில் பூசாரி நம்பியும் ஒருவரை ஒருவர்

விரும்பினர். தாசியின் பொருட்டுத் தன் செல்வம் எல்லாம் இழந்தான் நம்பி. தாய்க்கிழவியால் நம்பி ஊரைவிட்டுப் புறப்பட்டான். தாசி அவன் வெளியூர் செல்வதைத் தடுத்தாள் நம்பி அவளை வஞ்சகமாகக் கொன்று அவள் நகைகளையும் பறித்துக்கொண்டான். அவன் காட்டு வழியில் செல்லும் போது பாம்பு தீண்டி இறந்தான். தாசியின் தம்பியும் தற்கொலை செய்துகொண்டான்.

மறுபிறப்பில் கோயில் பூசாரி அனந்தன் செட்டியாகவும், தாசி நீலியாகவும், அவள் தம்பி நீலனாகவும் பிறந்தனர். பழகநல்லூர் மக்கள் நீலனை அழித்துவிட்டனர். நீலி பழகநல்லூர் மக்களையும் அனந்தன்செட்டியையும் பழிவாங்கக் காத்திருந்தாள். அனந்தன்செட்டி பழகநல்லூர்க் காட்டு வழியே வந்தான். நீலி அவனைத் தொடர்ந்து அன்றிரவு ஊர் உள்ளே அவனைக் கொன்றாள். மறுநாள் ஊரார் தற்கொலை செய்துகொள்ளுமாறு பழி தீர்த்தாள்.

குணக்கேடர் இயல்பு

மாறாத கலைகற்று நிலைபெற்ற சபையிலே
    வாயிலா தவனொரு பதர்
வாள்பிடித் தெதிரிவரி னோடிப் பதுங்கிடு
    மனக்கோழை தானொரு பதர்

ஏறா வழக்குரைத் தனைவருஞ் சீசீயென்
    றிகழநிற் பானொரு பதர்
இல்லாள் புறஞ்செலச் சம்மதித் தவளோ
    டிணங்கிவாழ் பவனொரு பதர்

வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
    வீண்பேசு வானொரு பதர்
வேசையர்க ளாசைகொண் டுள்ளளவு மனையாளை
    விட்டுவிடு வானொரு பதர்

ஆறாத துயரையு மிடியையுந் தீர்த்தருள்செ
யமலவெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 12

பதர் - அறிவீனன், வேசை, வேசி - விலைமகள், மிடி - வறுமை.

பொருள்: தணியாத துயரத்தையும், வறுமை யையும் போக்கி அருள்புரியும் தூயவனே. எமது தேவனே, திரிபு இல்லாத நூல்களை அறிந்தும்நிலைபெற்றஅவையிலேகற்றதைக்கூறும்திறமையற்றவன் ஒரு மக்கட் பதர். எதிரி வாளேந்திப் போருக்கு வந்தால் அஞ்சியோடி மறைந்திடும்மனஉறுதிஅற்றவன்ஒருபதர். செல்லாதவழக்கைச்செப்பி, யாவரும் சீசீ எனப் பழிக்கும்படி நிற்பவன் ஒரு பதர். தன் மனையாள் அயலான்இடத்திற்குப்போகமனம்ஒப்பி, அவளுடன்கூடிவாழ்பவன் ஒரு பதர். தன்னை மற்றவர் புகழாமல், தானே புகழ்ந்து கொண்டு வெற்றுரை யாடுபவன் ஒரு பதர். பரத்தையரிடம் காமுற்றுக் காலமெல்லாம் மனைவியைப்பிரிந்திருப்பவன்ஒருபதர்.

செய்யத்தக்கவை

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டுங்கற்ற
வழியிலே நிற்க வேண்டும்
வளைகட லிரிந்துபொருள் தேடவேண் டுந்தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்

சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்பிரிதல்
செய்யா திருக்க வேண்டும்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டுங்கொண்டு
த்யாகங் கொடுக்க வேண்டும்

ஞாலமிசை பலதரும நாட்டவேண் டும்நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும்
நம்பனிணை யடிபூசை பண்ணவேண் டும்பண்ணி
னாலுமிகு பத்தி வேண்டும்

ஆலவமர் கண்டனே பூதியணி முண்டனே
யனகவெ தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 13

நம்பன் - இறைவன், பூதியணி முண்டனே - விபூதி அணிந்த நெற்றியுடைய சிவன்.

பொருள்: நஞ்சு பொருந்திய கழுத்தை உடையவனே, திருநீறு பூசிய நெற்றியை உடையவனே, குற்றம் இல்லாதவனே, எமது தேவனே, இளமையிலே கலைகளைக் கற்க வேண்டும். கற்றவாறே நன்னெறியில் நடத்தல் வேண்டும். உலகினை வளைந்திருக்கும் கடலிலே கலம் ஊர்ந்து அலைந்து பொருளைச் சேர்த்தல் வேண்டும். சேர்த்துப் பெருகும் பொருளைக்கொண்டு அறங்களைச் செய்தல் வேண்டும். ஒழுக்கம் உடையவர்களிடம் நட்பு கொள்ள வேண்டும். அவர்களை நீங்கா இருத்தல் வேண்டும். பல செந்தமிழ்ப் பாக்களைப் புகழ் மாலையாக ஏற்றல் வேண்டும். ஏற்றுப் புலவர்களுக்குப் பரிசில் கொடுக்க வேண்டும். உலகில் அறநிலையங்கள் பல நிறுவுதல் வேண்டும். நிறுவியதோடு நில்லாமல் அவற்றை ஒழுங்காக நடத்த வேண்டும். சிவபெருமானாகிய உன்னிரு திருவடிகளிலும் வழிபாடு செய்தல் வேண்டும். வழிபாடு செய்தாலும் பேரன்பு வேண்டும்.

மேன்மேலும் முயற்சி

தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்திய முள புருடனாஞ்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன்மிக்க
தரணிபுகழ் தரு தேவனாம்

பொன்மட்டி லாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவி லிந்த்ரன்
புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பாற்று
புண்ய வானே பிரமனாம்

நன்மைதரு பதினா யிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்ப வன் செங்கமண்மா
னாளுமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நரனே மகா தேவனாம்

அன்மட்டு வார்குழலி பாகனே யேகனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 14

சந்ததம் - எப்போதும், மட்டு - தேன்.

பொருள்: இருள்போலக் கருநிறமான, மணமிக்க, நீண்ட கூந்தலை உடைய உமையம்மையை இடப்பாகத்தில் கொண்டவனே, தனி முதல்வனே, தலைமையில் சிறந்தவனே எமது தேவனே, பிறரை நாடாமல் தன் வரையில் வாழ்க்கை நடத்துவோன் திறமுடைய ஆடவன் ஆவான். எப்போதும் பதின்மரை ஆதரிப்போன் இவ்வுலகம் புகழும் சிறந்த அமரன் ஆவான். அளவின்றிப் பொருள் கொடுத்து நூறுபேரைக் காப்பாற்றுவோன். ஒப்பற்ற இந்திரன் ஆவான். உலகில் ஆயிரம் வரை ஆதரிக்கும் அறத்தலைவனே நான்முகன் ஆவான். நன்னெறி செல்லும் பதினாயிரம் பேரைக் காப்பாற்றி அருள்வோன் செந்தாமரைக் கண்ணனான திருமால் ஆவான். எந்நாளும் அவனைவிட மிகுதியாக அளவற்றவர்க்குப் கொடுக்கும் மனிதனே மகாதேவன் ஆவான்.

செயற்கருஞ் செயல்

நீர்மே னடக்கலா மெட்டியுந் தின்னலா
நெருப்பைநீர் போற் செய்யலாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலா
நீளரவி னைப்பூண லாம்.

பார்மீதில் மணலைச் சமைக்கலாஞ் சோறெனப்
பட்சமுட னேயுண் ணலாம்
பாணமொடு கு ண்டுவில கச்செய்ய லாமரப்
பாவைபே சப்பண் ணலாம்.

ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயு
மெடுக்கலாம் புத்தி சற்று
மில்லாத மூடர்த மனத்தைத் திருப்பவே
எவருக்கு முடியாது காண்

ஆர்மேவு கொன்றைபுனை வேணியா சுரர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 15

பொருள்: விரும்பிய ஆத்தியையும், கொன்றையையும் புனைந்த சடைமுடியுடையவனே, வானவர் வாழ்த்தும் தூயவனே, அருமை தேவனே, தண்ணீரின் மேல் நடந்து செல்லலாம். கசப்புடைய எட்டிக்காயையும் தின்னலாம், வெப்பமுடைய தீயைக் குளிர்ந்த நீரைப்போல் ஆக்கலாம். நீண்ட பெரிய வேங்கையைக் கட்டித்தழுவலாம். நஞ்சுடைய நீண்ட பாம்பினை மேலே அணிந்து கொள்ளலாம். உலகத்திலே மணலைச் சோறாகச் சமைக்கலாம். அன்புடன் அந்த மணல் சோற்றை உண்ணலாம். அம்பையும், துப்பாக்கி, பீரங்கி ஆகியவற்றின் குண்டு களையும் நம் மீது படாமல் விலகும் வண்ணம் புரியலாம். மரப் பதுமையைப் பேசும்படி செய்யலாம். அழகிய காடியையும் கடைந்து வெண்ணையையும் எடுக்கலாம். ஆனால் சிறிதும் அறிவற்ற பேதையரின் உள்ளத்தைச் சீர்ந்திருந்த யாவருக்கும் இயலாது.

நல்லோர்

செய்ந்நன்றி மறவாத பேர்களு மொருவர்செய்
தீமையை மறந்த பேருந்
திரவியந் தரவரினு மொருவர்மனை யாட்டிமேற்
சித்தம்வை யாத பேரும்

கைகண் டெடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொருளாளர்
கையிற் கொடுத்த பேருங்
காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி
காத்தருள் செய்கின்ற பேரும்

பொய்யென்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகழாத நிலைகொள் பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
பொய்மையுரை யாத பேரும்

ஐயவிங் கிவரெலாஞ் சற்புருடரென் றுலகி
லகமகிழ்வ ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 16

காசினி - (உலகம்) பூமி

பொருள்: அருமை தேவனே, ஒருவர் செய்த உதவியை மறவாதவரும், ஒருவர் செய்த தீமையை மறந்தவர்களும், பொருளைக் கொடுத்தாலும் பிறர் மனைவியின்பால் மனத்தைச் செலுத்தாதவர்களும், கையிலே கண்டெடுத்த பொருளைப் பொருளுக்கு உரியவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தவர்களும், உலகில் ஒருவர் செய்த அறம் கெடுதலுறாமல் காப்பாற்று கின்றவரும், நிலையற்ற செல்வத்தைக் கோடிக்கணக்கில் ஒருவர் கொடுத்தாலும், அழிவழக்குக் கூறாத நிலையுடையவரும், உலகத்திலேதலையே போகும் என்றாலும் கனவிலேயேயும் பொய் கூறாதவரும், இவ்வுலகில் இத்தகையோர்கள் யாவரையும் அழகிய நன்மக்கள் என்று உலக மாந்தர் மனம் களிப்பார்கள்.

நல்லோர்

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்காக்கு
மவனே மகா புருடனா
மஞ்சாம லெதுவரினு மெதுபோ கினுஞ்சித்த
மசைவிலான் மகா தீரனாம்

தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாது செய்கின்ற
தோன்றலே மகா ராஜனாம்
தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகா மேருவாம்

அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த் திரட்சிக்கு
மவனே மகா த்யாகியா
மவரவ தராதர மறிந்துமரி யாதைசெயு
மவனே மகா வுசிதனாம்

அடர்கின்ற முத்தலைச் சூலனே லோலனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 17

இடர் - துன்பம், உசிதனாம் - யோக்கியதையுள்ளவன்.

பொருள்: கொல்லுகின்ற முத்தலைச் சூலம் ஏந்தியவனே, திருவிளையாடல் புரிகின்றவனே, குற்றம் அற்றவனே, அருமை தேவனே அடைக்கலம் என்று தேடி வருவோர்களைக் காப்பாற்றுவோன் மக்களில் சிறந்தவன். எது வந்தாலும் எது போனாலும் அச்சம் இன்றி உள்ள உறுதியுடன் இருப்பவன் பெருவீரன். ஒன்றைப் பற்றிக் கூறிய சொல்லை நழுவ விடாமல் செய்கின்ற தலைவனே பேரரசன். வீண்பழி தூற்றி மனத்தைக் கலைப்பவரின் சொல்லை நம்பாத செல்வனே மாமேருமலை. தன்னைச் சார்ந்தோர்க்கு வரும் துன்பத்தை நீக்கிக் காப்பவனே பெரிய வள்ளல். ஒவ்வொருவருடைய தகுதியையும் பார்த்து மதிப்புக் கொடுக்கின்றவனே சிறந்த தகவாளன்.

இல்லை

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
கயவர்க்கு மேன்மை யில்லை
கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணை யில்லை

தாமெனு மயக்கறுத் தோங்குபெரி யோர்க்குவரு
ஜாதிகுல மென்ப தில்லை
தாக்ஷண்யமுடையபேர்க் கிகலில்லை யெங்குமொரு
சார்பிலார்க் கிடம தில்லை

பூமிக்கு ளீயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தொன்று மில்லை
புலையர்க்கு நிசமில்லை கைப்பொரு ளிலாததோர்
புருடக் கொன்று மில்லை.

யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனே
யன்புடைய வருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 18

பொருள்: இருளுக்கு ஒப்பான கழுத்தினையுடைய முதல்வனே, அன்புள்ள அருமை தேவனே, காம மயக்கம் உடையவர்க்கு முறை தோன்றாது, பரத்தையருக்கு வெட்கம் இருக்காது, தாழ்ந்தவருக்கு உயர்வு வராது, கன்னம் வைக்கும் திருடருக்கு இருளில் அச்சம் தோன்றாது. நாம் எனும் மயக்கத்தை நீக்கி மேன்மை பெற்ற சான்றோர்களுக்குச் சாதியும் குலமும் தேவையில்லை, கண்ணோட்டமுள்ளவர்களுக்குப் பகைவர் உண்டாக மாட்டார். ஓரிடத்தும் ஆதரவு அற்றவர்க்கு இடம் கிடையாது. வறியவர்களுக்கு கொடாதோருக்கு உலகத்தில் நிறைந்த புகழ் எப்போதும் ஏற்படாது. இழிந்தவருக்கு உண்மையிராது. கையில் பொருள் இல்லாதவனுக்கு எந்த நலனும் இல்லை.

நிலையாமை

காயமொரு புற்புதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டி லாற்றின் பெருக்காங்
கருணைதரு புதல்வர்கிளை மனைமனைவி யிவையெலாங்
கானல் காட்டும் ப்ரவாகம்

மேயபுஜ பலவலிமை யிளமையழ கிவையெலாம்
வெயில்மஞ்ச ளுயிர் தானுமே
வெட்டவெளி தனில்வைத்த தீபமென வேகருதி
வீண்பொழுது போக்கா மலே

நேயமுட னேதெளித் தன்பொடுன் பாதத்தி
னினைவுவைத் திரு போதிலு
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க
நிமலனே யருள்புரி குவாய்

ஆயுமறி வாளர்பணி பாதனே போதனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 19

காயம் - உடம்பு, புற்புதம் - நீர்க்குமிழி, நிமலன் - கடவுள்
வெயில் மஞ்சள் - சிறிது நேரமே இருக்கும் மஞ்சள் வெயில்.

பொருள்: ஆராயும் அறிஞர்கள் வணங்கும் திருவடிகளை உடையவனே, அறிவின் வடிவே, தலைவனே எமது தேவனே. உடல் ஒரு நீர்க்குமிழி. வாழ்க்கையோ மலையைச்சுற்றி உள்ள கானகத்தில்ஓடும் ஆற்றின் வெள்ளம் ஆகும், அருளுக்கிடமான மக்களும் உறவினரும் வீடும் இல்லாளும் ஆகிய இவைகளெல்லாம் பேய்த் தேரிலே காணப்படும் வெள்ளம், நம்மிடம் பொருந்திய தோள் ஆற்றலும் இளம் பருவமும் அழகும் ஆகிய இவைகள்

மஞ்சள் வெயில் அதாவது இளவெயில் போன்றது, உயிரும் திறந்த வெளியில் ஏற்றப்பெற்ற விளக்கு என்றே நினைந்து வீணே காலத்தைக் கழிக்காமல் தெளிவடைந்து உன் திருவடிகளிடையே நட்பு வைத்து அன்புடன் நினைத்து காலையிலும் மாலையிலும் நீரையும் பூவையும் கொண்டு அன்புடன் வழிபட அருள் புரிவாயாக.

காட்டாறு விரைவில் வற்றிவிடும். வேனிற் காலத்தில் நன்பகலில் திறந்த வெளியில் நீர்ப்பெறுக்கென்று நினைக்குமாறு தோன்றுவதே கானல் அல்லது பேய்த்தேர் எனப்படும். இது பொய்த்தோற்றம்.

திருமகள் இருப்பிடம்

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மா மனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
நறைகொண்ட பைந் துளவிலே

கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயி றனிலே
கடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக் கதனிலே

பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர் பாலிலே
பூந்தடந் தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத் தின் சிரசிலே

அற்பெருங் கோதைமலர் மங்கைவா ழிடமென்ப
ரண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 20

கூவிளந் தரு – வில்வமரம், துளவு, துளவம் – துளசி, கடி–காவல்

பொருள்: தலைவனே எமது தேவனே அழகிய குதிரையின் முகத்திலும், அரசரின் இடத்திலும், நாகரிகம் அறிந்தவர்கள் வீட்டிலும், தாமரை மலரிலும், வில்வ மரத்திலும், மணமுடைய பசிய திருத்துழாயிலும், கற்புடைய மங்கையின் வடிவத்திலும், கடலிலும், துகிற் கொடியிலும், திருமண வீட்டின் வாயிலிலும், காவலுடைய நகரத்திலும், நல்ல செந்நெல் விளைவிலும், ஒளி வீசும் விளக்கிலும், அழகுறும் சங்கிலும், பெரியோர் மொழியிலும், பொய் மொழியாதவர்கள் இடத்தும், மலர்ப் பொய்கையிலும், பாற்குடத்திலும், யானையின் தலையிலும், இருண்ட நீண்ட கூந்தலை உடைய திருமங்கை வாழும் இடம் என்பர் அறிஞர்.

மூதேவி இருப்பிடம்

மிதமின்றி யன்னம் புசிப்போ ரிடத்திலு
மிகுபாஷையோ ரிடத்தும்
மெய்யொன் றிலாமலே பொய்பேசி யேதிரியு
மிக்கபா தக ரிடத்தும்

கதியொன்று மிலர்போல் மலினங் கொளும்பழைய
கந்தை யணிவோ ரிடத்துங்
கடிநா யெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத
கன்னி வாழ் மனை யகத்தும்

ததிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ்
சார்ந்த வாட்டின் றிரளிலுஞ்
சாம்பிண முகத்திலு மிவையெலாங் கவலைபுரி
தௌவைவா ழிடமென் பர்காண்

அதிரூப மலைமங்கை நேசனே மோழைதரு
மழகனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 21

ததி - த.யிர், கர்த்தபம் - கழுதை, சாம்பிண முகம் - இறந்து கிடக்கும் பிணத்தின் முகம், தௌவை - மூதேவி.

பொருள்: பேரழகுடைய மலைமகளின் கணவனே, மோழை என்பான் பெற்ற அழகனான எமது தேவனே, சோற்றை அளவின்றி உண்பவரிடத்திலும், மிகைபடப் பேசுகின்றவர்களிடத்திலும், ஒரு மெய்யும் கலவாமல் எப்போதும் பொய்யினையே கூறி அலைகின்ற மிகவும் கொடியவரிடத்திலும், சிறிதும் வழியற்றவரைப் போலக் கிழிந்த பழைய கந்தையை உடுப்பவரிடத்திலும், வெறிநாய் போல சினந்து பேசி ஒருவரையும் அணுக விடாத பெண் ஒருத்தி வாழும் இல்லத்திலும், தயிர்ப் பானையிலும் , கழுதைகளின் குழுவிலும், கூடிய ஆட்டு மந்தையிலும், இறந்த பிணத்தின் முகத்திலும், இவை யாவும் கவலையை உண்டாக்கும் மூத்தவள் வாழும் இடம் என்று அறிஞர் கூறுவர்.

பாஷை எனும் வடமொழிபாடையெனத் தமிழ் ஒலி பெற்றது. இவ்வாறு வருவது தற்பவம். பாஷை - மொழி, தவ்வை - மூத்தவள், இலக்குமிக்கு மூத்தவள்.

இருநிலையினும் பயனற்றவை

குணமற்ற பேய்முருங் கைத்தழை தழைத்தென்ன
　　குட்டநோய் கொண்டு மென்ன
குறைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
　　கொஞ்சமாய்ப் போகி லென்ன

மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
　　மலராது போகி லென்ன
மதுரமில் லாவுவர்க் கடனீர் கறுத்தென்ன
　　மாவெண்மை யாகி லென்ன

உணர்வற்ற பேய்ச்சுறை படர்ந்தென்ன படரா
துலர்ந்துதான் போகி லென்ன
வுதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன
வோங்கு மிடிவரி லென்னகாண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே
யாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 22

மதுரம் - இனிமை

பொருள்: அழகான புதிய கொன்றை மாலையை அணிகலனாகக் கொண்டவனே, முதல்வனே, அருமை தேவனே, நல்ல குணம் இல்லாத பேய் முருங்கைத் தழைத்தால் என்ன பயன்? குட்டநோய் அடைந்தாலும் என்ன பயன்? குரைக்கும் நாயின் மடியில் பால் சுரந்தால் என்ன பயன்? பெருகாமல் கொஞ்சமாக இருந்தால்தான் என்ன பயன்? மணமில்லாத செம்முருக்கின் மலர் நன்கு மலர்ந்து என்ன பயன்? மலராமல் குவிந்திருந்தால்தான் என்ன பயன்? சுவையில்லாத உப்புக்கடலின் நீர் கருநிறமாக இருந்தால் என்ன பயன்? தூய வெண்மையாக ஆனால்தான் என்ன பயன்? உண்ணத்தகாத பேய்ச்சுரைக்கொடி படர்ந்து என்ன பயன்? படராமல் காய்ந்து போனால்தான் என்ன பயன்? பிறருக்குப் பயன்படாதவருக்கு சிறந்த வாழ்வு வந்தால் என்ன பயன்? பெரிய வறுமை வந்தால்தான் என்ன பயன்? மற்றவருக்குப் பயன்படாப்பொருளின் வாழ்விலும் தாழ்விலும் எப்பயனும் பிறர்க்கு இல்லை.

குறைந்தாலும் பயன்படல்

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினுஞ்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினு மதுகொண்டு
சார மதுரங் குறையுமோ

நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதி
 னீள்குண மழுங்கி விடுமோ
நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தி
 னிறையு மாற்றுக் குறையுமோ

கறைபட்ட பைம்புயன் மறைத்தாலு மதுகொண்டு
 கதிர்மதி கனம் போகுமோ
கற்றபெரி யோர்மகிமை யற்பரறி கிலரேனுங்
 காசினி தனிற் போகுமோ

அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
 ஐயனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. 23

பொருள்: அறிவுடையோரைப் பிரிந்து செல்லாத தலைவனே, முதல்வனே, அருமை தேவனே, வெட்டப் பெற்ற சந்தனக்கட்டை குறைவுபட்டாலும் அதனிடம் உள்ள நறுமணம் குறையுமோ ? நல்ல பால் வற்றிடக் காய்ச்சினாலும் அதனாலேயே அதனிடம் உள்ள சாரமான இனிமை வற்றுமோ ? நிறைந்த பேரொளியையுடைய மணி அழுக்கு அடைந்தாலும் அம்மணியின் உயர்ந்த ஒளிப்பண்பு குறைந்து விடுமோ ? பொன்னை நெருப்பிலே உருக்கினாலும் தகடாக அடித்தாலும் அதனிடம் நிறைந்த மாற்று குறைந்து விடுமோ? கருமை பொருந்திய கார்முகிலானது ஞாயிற்றையும், திங்களையும் மறைத்தாலும் அக்காரணத்தால் அவற்றின் பெருமை கெடுமோ ? படித்த பெரியோரின் மேன்மையை அறிவில்லாதவர் அறியா விட்டாலும் அதனால் உலகிலே அவர் பெருமை நீங்குமோ ?

இதற்குதவி செய்வது இதுவெனல்

வானவர் பிதிர்க்கள்முச் சுடர்மூவர் கோள்கட்கும்
வாழ்வுதரு முதவி புவனம்
வளமிக்க புவனந் தனக்குமேன் மேலுதவி
வாழ்வுபெற் றிடு மன்னராம்
தேனமர் நறுந்தொடையல் புனைமன்ன வர்க்குதவி
சேர்ந்தகுடி படை வர்க்கமாஞ்
சேர்குடி படைக்குதவி விளைபயிர் பயிர்க்குதவி
சீர்பெற வழங்கு மழையாம்
மேனிமிர் மழைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தம் நீதி யொன்று
வேதிய ரொழுக்கமொன் றிம்மூன்று மேயென்று
மிக்கபெரி யோருரை செய்வார்
ஆனமர் நெடுங்கொடி யுயர்த்தவெம் மிறைவனே
யதிபனே யருமை மதவே
ஏனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 24

நறுந்தொடையல் - மணமிக்க மாலை.

பொருள்: ஏறு எழுதிய நீண்ட கொடியை உடைய எம் தலைவனே, அரசனே, அருமை தேவனே, அமரரும், தென்புலத்தாரும், ஞாயிறு திங்கள் தீ என்னும் முச்சுடரும் பிரமன் திருமால் உருத்திரன் என்னும் முத்தலைவரும் ஒன்பது கோள்களும் வாழ்வதற்கு உதவி செய்வது இவ்வுலகம். செழிப்பு மிகுந்த உலகத்திற்கு மேலும் மேலும் துணையாவார் வாழ்வில் செழிந்த அரசர்கள் ஆவர். தேன் பொருந்திய மணமலர்த் தார் அணிந்த அரசர்களுக்குத் துணை மன்னரைச் சார்ந்த குடிகளும் படையும் ஆகிய குழுவாகும். கூடிய குடிகளுக்கும், படைகளுக்கும் துணையாவது விளைந்த

பயிராகும், பயிருக்கு துணையாவது சிறப்புறப்பெய்யும் மழையாகும். வானத்தில் ஓங்கிப் பரவிப் பெய்யும் மழைக்குத் துணையாவன இளமங்கையரின் கற்பு ஒன்றும், மன்னர்களின் முறைமை ஒன்றும், அந்தணரின் ஒழுக்கம் ஒன்றும் ஆகிய இவை மூன்றுமே என்று சிறந்த சான்றோர் கூறுவர்.

வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை
நீதி மன்னர் நெறியினுக்கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே

என்னும் விவேகசிந்தாமணியின் கருத்து இங்கு வந்துள்ளது.

மன்னரும், வேதியரும், மாதரும் ஒழுக்கம் தவறாது இருப்பின் உலகியல் ஒழுங்காக நடைபெறும்.

இதனைக்கண்டு மகிழ்வது இதுவெனல்

தந்தைதாய் மலர்முகங் கண்டுநின் றாலிப்ப
தவர்தந்த சந்ததிய தாஞ்
சந்த்ரோ தயங்கண்டு பூரிப்ப துயர்வாவி
தங்குபைங் குமுத மலராம்

புந்திமகிழ் வாயிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்கு தாமரை மலர்களாம்
போதவும் புயல்கண்டு கண்களித் தேநடம்
புரிவது மயூர வினமாம்

சிந்தைமகிழ் வாயுதவு தாதாவி னைக்கண்டு
சீர்பெறு திரவலர் குழாந்
திகழ்நீதி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செகமெலா மென்பர் கண்டாய்

அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே
யமலனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 25

ஆலிப்பது - மகிழ்வது, இரவி - சூரியன், மயூரம் - மயில், தாதா - வள்ளல்.

பொருள்: அழகிய அந்தி வானம் போலச் சிவந்த சடைக்கற்றையுடையவனே, குற்றமற்றவனே, அருமை தேவனே , பெற்றோரின் மலர்முகத்தைக் கண்டு பூரிப்பது அவர்கள் பெற்ற வாரிசு ஆகும், திங்களின் வருகை நோக்கி மலர்வது உயர்ந்த பொய்கையிலே அமைந்த புதிய அல்லி மலர் ஆகும். மனம் மகிழ்வாக ஞாயிறு எழுதல் நோக்கி மனம் களிப்பன மிகுதியான தாமரைப் பூக்கள் ஆகும், முகிலை நன்றாகப் பார்த்துக் கண் களித்து நடனம் புரிவது மயிலின் கூட்டம் ஆகும். மனக்களிப்புடன் கொடுக்கும் கொடையாளியைக் கண்டு சிறப்புறுவது இரவலர் கூட்டம், விளங்கும் முறை தவறாத மன்னரைப் பார்த்து மகிழ்வது இந்நிலவுலகம் யாவும் என்று அறிஞர் கூறுவர்.

ஆகாதவை

உள்ளன் பிலாதபேர் தித்திக்க வேபேசி
யுறவாடு முறவு முறவோ
வுபசரித் தன்புடன் பரிமாறி டாதசோ
றுண்டவர்க் கன்ன மாமோ

தள்ளாதிருந் துகொண்டொருவர் போய்ப்பார்த்து வரு
தக்கபயிர் பயி ராகுமோ
தளகர்த்த னொருவனில் லாமல்முன் சென்றிடுந்
தானையுந் தானை யாமோ

விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்ப மாமோ
வெகுகடன் பட்டபேர் செய்கின்ற சீவனமு
மிக்கசீ வனமாகு மோ

அள்ளா திருங்கருணை யாளனே தேவர்தொழு
மாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரப்பளீ சுர தேவனே. 26

தானை - படை, போதகம் -இளமை

பொருள்: குறையாத பேரருளாளனே, அமரர் வணங்கும் முதல்வனே அருமை தேவனே மனத்திலே அன்பு இல்லாதவர்கள் இனிமையாகப் பேசி உறவாடுகின்ற போலி உறவும் உறவாகுமோ ? அன்போடு முகமன் கூறிப் படைக்காத சோற்றை உண்டவர்க்கு நலம் தரும் உணவு ஆகுமோ ? ஊக்கமின்றி வீட்டில் அமர்ந்து கொண்டு மற்றொருவர் சென்று பார்த்துவரும் பயிர் நல்ல பயன் தருமோ ? படைத் தலைவன் ஒருவன் இல்லாமல் முன்னோக்கிச் செல்லும் படையும் வெற்றிதரும் படை யாகுமோ ? இன்பம் அடைவதற்கு தகுதி அற்ற வாறு உள்ள பெண்ணின் மேல் உண்டாகும் ஆசையும் மகிழ்வு தரும் ஆசையாகுமோ ? மிகுந்த கடன் கொண்டவர்கள் நடத்தும் வாழ்க்கையும் இனிய வாழ்க்கை ஆகுமோ ?

நற்குணங்களுக்கு இடமாகாதவர்

வெறிகொண்ட மற்கடம் பேய்கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ் சொறிப் புதறிலே
வீழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்க மெள்ளளவு
மேவுமோ மேவாது போல்

குறைகின்ற புத்தியா யதிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமை யுண்டாய்க்
கொஞ்சமா மதிகார முங்கிடைத் தால்மிக்க
குவலயந் தனி லவர்க்கு

நிறைகின்ற பத்தியுஞ் சீலமும் மேன்மையு
நிதானமும் பெரியோர்கண் மே
னேசமு மீகையு மிவையெலாங் கனவிலும்
நினைவிலும் வராது கண்டாய்

அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 27

மற்கடம் - குரங்கு, குவலயம் - உலகம்.

பொருள்: புகழப்படுகின்ற மறையின் பொருளான கொடையாளியே, தலைவனே அருமை தேவனே, வெறி பிடித்த ஒரு குரங்கு பேயால் பிடிக்கப்பட்டு, கள்ளையும் குடித்து மேலும் கொடிய பூனைக்காஞ்சொறி புதரிலே விழுந்து, தேளாலும் கொட்டப்பெற்றால் அக்குரங்கிற்கு சிறிதளவேனும் நன்னெறியிலே செல்லும் நிலை உண்டாகுமோ ? தோன்றாததுபோல் சிற்றறிவுடன் மேலும் இழி செயலுடைய குலத்தினராய் அவற்றுடன் இளமைப் பருவமும் உடையவராய் இருந்து அவர்களுக்கு சிறிது தலைமைப் பதவி கிடைத்தாலும் உலகத்தில் நிறைந்த கடவுள் அன்பும், ஒழுக்கமும் பெருந்தன்மையும் அமைதியும் அறிஞர்களிடம் நட்பும், கொடைப்பண்பும் ஆகிய இவைகள் யாவும் நினைவிலே அன்றிக் கனவிலும் உண்டாகாது.

சுருதி - காதாற் கேட்கப்படும் வேதம். காஞ்சொறி உடம்பில் பட்டவுடன் தினவை உண்டாக்கும் ஒருவகைப் பூடு. அற்பசாதி பிறருக்குப் பயன்படாமலும் தீமை செய்து கொண்டும், மற்றவரைக் துன்புறுத்தியும் உயர்ந்த பண்பு பதியப்பெறாத பரம்பரை. இயல்பாகவே குறும்பு செய்யும் குரங்கு வெறி கொண்டு, பேய் பிடித்து, கள்ளைக்குடித்துத் தினவெடுத்துத் தேள் கொட்டுதலையும் பெற்றால் செய்யும் பிழைகள் போலவே, இயல்பாகவே சிற்றறிவுடைய

பரம்பரையிலே பிறந்தவர்களுக்கு இளமையும் தலைமைப் பதவியும் கிடைத்தால் தவறுகள் செய்வார்களேயன்றி, நலம் புரியமாட்டார்கள். அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பர் என்பது கருத்து.

இதனால் இன்ன முறையனாம் எனல்

தன்னால் முடிக்கவொண் ணாதகா ரியம்வந்து
தான்முடிப் போன் றமையனாந்
தன்றலைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
றாய்தந்தை யென்ன லாகும்

ஒன்னார் செயுங்கொடுமை யால்மெலிவு வந்தபோ
துதவுவோ னிட்ட தெய்வம்
யுத்திபுத் திகள்சொல்லி மேல்வருங் காரிய
முறைப்பவன் குரு வென்னலாம்

எந்நாளும் வருநன்மை தீமைதன தென்னவே
எண்ணிவரு வோன் பந்துவா
மிருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவ
னெவனெனினு மவனே சுதன்

அந்நார மும்பணியு மெந்நாளு மேபுனைய
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 28

சுதன் – மகன், இராஜகுமாரன், நாரம் – கங்கை.

பொருள்: அழகிய நீரையும் (கங்கை) பாம்பையும் எப்போதும் அணிந்துள்ள பெரியோனே, அருமை தேவனே, தன்னாலே முடித்து வைக்க முடியாத அலுவலை முடித்து வைக்கும் ஒருவன் தனக்கு முன் பிறந்தோன் ஆவான், தனக்கு தலைபோகத் தக்க துன்பம் வந்த பொழுது அதிலிருந்து

மீட்போன் அன்னையும் தந்தையும் ஆவான், பகைவர் செய்கின்ற தீமையால் நலிந்த காலத்தில் துணை செய்பவன் வழிபடுகின்ற தெய்வம் ஆவான், தொழில் செய்யும் முறைமையையும் அறிவுரையையும் ஊட்டி எதிர்காலத்தில் வரும் பயனையும் மொழிபவன் ஆசிரியன் எனலாம், வரக்கூடிய நன்மை தீமைகளை எப்போதும் தலக்கு வந்தவைகளாக நினைத்துத் தன்னுடன் நட்பு பூண் டு வருவோன் உறவினன் ஆவான், மனமறிந்து தன்மொழி தவறாது நடக்கின்றவன் யாராயினும் அவனே மகன் ஆவான்.

அவரவரிடத்து நடக்குமுறை

மாதா பிதாவினுக் குள்ளன்பு டன்கனிவு
மாறாத நல் லொழுக்கம்
மருவுகுரு வானவர்க் கினியவுப சாரமுள
வார்த்தை வழிபா டடக்கம்

காதார் கருங்கண்மனை யாடனக் கோசயன
காலத்தி னயபா ஷணங்
கற்றபெரி யோர்முதியர் வருமாது லர்க்கெலாங்
கருணைசே ரருள் விதானம்

நீதிபெறுமன்னவ ரிடத்ததிக பயவிநயம்
நெறியுடைய பேர்க் கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ் வுடன்பரிவு
நேரல ரிடத்தில் வயிரம்

ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகுமெம
தையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 29

நய பாஷணம் - சுகமளிக்கும் சொற்கள், ஆதுலர் - வறியவர்,
தமர் - சுற்றதக்கார், விதானம் - வணக்கம், நேரலர் - பகைவர்.

பொருள்: எமது தலைவனே, அருமை தேவனே, பெற்றோர்களிடம் உள்ளம் நிறைந்த அன்பும் குழைவும் இடையறாத ஒழுக்கமும் வேண்டும், பொருந்திய ஆசிரியரிடம் இனிய முகமனுடன் கூடிய பேச்சும் வழிபாடும் அடக்கமும் வேண்டும், காது வரையில் நீண்ட கரிய கண்களை உடைய மனையாளிடம் படுக்கையில் இனிய பேச்சு வேண்டும், நாடி வருகின்ற பெரியோர்கள், வயது முதிர்ந்தோர்கள், வறியவர்களிடம் மிகுதியும் இரக்கமும் பெருங்கொடையும் வேண்டும், அறநெறி வழுவாத மன்னரிடத்து மிகுந்த அச்சமும் வணக்கமும் வேண்டும், நன்னெறி செல்வோரிடம் இனியன செய்தல் வேண்டும், நட்புடைய உறவினரிடம் உளங்கனிந்த அன்பு வேண்டும். பகைவனிடம் மாறாத சினம் வேண்டும், இவையெலாம் பழைய மனுவினால் எழுதப்பெற்ற நூல் கூறும் முறைமை ஆகும்.

மனையாளிடம் படுக்கையறையில் இனியமொழி வேண்டும் என்பதால் மற்ற நேரங்களில் கூடாது என்பது கருத்தன்று. "காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" ஆகையால் முற்றிய இன்பம் அடைவதற்கு மனைவியின் மகிழ்ச்சியும் வேண்டும் என "சயன காலத்தில் நய படாணம்" என்றார். படாணம் வடமொழியில், தமிழில் பேச்சு (பாஷணம் என்பதன் தற்பவம்) வயிரம் -நீங்காச் சினம் இதனைச் செற்றம் எனவும் கூறுவர். பகைவர் மொழியால் ஏமாந்து போதல் கூடாதென்பதற்கு இவ்வாறு கூறினார்-

தேரான் தெளிவும் தெளிந்தார்கண் ஐயுறவும்
தீரா இடும்பைத் தரும்.

என்கிறார் வள்ளுவர்

குணத்தைவிட்டுக் குற்றத்தை ஏற்றல்

துட்டவிக டக்கவியை யாருமே மெச்சுவார்
சொல்லுநற் கவியை மெச்சார்
துர்ச்சனர்க் ககமகிழ்ந் துபசரிப் பார்வருந்
தூயரைத் தள்ளி விடுவார்
இட்டமுள தெய்வந் தனைக்கரு திடார்கறுப்
பென்னிலோ போய்ப் பணிகுவா
ரீன்றதாய் தந்தையைச் சற்றுமதி யார்வேசை
யென்னிலோ காலில் வீழ்வார்
நட்டலா பங்களுக் குள்ளான பந்துவரி
னன்றாகவே பேசிடார்
நாளுமொப் பாரியாய் வந்தபுத் துறவுக்கு
நன்மை பலவே செய்குவார்
அட்டதிசை சூழ்புவியி லோங்குகலி மகிமைகா
ணத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 30

பந்து – உறவினர்.

பொருள்: தலைவனே, அருமை தேவனே, எல்லோருமே தீய விகடக் கவிஞனைப் புகழ்வார்கள், புகழ்ந்து கூறத்தக்க நல்ல கவிஞனைப் புகழமாட்டார்கள். தீயவரை மனமகிழ்ச்சியுடன் ஆதரிப்பார். நல்லோரை ஆதரிக்க மாட்டார்கள், விருப்பமான தெய்வத்தை நினையார், பேய் என்றால் சென்று வணங்குவர், பெற்ற தாய் தந்தையரைச் சிறிதும் மதிக்கமாட்டார், பரத்தை என்றால் காலில் விழுந்து வணங்குவர், இன்ப துன்பங்களுக்கு உட்பட்ட உறவினர் வந்தால் மனம் விட்டுப் பேசமாட்டார். ஒப்புக்கு வந்த புதிய உறவினருக்கு எப்போதும் பலவகை

நன்மைகளும் புரிவர், இவை எட்டுத் திக்குகள் சூழ்ந்த உலகில் கலியுகத்தின் பெருமை.

இட்டம் - இஷ்டம் என்பதன் தற்பவம். அட்டம் என்பதும் அஷ்டம் என்பதன் தற்பவம். கறுப்பு - பேய் உலக வழக்குச் சொல் பேய் என்பதும் பே என்றும் அச்சப் பொருளைத்தரும் உரிச்சொல்லின் திரிபே ஆகும். துர்ச்சனன்- தீயர்.

குணங்காணும் குறி

கற்றோர்க ளென்பதைச் சீலமுட னேசொலுங்
கனவாக்கி னாற் காணலாங்
கற்புளா ரென்பதைப் பார்க்கின்ற பார்வையொடு
கானடையி லுங் காணலாம்

அற்றோர்க ளென்பதனை யொன்றிலும் வாரா
வடக்கத் தினா லறியலா
மறமுளோ ரென்பதைப் பூததயை யென்னுநிலை
யதுகண்டு தானறிய லாம்

விந்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினால்
விளையு மென்றே யறியலாம்
வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய
விசேடத்தி னாலறிய லாம்

அத்தா குணத்தினாற் குலநலந் தெரியலா
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 31

பொருள்: தலைவனே, பெரியோனே, அருமை தேவனே, ஒழுக்கமுடன் பேசும் உயர்ந்த மொழியினால் படித்தவர்கள் என்பதை அறியலாம், பார்க்கின்ற பார்வையாலும் காலின் நடையினாலும் கற்பு உடைய

பெண்கள் என்பதை அறியலாம். எதனிலும் தாமே பெரியவர் என்று எண்ணாத அடக்கமான பண்பினால் தற்பெருமை அற்றவர்கள் என உணரலாம். உயிர்களிடம் இரக்கம் என்னும் நிலையைக் கண்டுதான் அறநெறியாளர் என உணரலாம், கிளைத்து வரும் செழிப்பினால் விதையிலிருந்து வளரும் பயிரை விளையும் என்று உணரலாம். மேம்பட்டு வரும் அஞ்சாமைச் சிறப்பினால் வீரம் உடையோர் என உணரலாம்.

கூடிற் பயன்படல்

செத்தைபல கூடியொரு கயிறாயி னதுகொண்டு
திண்கரியை யுங் கட்டலாந்
திகழ்ந்தபல துளிகூடி யாறாயின் வாவியொடு
திரளேரி நிறை விக்கலாம்

ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்துநூ லாயிடி
னுடுத்திடுங் கலை யாக்கலா
மோங்கிவரு கோலுடன் சீலையுங் கூடினா
லுயர்கவிகை யாக் கொள்ளலாம்

மற்றுமுயர் தண்டுலத் தோடுதவி டுமிகூடின்
மல்குமுளை விளை விக்கலாம்
மனமொத்த நேயமொடு கூடியொரு வர்க்கொருவர்
வாழின்வெகு வெற்றி பெறலாம்

அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 32

கரி – யானை, வாவி – குளம், கலை–சீலை, கவிகை–ஈதல், கவிதல், குடை.

பொருள்: அறுபட்ட பழத்தை திரும்பவும் மரத்திலே சேர்த்த திருமாலும் பிரமனும் தேடியும் காணற்கு அருமையான தூயவனே, அருமை தேவனே, பல வைக்கோல்தாள்கள்

சேர்ந்து ஒரு கயிறு. ஆனால், அக் கயிற்றினைக் கொண்டுதான் வலிமையான யானையையும் கட்ட இயலும், விளங்கும் பல நீர்த்திவலைகள் கூடி ஆறு. ஆனால், குளத்தையும் திரண்ட பல ஏரிகளையும் நிறையச் செய்யலாம். சமமான நுண்ணிய பல பஞ்சு கூடி நூலானால் அணியும் ஆடையாக்கலாம். உயர்ந்து வளர்ந்த கோலோடு துணியும் சேர்ந்தால் உயர்ந்த குடையாகக் கொள்ள முடியும், மேலும், மேம்பட்ட அரிசியும் தவிடும் உமியும் கூடியிருந்தால் வளம் மிகுந்த முளையைத் தோற்றுவிக்கலாம். உள்ளம் கலந்த அன்புடன் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழ்ந்தால் பெரு வெற்றியை அடையலாம்.

அற்ற கனியைப் பொருத்தல் : பாண்டவர்கள் காட்டில் வாழும்போது ஒரு முனிவர்க்குப் பயன்படும் நெல்லிக்கனி ஒன்றை அருச்சுனன் பாஞ்சாலிக்காக அறுத்துவிட்டான். பிறகு உண்மையுணர்ந்து கண்ணனை வேண்டினர். அவர் பாண்டவர்கள் ஒவ்வொருவரும் உண்மையான மனத்தில் உற்றது கூறின் அற்றது பொருந்தும் என்றார். அவர்கள் அவ்வாறு கூறியவுடன் அப்பழம் மரத்தில் பொருந்தியது. தண்டுலம் - அரிசி. ஒற்றுமையாக எதனைச் செய்தாலும் வெற்றியுண்டு.

வெற்றியிடம்

கலைவலா ருக்கதிக சயமதுர வாக்கிலே
காமுகர்க் கதிக சயமோ
கைப்பொருளி லேவரு மருத்துவர்க் கோசயங்
கைவிசே டந் தன்னிலே

நலமுடைய வேசையர்க் கழகிலே யரசர்க்கு
நாளும் ரண சூரத்திலே
நற்றவர்க் கதிகசய முலகுபுகழ் பொறையிலே
ஞான வேதியர் தமக்கோ

குலமகிமை தன்னிலே வைசியர்க் கோசய
கூறிய[1] துலாக் கோலிலே
குற்றமில் லாதவே ளாளருக் கோசயங்
குறையாத கொழு முனையிலே
அலைவில்குதி ரைக்குநடை வேகத்தி லதிகசய
மாபென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 33

1. கூடிய என்றும் பாடம்.

பொருள்: அருமை தேவனே, கலையில் சிறந்தவர்களுக்கு இனிய மொழியிலே மிகுந்த வெற்றியுண்டு, காமத்திலே ஈடுபட்டவர்களுக்கு கைப்பொருளாலே மிகு வெற்றி வரும், முன்னுக்கு வரும் மருத்துவர்களுக்குக் கைராசியால் வெற்றி உண்டாகும். நன்மையுடைய பரத்தையருக்குத் தங்கள் அழகினாலே வெற்றியுண்டு. எப்போதும் மன்னவர்களுக்குப் போர்க்களத்திலே வெற்றியுண்டு. நல்ல தவத்தினருக்கு உலகம் புகழும் பொறுமையினாலே மிகு வெற்றி உண்டாகும், அறிஞரான மறையவர்களுக்கோ தம் மரபுக்குரிய பெருமையினாலே வெற்றி உண்டாகும். வணிகர்களுக்குப் புகழ்பெற்றதராசுக்கோலை ஒழுங்காகப் பிடிப்பதினாலே வெற்றி உண்டாகும். குற்றம் அற்றவர்களான வேளாளர்களுக்கோ நிறைவுற்ற கொழுவின் நுனியினாலே வெற்றி உண்டாகும் வருத்தம் இல்லாத குதிரைக்கு அதனுடைய நடைவிரைவினால் மிகுந்த வெற்றியுண்டாகும் என்று அறிஞர் உரைப்பர்.

ஒன்றில்லாமையாற் பாழ்படல்

தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண
சந்த்ரனிகர் முக சூனியஞ்
சற்சன ரிலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர் சூனியம்

மேம்பாடி லாதமன் னவர்கள்வந் தாள்வதே
மிக்க தேசச் சூனியம்
மிக்கசற் புத்திர னிலாத்தே நலமான
வீறுசேர்க் கிருக சூனியம்

சோம்பாத தலைவரில் லாததே வளமுடன்
சொல்லுயர் சபா சூனியந்
தொல்லுலகி லனைவர்க்கு மாநிதிய மில்லதே
சுத்த சூன்ய மென்பர்காண்

ஆம்பல்வத னத்தனைக் குகனையீன் றருள்செய்த
லத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 34

சற்சனர் - நல்லவர்.

பொருள்: யானை முகத்தவனையும் முருகனையும் அளித்தருளிய தலைவனே, அருமை தேவனே, தாம்பூலம் தரித்துக் கொள்ளாமல் இருப்பதே முழுமதியென விளங்கு முகத்திற்குப் பாழாகும், நல்லோர் வாழாததே மிகுதியான மக்கள் கூடி வாழும் பெரிய நகர்க்குப் பாழாகும். உயர்ந்த பண்பு இல்லாத மன்னர்கள் வந்து ஆட்சி புரிவது பெரிய நாட்டுக்குப் பாழாகும். சிறந்த நன்மகன் இல்லாமையே அழகிய பெருமை பெற்ற வீட்டுக்குப் பாழாகும், ஊக்கமுடைய தலைவர்கள் இல்லாமையே செழிப்புடன் செப்பப்படுகின்ற அவைக்குப் பாழாகும். உலகத்தில் யாவருக்கும் பெருஞ்செல்வம் இல்லாமையே பெரும் பாழாகும் என்று அறிஞர் கூறுவர்.

தாம்பூலத்திற்கு முக வாசம் என்று பெயர்.

மூடர்களில் உயர்வு தாழ்வு

பெண்புத்தி கேட்கின்ற மூடருந் தந்தைதாய்
பிழையுறஞ் சொலு மூடரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்தது
பிதற்றிடும் பெரு மூடரும்

பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
பழிதொழில்செய் திடு மூடரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்
பரதவித் திடு மூடரும்

கண்கெட்ட மாடென்ன வோடியிர வலர்மீது
காய்ந்து வீழ்ந்திடு மூடரும்
கற்றறி விலாதமுழு மூடருக்கி வரெலாம்
கால்மூட ரரைமூடர் காண்

அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோ
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 35

மாடன் - ஓர் பேய், மடையன்.

பொருள்: அடுத்திருக்க அறிந்த சுந்தரருக்காகப் பரவையாரிடம் தூது சென்ற தலைவனே, அருமை தேவனே, பெண்ணின் அறிவுரையைக் கேட்டு நடக்கும் பேதையரும், பெற்றோர் குற்றத்தை வெளியிடும் பேதையரும், சான்றோர்கள் வீற்றிருக்கும் அவையிலே மேடை மீது நின்று வந்ததை உளறும் பெரும் பேதையரும், நற்பண்புடைய உறவினர் நகைக்கும்படி இழிவான நிந்தைக்குரிய செயல்களைச் செய்யும் பேதையரும், எந்த ஆதரவும் இல்லாதவர்களுக்கு முதலில் பிணையாகச் சென்று, பிறகு

வருந்துகின்ற பேதையரும், குருட்டு மாட்டைப்போல ஓடி யாசகர் மேல் சீறி விழுகின்ற பேதையரும், இவர்கள் யாவரும் உணர்ந்தும் அறிவு இல்லாத பெரும் பேதையர்களை நோக்கக் கால்பேதையரும் அரைப் பேதையரும் ஆவர்.

நாவலர் - சுந்தரர். திருநாவலூரில் பிறந்தவர். சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்காக பரவையாரிடம் தூது சென்று பரவையாரின் ஊடலைத் தவிர்த்தார். அதனால் அடியார்க்கு எளியர் என்னும் தன்மை இங்கு புலப்படுகிறது.

கற்றறி மூடரே யாவரினும் பெருமூடராவர்.

இதற்கிது வேண்டுமெனல்

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
தம்புத்தி கேட்க வேண்டும்
தானதிக சூரனே யாகினுங் கூடவே
தளசே கரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்துவா னாகிலுந் தன்னிலுங்
கற்றோரை நத்த வேண்டும்
காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்த்ரி வேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகிலுஞ்
சுதிகூட்ட வொருவன் வேண்டுஞ்
சுடர்விளக் காயினு நன்றாய் விளங்கிடத்
தூண்டுகோ லொன்று வேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
ஐயனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 36

பொருள்: நெற்றியிலே நெருப்புக் கண் உடையவனே, படிகத்தைப் போலவும் சங்கைப் போலவும் வெண்மையான நிறத்தவனே, தலைவனே, அருமை தேவனே, தனக்கு மிகுந்த அறிவு இருந்தாலும் மற்றவரின் அறிவுரையையும் கேட்டுத் தெளிதல் வேண்டும். தான் பெரிய வீரனே ஆனாலும் நன்னுடன் படைகளைச் சேர்த்துக் கொள்வதும் வேண்டும். பெரிய புலவனே ஆனாலும் தன்னைவிடப் புலமை புடையோரை அடுத்தல் வேண்டும். உலகைத் தான் ஒருவனே ஆண்டாலும் தன் வாயிலில் ஆராய்ச்சியுடைய அமைச்சர் வேண்டும். இசைப் பண்புடைய இசைப் புலவனே ஆனாலும் சுதி கூட்டித்தர ஒருவன் வேண்டும், ஒளிதரும் விளக்கே ஆனாலும் நன்றாக எரிவதற்குத் தூண்டுகோல் ஒன்று இருக்க வேண்டும்.

வறுமையின் கொடுமை

மேலான சாதியி லுதித்தாலு மதிலென்ன
வெகுவித்தை கற்று மென்ன
மிக்கவதி ரூபமொடு சற்குண மிருந்தென்ன
மிகுமானி யாகி லென்ன

பாலான மொழியுடைய னாயென்ன வாசார
பரனா யிருந்து மென்ன
பார்மீது வீரமொடு ஞானவா னாயென்ன
பாக்கிய மிலாத போது

வாலாய மாய்ப்பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்தசுற் றமு மிகழுமே
மரியாதை யில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுந் தூறு சொல்வாள்

ஆலால முண்டகனி வாயனே நேயனே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 37

வாலாயமாய் - விருப்பமாய், தூறு - பழி

பொருள்: நஞ்சினை உண்ட கனிபோன்ற சிவந்த வாயை உடையவனே, அன்புடையவனே, குற்றம் இல்லாதவனே, செல்வம் இல்லாவிட்டால் உயர்ந்த குலத்தில் பிறந்தாலும் அதனால் பயன் இல்லை. மிகுதியான கலைகளைப் படித்துணர்ந்தாலும் பயன் இல்லை. மிகுதியான பேரழகுடன் நற்பண்புகள் இருந்தாலும் பயனில்லை. சிறந்த மானம் உடையவன் ஆனாலும் பயனில்லை, இனிய மொழிகளைக் கூறுவோன் ஆனாலும் பயன் இல்லை. உலகிலே வீரமும் அறிவும் உடையவன் என்றாலும் ஒரு பயனும் இல்லை, பெற்ற தாயும் இயல்பாகவே வெறுப்பாள், வருகின்ற உறவினரும் இகழ்வர், அனைவரும் மதிப்பின்றி பேசுவர். மனைவியும் குறை கூறுவாள்.

பால் இனிமையும் நலமும் உடையது. ஆகையால் பாலான மொழி என்பதும், அவ்வாறு உள்ள மொழி எனப் பொருள்படும்.

பொருள் இல்லாதவருக்கு இவ்வுலகம் இல்லை என்ற குறளின் கருத்து இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

இழிவு

இரப்பவன் புவிமீதி லீனனவ னுக்கில்லை
யென்னுமவ னவனி லீன
னீகின்ற பேர்தம்மை யீயாம லேகலைத்
திடுமூட னவனி லீனன்

உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி
யுதவிடா னவனி லீனன்
உதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலு
முதலுத்தனோ னவனி லீனன்

பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள்சொலிப்
பலகா லலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
பாரிலெல் லோர்க்கு மீனன்

அரக்கிதழ்க் குமுதவா யுமைநேச னேயெளிய
ரமுதனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 38

அரக்கிதழ் - சிவந்த நிறமுடைய.

பொருள்: சிவந்த இதழும் செவ்வல்லி போன்ற வாயும் உடைய உமையம்மையார் காதலனே. எளியவர்களுக்கு அமுதமானவனே, அருமை தேவனே, உலகத்தில் பிச்சை எடுப்பவன் இழிந்தவன், அவ்வாறு இரப்பவனுக்கு இல்லை என்பவன் அவனினும் இழிந்தவன். கொடுப்பவரைக் கொடுக்கவிடாமல் தடுத்துவிடும் அறிவிலி ஈயாதவனினும் இழிந்தவன், சொல்லும் சொல்லிலே நன்மையுண்டு என்று நம்பச்செய்து பிறகு கொடாதவன் அவனிலும் இழிந்தவன். கொடுப்பதாக உறுதி மொழி கூறிப்பிறகு இல்லையென்று கூறிவிடும் கஞ்சத்தன முள்ளவனோ எனின் அவனினும் இழிந்தவன், எங்கும் பரவி இருக்கும் இரவலருக்கு ஆசை மொழிகள் கூறி, பல தடவை உழன்று திரியும்படி செய்துவிட்ட பிறகே இல்லை என்று ஏமாற்றிவிடும் கொடிய பாவியே உலகில் யாவரினும் இழிந்தவன்.

ஈயென இரத்தல் இழிந்தன்று, ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று என்னும் புறநானூற்று வரி இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அதுபோல ஏற்பது இகழ்ச்சி, இயல்வது

கரவேல், ஈவது விலக்கேல் என்பதும் இங்கு உணரத்தக்கவை யாகும்.

மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்

சென்மித்த வருடமு முண்டான வருத்தமுந்
தீதிலா கிரகச் சாரமுந்
தின்றுவரு மௌடதமு மேலான தேசிகன்
செப்பிய மகா மந்த்ரமும்

புன்மையவ மானமுந் தானமும் பைம்பொன்அணி
புனையுமட வார் கல்வியும்
புகழ்மேவு மானமு மிவையொன்ப துந்தமது
புந்திக்கு ளேவைப் பரே

தன்மமென் றுரைசெய்வ ரொன்னார் கருந்தையுந்
தன்பிணி யையும பசியையுந்
தான்செய்த பாவமு மிவையெலாம் வேறொருவர்
தஞ்செவியில் வைப்ப தியல்பாம்

அன்மருவு கண்டனே மூன்றுலகு மீன்றவுமை
அப்பனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 39

புந்தி - அறிவு, புத்தி.

பொருள்: கருமை பொருந்திய கழுத்தினை உடையவனே, மூவுலகத்தையும் பெற்ற உமையம்மையார் காதலனே, அருமை தேவனே, பிறந்த ஆண்டும், கிடைத்திருக்கும் செல்வமும், குற்றமற்ற நல்ல கோள்களின் பலனும், உண்டுவரும் மருந்தும், மேலான ஆசான் கூறியருளிய உயர்ந்த மறையும், இழிவாகிய மானக்கேடும்,

கொடையும், புதிய பொன்னால் ஆன அணிகளை அணிந்த பெண்களின் சேர்க்கையும், புகழ் பொருந்திய பெருமையும், ஆகிய இவைகள் ஒன்பதினையும் தம்முடைய மனத்தில் வைத்திருப்பதே அறமாகும் என்று அறிஞர் கூறுவர். பகைவரின் நினைவையும் தன் நோயையும் தன் பசியையும், தான் செய்த பாவத்தையும் இவைபோன்றவற்றை மற்றொருவர் காதில் விழச்செய்வ து இயற்கையாகும்.

தேவர்கள் காலவளவை

சதுரயுக மோரிரண் டாயிரம் பிற்படிற்
சதுமுகற் கொரு தினமதாஞ்
சாற்றுமித் தினமொன்றி லேயிந்த்ர பட்டங்க
டாமுமீ ரேழ்சென் றிடும்

மதிமலியு மித்தொகையி னயனாயு ளுறுபோய்
மாண்டபோ தொரு கற்பமாம்
மாறிவரு கற்பமொரு கோடிசென் றானெடிய
மாறனக் கோர் தினமதாம்

துதிபரவு மித்தொகை லொருகோடி நெடியமா
றோன்றியே போய் மறைந்தா
றோகையோர் பாகனே நீநகைத் தணிமுடி
துளக்கிடுங் கால மென்பார்

அதிகமுள பலதேவர் தேவனே தேவர்கட்
கரசனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 40

சதுமுகன் – அருகன், பிரமன்.

பொருள்: மயில் போன்ற உமாதேவியினை ஒரு பாகத்தில் கொண்டவனே, கூட்டமாக உள்ள பலவகைப் பட்ட வானவர்க்கும் வானவனே, வானவர் தலைவனே, அருமை தேவனே, கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம்,

கலியுகம் என்னும் நான்கு கொண்ட யுகங்கள் இரண்டாயிரம் கடந்தால் நான்முகனுக்கு ஒரு நாளாகும். கூறத்தக்க இந்த ஒரு நாளிலே பதினான்கு இந்திர பதவிகள் கழிந்து விடும். அறிவுமிக்க இந்தக் கணக்கின்படி நான்முகன் வயது நூறு கழிந்து இறந்தானானால் ஒரு கற்பம் எனப்படும். இவ்வாறு மாறி மாறி வரும் பிரமகற்பம் ஒரு கோடி கழிந்தால் திருமாலுக்கு ஒரு நாளாகும், துதிக்கத்தக்க இந்த எண்ணிகையில் ஒரு கோடி திருமால்கள் பிறந்து மறைந்தால், நீ சிரித்து அழகிய திருமுடியை ஒருமுறை அசைக்கும் காலம் என்று அறிஞர் கூறுவர்.

தூய்மை

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே
மறையவர்க் குயர் புனிதமோ
மலரடியி லேபுனித மொளிகொள்கண் ணாடிக்கு
மாசின்முற் புற மதனிலே

மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே
மிக்கமட மாத ருக்கோ
மேனியெல் லாம்புனித மாகுமோ சௌசமொடு
மேவு வனிதையர் தமக்கும்

தாம்பிரம தற்குமிகு வெள்ளிவெண் கலமயந்
தங்கமீ யந் தமக்குந்
தரும்புனிதம் வருபெருக் கொடுபுளி சுணஞ்சாம்பல்
சாருமண் டாது சாணம்

ஆம்புனித மிவை யென்பர் மாமேரு வில்லியே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 41

பொருள்: பெருமை பொருந்திய மேரு மலையினை வில்லாக்கியவனே. குற்றமற்றவனே. அருமை தேவனே, தாவிச் செல்லும் குதிரைக்கு முகத்திலே மிகு தூய்மை, மறை உணர்ந்த அந்தணருக்கு மலர் போன்ற அடிகளிலே மிகு தூய்மை. ஒளியுடைய கண்ணாடிக்குக் குற்றமற்ற முன் புறத்திலே தூய்மை. உயர்ந்த பசுவிற்கு பின் புறத்திலே தூய்மை. சிறந்த இளம் பெண்களுக்கு மேனியெல்லாம் தூய்மை. தீட்டுற்ற பெண்களுக்கும், தாம்பிரத்துக்கும், அதிக வெள்ளிக்கும் வெண்கலத்திற்கும், இரும்பிற்கும், பொன்னிற்கும் ஈயத்தினும் தூய்மையைத் தருகிற வருகின்ற வெள்ளத்துடன் புளியும், சுண்ணப் பொடியும், சாம்பலும் பொருந்திய மண்ணும், காவிக்கல்லும், சாணமும் ஆகிய இவைகள் தூய்மை தரும் என்று கூறுவர்.

அடங்காதவற்றை அடக்கும் வழி

கொடியபொலி யெருதையிரு மூக்கிலுங் கயிறொன்று
கோர்த்துவச விர்த்தி கொள்வர்
குவலயந் தனின்மதக் களிறதனை யங்குசங்
கொண்டுவச விர்த்தி கொள்வர்

படியில்விட அரவைமந் திரதந் திரத்தினாற்
பற்றிவச விர்த்தி கொள்வார்
பாய்பரியை நெடியகடி வாளமது கொடுநடை
பழக்கிவச விர்த்தி கொள்வார்

விடமுடைய துட்டரைச் சோர்பந்து கைக்கொண்டு
வீசிவச விர்த்தி கொள்வார்
மிக்கபெரி யோர்களும் கோபத்தை யறிவால்
விலக்கிவச விர்த்தி கொள்வார்

அடியவர் துதிக்கவரு செந்தா மரைப்பதத்
தையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 42

பொருள்: திரு அடியார்கள் வாழ்த்த வருகின்ற செந்தாமரை மலரனைய திருவடிகளை உடைய தலைவனே, அருமை தேவனே, கொடிய தன்மையுடைய பொலிகாளையை அதன் இரண்டு மூக்கிலும் ஒரு கயிற்றைக் கோர்த்து வசப்படுத்துவர். உலகத்தில் மதயானையை அங்குசம் கொண்டு வசப்படுத்துவர். உலகில் நஞ்சுடைய நாகத்தை மந்திரத்தாலும், தந்திரத்தாலும் பிடித்து வசப்படுத்துவர். தாவும் குதிரையினை நீண்ட கடிவாளத்தைக் கொண்டு நடைப்பழக்கி வசப்படுத்துவர். நஞ்சுடைய தீயவரைச் சவுக்கைக் கொண்டு அடித்து வசப்படுத்துவர். பெரிய சான்றோர்களும் தம் கோபத்தை அறிவின் திறனால் நீக்கிக்கொண்டு அடங்கி நடந்து மனதை வசப்படுத்துவர்.

ஒளியின் உயர்வு

செழுமணிக் கொளியதன் மட்டிலே யதினுமோ
செய்யகச் சோத மெனவே
செப்பிடுங் கிருமிக்கு மிச்சமொளி யதனினுந்
தீபத்தி னொளி யதிகமாம்

பழுதிலாத் தீவர்த்தி தீபத்தி னதிகமாம்
பகல்வர்த்தி யதி லதிகமாம்
பாரமத் தாப்பினொளி யதிலதிக மதிலுமோ
பனிமதிக் கொளி யதிகமாம்

விழைவுதரு பரிதிக்கு மனுநீதி மன்னர்க்கும்
வீரவித ரணிக ருக்கும்
மிக்கவொளி திசைதொறும் போய்விளங்கிடு மென்ன
விரகுளோ ருரை செய்குவார்

அழல்விழிகொ டெரிசெய்து மதனவே ள்தனைவென்ற
வண்ணலே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 43

கச்சோதம் - மின்மினிப்பூச்சி, பனிமதி - நிலவு,
வீரவிதர் - வீரமுடைய, வீரகுளோர் - உலகத்தோர்.

பொருள்: தீ விழியினாலே காமனை எரித்து வென்ற பெரியோனே, அருமை தேவனே நல்ல மாணிக்கத்துக்கு அதன் அளவிலேதான் ஒளியுண்டு, அம்மணியைக் காட்டிலும் சிவந்த மின்மினியெனக் கூறப்படும் புழுவுக்கு மிகுதியான ஒளி உண்டு. அந்த மின்மினியைக் காட்டிலும் விளக்கின் ஒளி மிகுதியாம். விளக்கினும் குற்றமற்ற தீவர்த்தியின் ஒளி மிகுதியாகும். அதனினும் பகல்வர்த்தியின் ஒளி மிகுதியாம், பகல் வர்த்தியினும் பெரிய மத்தாப்பின் ஒளி மிகுதியாகும். மத்தாப்பினும் குளிர்ந்த திங்களின் ஒளி மிகுதியாகும். விருப்பமூட்டடக்கூடிய சூரியனுக்கும் செங்கோல் மன்னருக்கும் வீரம் கொண்ட அறிஞருக்கும் பேரொளி எட்டுத்திக்கிலும் சென்று வீசும் என்று அறிவுடையோர் கூறுவர்.

குணங் குற்றமாதல்

வான்மதியை நோக்கிடிற் சோரர்கா முகருக்கு
மாறாத வல் விடமதாம்
மகிழ்நன் றனைக்காணி லிதமிலா விபசரிய
மாதருக் கோ விடமதாம்

மேன்மைதரு நற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக
மிக்கபேர்க் கதிக விடமாம்
வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப
வீணர்க் கெலாம் விடமதாம்

ஈனமிகு புன்கவிவ லோர்க்கதிக சபைகாணி
லேலாத கொடிய விடமா
மேற்றமில் லாதபடு பாவிகட் கறமென்னி
லெந்நாளு மதிக விடமாம்

ஆனதவ யோகியர்க ளிதயதா மரையுறையு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 44

சோரர் காமுகர் - கள்ளத்தனம் புரியும் காமுகர், வித்தியாதிபர் - கல்வியாளர்.

பொருள்: ஆக்கம் பெற்ற தவயோகியரின் உள்ளத் தாமரை மலரில் வாழும் பெரியோனே, அருமை தேவனே, திருடனுக்கும் காம நோயாளருக்கும் வானத்தில் திங்களைப் பார்த்தால் நீங்காத கொடிய நஞ்சு ஆகும், நன்மை இல்லாத தீயொழுக்கப் பெண்களுக்குக் கணவனைப் பார்த்தால் நஞ்சு போல் இருக்கும். வெப்பு நோய் மிகுந்தவருக்கு உயர்ந்த இனிய சுவை மிக்க கறிகளும் மிகுந்த நஞ்சாகும். அதிக ஈகைப் பண்பு இல்லாத வீணர்கள் அனைவருக்கும் கலை வல்லோரைக் கண்டபோது நஞ்சாகும். இழிவுமிக்க புன்கவிவாணருக்குப் பேரவையைக் கண்டால் பொறுக்கமுடியாத தீய நஞ்சாகும். மேன்மை இல்லாத பெரும் பாவிகளுக்கு அறம் என்றால் எப்போதும் பெரு நஞ்சு ஆகும்.

தாழ்வும் உயர்வு பெறும்

வெகுமான மாகிலு மவமான மாகிலும்
மேன்மையோர் செய்யி லழகாம்
விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலும்
விழைமங்கை செய்யி லழகாம்

தகுதாழ்வு வாழ்வுவெகு தருமங்களைச் செய்து
சாரிலோ பேரழக தாஞ்
சரீரத்தி லோரூன மானமெது வாகிலுஞ்
சமர்செய்து வரிலழக தாம்

நகமேவு மதகரியி லேறினுஞ் தவறினு
நாளுமது வோரழக தாம்
நாய்மீதி லேறினும் வீழினுங் கண்டபேர்
நகைசெய்தழ கன்றென்பர்காண்

அகமாயு நற்றவர்க் கருள்புரியு மையனே
யாதியே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 45

சமர் - போர்.

பொருள்: மனத்திலே ஆராயும் நல்ல தவத்தினருக்கு அருள் செய்கின்ற தலைவனே, முதல்வனே, அருமை தேவனே, பெரும் மதிப்பிற்குரிய செயலானாலும் இழிவான செயலானாலும் பெரியோர்கள் செய்தால் அழகு தரும், காமநோய் ஆனாலும் காமக் கூட்டம் ஆனாலும் விரும்பத்தக்க மங்கைப் பருவப்பெண் கொடுத்தால் அழகு ஆகும். மிக்க அறங்களைச் செய்து தக்க தாழ்வாயினும் வாழ்வாயினும் பெற்றால் மிகுந்த அழகு ஆகும். போர் செய்ததால் உடலில் ஏதாவது காயம் ஏற்படினும் பெருமை ஏற்படினும் அதனால் அழகு ஆகும். மலை போன்ற மதயானையின் மேல் ஏறினாலும் தவறி விழுந்தாலும் அச்செயல் எப்போதும் ஒரு அழகாக இருக்கும். நாயின் மேல் ஏறினாலும், தவறி விழுந்தாலும் பார்த்தோர் நகைத்து அழகாகாது என்று கூறுவர்.

நல்வினை செய்தோர்

சரணெனக் காத்தவன் மெய்யினால் வென்றவன்
றானமிளை யாதுதவி னோன்
றந்தைசொன் மறாதவன் முன்னவற் கானவன்
றாய்பழி துடைத்த நெடியோன்

வருபிதிர்க் குதவினோன் றெய்வமே துணையென்று
மைந்தன்மனை வியை வதைத்தோன்
மாறான தந்தையைத் தமையனைப் பிழைகண்டு
மாய்த்துலகின் மகிமை பெற்றோன்

கருதரிய சிபியரிச் சந்திரன் மாபலி
கணிச்சியோன் சுமுத்திரை சுதன்
கருடன் பகீரத னுடன்சிறுத் தொண்டனொடு
கானவன் பிரக லாதன்

அரியவல் விபீஷண னெனுமகா புருடரா
மத்தனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 46

கணிச்சியோன் - இராமன், சுமித்திரை சுதன் - அபிமன்யு.

பொருள்: தலைவனே, அருமை தேவனே, அடைக்கலம் காப்பாற்றியவன். உண்மையே பேசி வெற்றி பெற்றவன். சோர்வு இன்றி கொடை அளித்தவன். தந்தையின் சொல்லைத் தட்டாதவன், தமையனுக்கு உற்ற துணையானவன். அன்னைக்கு நேர்ந்த பழியினைப் போக்கிய பெரியோன். தலைமுறையில் வந்த தென்புலத்தாருக்கு நலம் புரிந்தோன். கடவுளைத் துணையாக நம்பி மகனை வதைத்தவனும், மனைவியை

வதைத்தவனும், நன்னெறிக்கு மாறுபட்ட தந்தையைக் கொன்றும், தமையனைக் கொன்றும் உலகில் புகழ் பெற்றோர் ஆகிய இவர்கள் முறையே, நினைத்தற்கரிய சிபிச் சக்ரவர்த்தியும், அரிச்சந்திரனும், மாபலியும், பரசுராமனும், சுமித்ரை மகனான இலக்குவனும், கருடனும், பகீரதனும், சிறுதொண்டனும், வேடனும், பிரகலாதனும், அரிய வலிய விபீடணனும் எனக் கூறும் பெருமக்கள் ஆவர்.

அடைக்கலம் வந்த புறாவைச் சிபிச் சக்ரவர்த்தி காப்பாற்றத் தன்னையே எடையாக நிறுத்தினான். அரிச்சந்திரன் உண்மையைக் கடைப்பிடிக்க மனைவியையும் மகனையும் விற்றான். தானும் விலையானான். மாபலி தன்னையேற்பவர் மாயையில் வல்ல திருமால் என்று அறிந்தும் பொருட்படுத்தாமல் வேண்டிய மூன்றடி மண்ணைக் கொடுத்தார். பரசுராமன் தந்தை சொற்படி தாயைக் கொன்றான். இலக்குமணன் தன் தமையன் இராமனுடன் காட்டிற்குச் சென்றான். கருடன் தன் தாயான வினதையின் அடிமைத் தன்மையை மாற்றத் தன் மாற்றாந் தாயான கந்துருவை மக்களை வேண்டுமிடங்களுக்குக் கொண்டுபோய்க் காட்டினான். பகீரதன் தன் முன்னோரான சகரர்கள் நற்கதியடையக் கங்கையை பூவுலகில் கொணர்ந்து சகரரின் சாம்பற் குவியலில் பாய்ச்சினான். சிறுத்தொண்டர் அடியார் கோலத்துடன் வந்த சிவபிரான் அமுது செய்ய மகனைக் கொன்று சமைத்தார். பிரகலாதன் தன் தந்தைக்கு மாறாக நின்று நரசிங்க மூர்த்தியால் தந்தையையே கொல்வித்தான். விபீடணன் தன் தமையனான இராவணனுக்கு மாறாக நின்று இராமனைக்கொண்டு இராவணனைக் கொல்வித்தான். இவர்கள் நன்னெறியிலேயே சென்றதனால் தகாத செயல்களான இவற்றைச் செய்தும் புகழ் பெற்றனர் என்று கூறுவர்.

தீவினை செய்தோர்

வாயிகழ்வு பேசிமிகு வாழ்விழந் தோன்சிவனை
வைதுதன் றலை போயினோன்
மற்றொருவர் தாரத்தி லிச்சைவைத் துடலெலா
மாறாத வடுவாயி னோன்

தாயத்தி னோர்க்குள்ள பங்கைக் கொடாமலே
சம்பத் திழந்து மாய்ந்தோன்
றக்கபெரி யோர்தமை வணங்கா மதத்தினாற்
றந்திவடி வாயலைந் தோன்

மாயனைச் சபையதனி னிந்தனைசெய் தொளிகொள்நவ
மணிமுடி துணிந்து மாய்ந்தோன்
வருநகுட னொடுதக்க னயிராவ தன்குருடன்
மகன் வழுதி சிசு பாலனாம்

ஆயுமறி வாளரொடு தேவர்பணி தாளனே
யவனிபுக ழருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 47

குருடன் மகன் - துரியோதனன்.

பொருள்: ஆராய்கின்ற அறிஞரும் அமரரும் பணியும் திருவடியை உடையவனே, உலகம் புகழும் அருமை தேவனே, வாயினால் பிறரை இகழ்ந்து பேசித் தன் சிறந்த வாழ்வைப் பறிகொடுத்தவன். சிவபெருமானைப் பழித்துத் தன் தலையை இழந்தவன், பிறர் மனைவியிடம் ஆசை கொண்டு தன் உடலெல்லாம் நீங்காத வடுவைக் கொண்டவன், பங்காளிகளுக்கு உரிய பங்கைக் கொடுக்காததால் தனக்குரிய செல்வத்தையும் போக்கிவிட்டு மடிந்தவன், தகுதி வாய்ந்த சான்றோரை வணங்காத செருக்கினால் யானை வடிவாக அலைந்தவன் கண்ணனை அவையிலே பழித்துக் கூறியதால் கதிர்விடும் நவமணி

முடியை இழந்து இறந்தவன். முறையே இந்திர பதவிக்கு வந்த நகுடனும், தக்கனும், இந்திரனும், துரியோதனும், பாண்டியனும், சிசுபாலனும் ஆவர்.

நகுடன் நூறு பரிவேள்வி செய்து இந்திர பதவி பெற்றான். ஏழு முனிவர் சுமக்கும் சிவிகையிலே இந்திராணியை நாடிச் செல்கையில் 'சர்ப்ப ! சர்ப்ப !' என விரைந்து செல்லும்படி பெரியோர்களை மதியாமல் ஏவியதால் மலைப்பாம்பாக அகத்தியரால் சபிக்கப் பெற்றான். தக்கன் சிவனை இகழ்ந்து பேசி, அவரை நீக்கி வேள்வி செய்ததனால் வீரபத்திரரால் தலையை இழந்து ஆட்டுத்தலை பெற்றான். இந்திரன் கௌதமர் மனைவியான அகலிகையை விரும்பியதால் உடலெங்கும் பெண்குறியை பெற்றான். துரியோதனன் தன் பங்காளிகளான பாண்டவரின் உரிமையைக் கொடாததால் அவர்களால் போரில் இறந்தான். சிசுபாலன் எப்போதும் கண்ணனை இகழ்ந்து கூறி வந்ததனால் அவரால் போர்க்களத்தில் இறந்தான்.

நன்னகர்

வாவிபல கூபமுட னாறருகு சேர்வதாய்
மலைகாத வழியி லுளதாய்
வாழைகமு கொடுதெங்கு பயிராவ தாய்ச்செந்நெல்
வயல்கள்வாய்க் கால்க ளுளதாய்

காவிகம லங்குவளை சேரேரி யுள்ளதாய்க்
கனவர்த்த கர்கள் மறைவலோர்
காணரிய பலகுடிக ணிறைவுள்ள தாய்நல்ல
காவல நிருக்கை யுளதாய்த்

தேவரா லயமாடல் பாடலணி மாளிகை
சிறக்கவுள தாய்ச் சற்சனந்
சேருமிட மாகுமோ ரூர்கிடைத் ததிலதிக
சீவனமு மே கிடைத்தால்

ஆவலொ டிருந்திடுவ தேசொர்க்க வாசமென்
றறையலா மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 48

பொருள்: அருமை தேவனே ! பல பொய்கைகளும் கிணறுகளும் அருகில் ஆறும் இருப்பதாய், காத வழித் தொலைவில் மலையினை உடையதாய், வாழையும், பாக்கும், தென்னையும் பயிராகும் வளமுடையதாய், நல்ல நெல் விளையும் வயல்களும் வாய்க்காலும் உடையதாய், நீலமும் தாமரையும் குவளையும் மலர்ந்த ஏரியை உடையதாய், பெரிய வணிகரும் மறையவரும் மற்றும் காண்பதற்கு இனிய பலவகைக் குடிகளும் நிறைந்ததாய், நல்ல அரசர் அரண்மனை உடையதாய், வானவர் கோயிலும் ஆடலாலும் பாடலாலும் அழகுறும் மாளிகைகள் சிறந்துள்ளதாய், நல்லோர் உறையும் இடமுடைய ஒரு நகரம் வாய்த்து, அங்கு நன்றாக வாழ வாழ்க்கைக்கு வழியும் பொருந்திவிட்டால் விருப்பத்துடன் இருப்பதே சொர்க்க வாழ்வு என்று கூறலாம்.

தீ நகர்

ஈனசா திகள்குடி யிருப்பதாய் முள்வேலி
யில்லில்லி னுக்கு முளதா
யிணைமுலை திறந்துதன் தலைவிரித் திடுமாத
ரெங்கும்நட மாட்ட முளதாய்க்

கானமொரு பக்கமாய் மலையோர மாய்முறைக்
காய்ச்ச றப்பாத விடமாய்க்
கள்ளர்பய மாய்நெடிய கயிறிட் டிறைக்கின்ற
கற்கேணி நீருண்ப தாய்

மானமில் லாக்கொடிய துர்ச்சனர் தமக்கேற்ற
மணியமொன் றுண்டான தாய்
மாநிலத் தோர்தல மிருந்ததனில் வெகுவாழ்வு
வாழ்வதிலு மரு நரகிலே

ஆனநெடு நான்கிடத் தமிழ்தலே சுகமாகு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 49

பொருள்: குற்றமற்றவனே, அருமை தேவனே, இழிந்த சாதியினர் வாழ்வதாய், வீடுகள் தோறும் முள்வேலி இருப்பதாய், மார்பிலே துணி விலகியவாறு தலைவிரித்துத் திரியும் பெண்கள் எங்கும் உலாவும் நிலையினதாய், ஒரு பக்கம் காடு உடையதாய், மலையோரமானதாய், முறைக் காய்ச்சல் எப்போதும் வருமிடமாய், திருடரால் அச்சமாய், நீண்ட கயிற்றைக் கட்டி இறைக்கப்படும் கல்லால் அமைந்த கிணற்று நீர் உண்ணும் இடமாய், மானமற்ற மிகக் கொடியவருக்குத் தக்க தலைவனை உடையதாய் ஓர் ஊர் இப்பெரிய உலகில் இருந்து அவ்வூரிலே பெருகவாழ்வதினும், கொடிய நரகத்தில் உண்டான நீண்டகாலம் கிடந்து அதனில் முழுகிப்போதலே இன்பம் ஆகும்.

முழுக்கு நாள்

வருமாதி வாரந் தலைக்கெண்ண யாகாது
வடிவமிகு மழகு போகும்
வளர்திங்க ளுக்கதிக பொருள்சேரு மங்கார
வாரந் தனக் கிடர்வரும்

திருமேவு புதனுக்கு மிகுபுத்தி வந்திடுஞ்
செம்பொனுக் குய ரறிவுபோந்
தேடிய பொருட்சேத மாம்வெள்ளி சனியெண்ணெய்
செல்வமுண் டாயு ளுண்டாம்

பரிகார முளதாதி வாரந் தனக்கலரி
பௌமனுக் கான செழுமண்
பச்சறுகு பொன்னவற் காமெருத் தூளொளிப்
பார்க்கவற் காகு மெனவே
அரிதா வறிந்தபே ரெண்ணெய்ச்சேர்த் தேமுழுக்
காடுவா ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 50

பொருள்: அருமை தேவனே ! வருகின்ற ஞாயிற்றுக் கிழமையன்று தலைக்கு எண்ணெய் கூடாது. அவ்வாறு முழுகினால் உருவத்தில் மிகுந்த அழகு நீங்கும். வளர்ந்து வரும் திங்கள் கிழமைகளில் முழுகினால் மிகுந்த பொருள் கிடைக்கும். செவ்வாய்க்கிழமைகளில் முழுகினால் துன்பம் உண்டாகும். அழகு மிகுந்த புதன்கிழமைகளில் முழுகினால் சிறந்த அறிவு வரும். நல்ல வியாழக் கிழமைகளில் முழுகினால் சிறந்த அறிவு கெடும். வெள்ளிக் கிழமைகளில் முழுகினால் சேர்ந்த பொருள் அழியும். சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து முழுகினால் செல்வமும், ஆயுள் வளர்ச்சியும் உண்டாகும். தகாத கிழமைகளில் முழுக நேர்ந்தால் மாற்று உண்டு, முதல் வாரமான ஞாயிற்றுக்கிழமையில் அலரி மலராம், செவ்வாய்க்கு நல்ல மண் ஆகும், வியாழனுக்குப் பசிய அறுகம்புல் ஆகும்,ஒளியையுடைய வெள்ளிக்கு எருப்பொடி ஆகும். அருமையாக உணர்ந்தவர்கள் எண்ணெயுடன் இவற்றை சேர்த்து முழுகுவர்.

எள் + நெய்: எண்ணெய். நெய் என்பது தைலத்தைக் குறிக்கும் சொல்லாக முன்னாளில் வழங்கியது.

மருத்துவன்

தாதுப் பரீக்ஷைவரு காலதே சத்தொடு
சரீரலட் சண மறிந்து
தன்வந்திரி கும்பமுனி தேரர்கொங் கணர்சித்தர்
தமதுவா கட மறிந்து

பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடு பஸ்பம்
பிழையாது மண்டூர செந்தூர லக்ஷணம்
பேர்பெறுங் குணவா கடம்

சோதித்து மூலிகா விதநிகண் டுங்கண்டு
தூய தைலம் லேகியஞ்
சொல்பக்கு வங்கண்டு வருரோக நிண்ணயந்
தோற்றியே யமிர்த கரமாய்

ஆதிப் பெருங்கேள்வி யுடையனா யுர்வேத
னாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 51

பொருள்: எம்முடைய அருமை தேவனே, நாடித் தேர்வையும் காலத்தையும் இடத்தையும் உடலின் இயல்பையும் உணர்ந்து, தன்வந்திரியும் அகத்தியரும் கொங்கணரும் சித்தர்களும் எழுதிய மருத்துவ நூலைக் கற்றுணர்ந்து, பலவகைப்பட்ட பெருமைமிக்க குளிகை களையும் தூய்மை செய்யும் முறைகளையும், மாத்திரை களையும், பஸ்மத்தையும் கொடுக்கும் தன்மையையும் தவறாது கற்று, மண்டூரம், செந்தூரம் இவற்றின் இயல்புகளைப் புகழ்பெற்ற பண்புடைய மருத்துவ நூலின் வாயிலாகத் தேர்ந்து, பல வேர் வகைகளின் நிகண்டையும்

அறிந்து, தூய எண்ணெயும் இலேகியமும் செய்யும் முறையைச் சொல்லியவாறு அறிந்து, வரும் நோய்களின் முடிவை வெளிப்பட உணர்ந்து, கை நலம் உடையவனாய், முற்காலத்திலிருந்து வழிவழியாக வரும் கேள்வியறிவையும் உடையவனே மருத்துவன் ஆவான்.

இங்குக் கூறப்படும் மருத்துவன் இயல்பு பொதுவானதாகும். நம் நாட்டு மருத்துவம் ஆயுர்வேதம், சித்தம் என இருவகைப்படும். "தேரர் கொங்கணர் சித்தர் தமது வாகடம் அறிந்து" என்பதனால் பொதுவென உணரலாம். வாகடம் - மருத்துவ நூல் வளி, பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்று நரம்புகளின் இயலை அறிவதுதான் தாதுப் பரீட்சை. எல்லோருக்கும் கோடை, வறளை, மாரி எனும் காலங்களில் ஒரே மாதிரியாக உடல்நிலை இருக்காது. நாடுதோறும் தட்பவெப்ப நிலை வேறுபடுவதாலும் மக்களின் உடல்நிலை ஒரே வகையாக இருக்காது. ஒரே நாட்டிலும் மக்களின் உடல் நிலை வேறு வேறாகத்தான் இருக்கும். ஆகையால் "காலதேசத்தோடு சரீர லட்சணம் அறிந்து" என்றார். சுத்தி செய்யாத மருந்துச் சரக்குகள் கெடுதலை விளைவிக்கும். மண்டூரம் என்பது செங்கல்லிற்சிட்டம் பிடித்த கல்லைக்கொண்டு பிற மருந்துச் சரக்குகளையும் சேர்த்துச் செய்யும் ஒரு வகைப்பொடி, செந்தூரம் என்பது இரும்பு கலந்த மருந்துப்பொடி. எந்நலம் இருப்பினும் கைந்நலம் ஒன்றே மருத்துவருக்குப் புகழ் தரும் என்பதைத் தெரிவிக்க 'அமிர்தகரனாய்' என்றார்.

உண்மை யுணர்குறி

சோதிடம் பொய்யாது மெய்யென்ப தறிவரிய
சூழ்கிர கணஞ் சாட்சியாஞ்
சொற்பெரிய வாகடம் நீசமென்கை பேதிதரு
தூய மாத்திரை சாட்சியாம்

ஆதியிற் செய்ததவ முண்டில்லை யென்பதற்
காளடிமை யேசாட்சி யா
மரிதேவ தேவனென் பதையறி யமுதனூ
லரிச்சுவடி யே சாட்சியாம்

நாதனே மாதேவ னென்பதற் கோருத்ர
நமக சமகஞ் சாட்சியாம்
நாயேனை ரட்சிப்ப துன்பார மரியவே
னாளுமர்ச் சனைசெய் சரணத்

தாதிநா யகமிக்க வேதநா யகனான
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 52

பொருள்: திருமாலும் பிரமனும் எப்போதும் மலரிட்டு வழிபடும் திருவடிகளை உடைய முதன்மையான தலைவனே, சிறந்த மறை முதல்வனான பெரியோனே, அருமை .... தேவனே, கணிதநூல் பொய்படாது, உண்மையே என்பதற்கு அறிஞரே அல்லாமல் பொதுமக்களால் அறிய முடியாத சூழும் கிரகணமே சான்று ஆகும். புகழ் பெற்ற பெருமைமிகு மருத்துவ நூல் உண்மை என்பதற்குப் பேதிக்குத் தரும் நல்ல மாத்திரைகளே சான்று ஆகும். முன்னே செய்த நல்வினை உண்டா இல்லையா என்பதற்கு ஆளும் அடிமையுமே சான்று ஆகும். திருமால் வானவர் தலைவன் என அறிவதற்குச் சிறுவர்கள் கற்கும் முதல் நூல் அரிச்சுவடியாக இருப்பதே சான்று ஆகும். சிவபெருமான் தலைவன் என்பதை அறிவதற்கோ எண்ணி உருத்திர நமசகமகம் என்னும் மறைப்பனுவலே சான்று ஆகும். நாய்போல் இழிவுற்ற என்னைக் காப்பது உன் பொறுப்பு.

பிறவிக்குணம் மாறாமை

கலங்காத சித்தமுஞ் செல்வமுஞ் ஞானமுங்
கல்வியுங் கருணை விளைவுங்
கருதரிய வடிவமும் போகமுந் த்யாகமுங்
கனரூப முள மங்கையும்

அலங்காத வீரமும் பொறுமையுந் தந்திரமு
மாண்மையு மமுத மொழியு
மானவிச் செயலெலாஞ் சனனவா சனையினா
லாகிவரு மன்றி நிலமேல்

நலஞ்சேரு மொருவரைப் பார்த்தது பெறக்கருதி
னண்ணுமோர் ரஸ்தாளி தன்
னற்சுவை தனக்குவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராது காண்

அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 53

பொருள்: அழகாக மலர்ந்த கொன்றை மாலையைச் சூடிய பெரியோனே, அருமை ..... தேவனே, குழம்பாத மனமும், நல்ல பேறும், அறிவும், கலையும், அருட்பெருக்கும், நினைவுக்கரிய உருவ அழகும், அனுபவமும், கொடையும், பேரழகு உடைய மனைவியும், அசைவில்லாத துணிவும், பொறுமையும், சூழ்ச்சியும், ஆளுந்திறனும், இனிய சொல்லும் ஆகிய இவைகள் யாவும் பிறப்பின் தொடர்பினால் இயற்கையிலேயே உண்டாகி வருமேயல்லாமல், உலகில் நலம் பெற்று இருக்கும் ஒருவரைக் கண்டு, அந்த இயல்பை அடைய நினைத்தால் ஆகுமோ ? இரஸ்தாளி வாழையின் நல்ல சுவை தனக்குக் கிடைக்க வேண்டி வேம்பு நீண்ட நாள் தவம் புரிந்தாலும் கிடைக்காது.

கடலள வுரைத்திடுவ ரரிபிரம ருருவமுங்
காணும் படிக்குரை செய்வார்
காசினியி னளவுபிர மாணமது சொல்லுவார்
காயத்தி னிலைமை யறிவார்

விடலரிய சீவநிலை காட்டுவார் மூச்சையும்
விடாமற் றடுத் தடக்கி
மேன்மேலும் யோகசா தனைவிளைப் பாரெட்டி
விண்மீதி னிந்தா வுவார்

தொடலரிய பிரமநிலை காட்டுவா ரெண்வகைத்
தொகையான சித்தி யறிவார்
சூழ்வினை வரும்பொழுது சிக்கியுழல் வாராது
துடைக்கவொரு நான்மு கற்கும்

அடைவல வெனத்தெரிந் தளவில்பல நூல்சொல்லு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 54

பொருள்: தலைவனே, அருமை ..... தேவனே, கடலின் பரப்பைக் கணக்கிட்டுக் கூறுவர். திருமால் பிரமன் ஆகியோரின் வடிவத்தினைக் காணுமாறு விளக்கிக் கூறுவர். உலகின் எவ்வகை அளவையும் விளக்குவர். உடற் கூறுபாட்டை உணர்வர். விடுதற்கரிய உயிரின் நிலையையும் காண்பிப்பர். மூச்சை விடாமல் தடைசெய்து அடக்கி மேலும் மேலும் யோக சித்தியைச் செய்வர். வானத்திலும் எழும்பித் தாவுவர். அடைய இயலாத பிரமத்தின் நிலையையும் காண்பிப்பர். எட்டு வகையான எண்ணிக்கை யுடைய சித்தியையும் தெரிவர். எனினும் சூழும் பழைய

வினைப் பயன் வரும்போது அதனுள் அகப்பட்டு தவிப்பர். ஒப்பற்ற பிரமனுக்கும் அதனை அழிக்கும் வழி இல்லை என்று கணக்கற்ற பல நூல்கள் அறிந்து கூறும். ஊழ்வினைப் பயன் மாற்ற முடியாதது.

ஒப்புயர் வில்லாமை

வேதியர்க் கதிகமாஞ் சாதியுஞ் கனகமக
மேருவுக் கதிக மலையும்
வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
மேதினியி லோடு நதியும்

சோதிதரு மாதவர்க் கதிகமாங் காந்தியுஞ்
சூழ்கனற் கதிக சுசியுந்
தூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ்
சுருதிக் குயர்ந்த கலையும்

ஆதிவட மொழிதனக் கதிகமா மொழியுநுக
ரன்னதா னந்தனி லுமோ
ரதிகதா னமுமில்லை யென்றுபல நூலெலா
மாராய்ந்த பேருரை செய்வார்

ஆதவன் பிரமன்விண் ணவர்முனிவர் பரவவரு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 55

பொருள்: கதிரவன் நான்முகன் வானவர் முனிவர் முதலானோர் வாழ்த்த வரும் முதல்வனே. அருமை ..... தேவனே. மறையவர்களுக்கு மேலான சாதியும், பொன்மயமான மகாமேருவினும் பெரிய மலையும்,

உலகிலே வெண்மையான அலைகளை வீசி ஓடும் கங்கையாற்றினும் மேலாக ஓடும் ஆறும், ஒளியைத் தரும் ஞாயிற்றினும் மேம்பட்ட ஒளிப்பொருளும், சூழும் தீயினும் மேம்பட்ட தூய பொருளும், தூயவர்களான பெற்றோரினும் மேலான தெய்வமும், வேதத்தினும் மேம்பட்ட நூல்களும், ஆதி வடமொழியினும் உயர்ந்த மொழியும், உண்ணப்படும் உணவுக்கொடையினும் உயர்ந்த ஒரு கொடையும் இல்லையெனப் பல நூல்களையும் ஆராய்ந்தவர்கள் கூறுவார்கள்.

வடமொழிப் பற்றும் சாதிப் பிரிவினையும் தலைமை பெற்றிருந்த காலத்திலே இந்தச் சதகம் எழுதப்பெற்றது போலும். அதனாலேயே வேதியரே உயர்ந்த சாதி என்றும், வடமொழியே சிறந்த மொழி என்றும், வேதமே உயர்ந்த நூல் என்றும் கூறியிருக்கிறார். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று வள்ளுவர் கூறுவதாலும், வேதத்தினும் தமிழருக்குத் திருக்குறளே ஆதாரம் ஆதலாலும், வடமொழியினும் முற்பட்டமொழி தமிழ் என்று ஆராய்ச்சியாளரால் முடிவு செய்யப்பட்டதாலும் அம்மூன்றும் மறுக்கப்படும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே ஆகையால் அன்னதானம் சிறந்ததாயிற்று. ஆதவன், பிரமன், விண்ணவர், முனிவர் பரவுதல் அறப்பளீசுரத்தின் புராணவரலாறு ஆகும்.

வீணர்

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீணுரை
விரும்புவோ ரவரின் வீணர்
விருந்துகண் டில்லாள் தனக்கஞ்சி யோடிமறை
விரகிலோ ரவரின் வீணர்

நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாடியவர் மேற்கவி சொல்வார்
நானிலந் தனில்வீண ரவரினும் வீணரே
நரரைச் சுமக்கு மெளியோர்

தேட்டறியி லாதபெரு வீணரே யவரினுஞ்
சேரொரு வரத்து மின்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணனாய்த்
திரியுமெளி யேனை மாட்கொண்

டாட்டஞ் செயும்பதாம் புயமுடியின் மேல்வைத்த
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 56

பொருள்: வீணனாகத் திரியும் எளியவனான என்னை அடிமையாக ஏற்று, நடனமாடும் திருவடித் தாமரையை என் தலைமீது வைத்த தூயவனே, அருமை..... தேவனே, மாமனார் வீட்டில் உறைவோரும் வீணராவர், அவரினும் வீண் உரையாடலை விரும்புவோர் வீணர், அவரினும் விருந்தினரைக் கண்டவுடன் மனைவிக்கு அஞ்சி ஓடி மறையும் அறிவு இல்லாதவர் வீணர். அவரினும் அகக்கண்ணைத் தரும் படிப்பில்லாதவரும் வீணரே, அவரினும் உலகில் கல்லாதவரைத் தேடி அவர்மேல் பாக்களைப் புனைபவர் வீணர், அவரினும் மக்களைச் சுமக்கும் எளியவர் வீணர், பொருளைத் தேடும் அறிவற்ற பெருவீணரேயான அவரினும், வரக்கூடிய எந்த வரவும் இல்லாமல் செலவு செய்பவர் பெரிய வீணராவர்.

உதவியின்றிக் கெடுவன

மூப்பொருவ ரில்லாத குமரிகுடி வாழ்க்கையு
மூதரணி லாத நகரும்
மொழியும்வெகு நாயகஞ் சேரிடமும் வருமெதுகை
மோனையில் லாத கவியும்

காப்பமை விலாததோர் நந்தவன மும்நல்ல
கரையிலா நிறை யேறியுங்
கசடறக் கற்காத வித்தையு முபதேச
காரண னில்லாத தெளிவும்

கோப்புள வினோதமுடை யோரருகு புகழாத
கோதையர்செய் கூத்தாட் டமுங்
குளிர்புன னிறைந்துவரு மாற்றோர மதினின்று
கோடுயர்ந் தோங்கு தருவும்

ஆப்பதில் லாததே ரிவையெலா மொன்றாகு
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 57

பொருள்: தலைவனே, அருமை .... தேவனே, முதியவர் ஒருவர் இல்லாத கன்னியின் இல்வாழ்க்கையும், பழைமையான காவல் இல்லாத நகரமும், கூறப்பட்ட பல அதிகாரிகள் கூடும் இடமும், வரும் எதுகையும் மோனையும் சேராத செய்யுளும், காவல் பொருந்தியிராத ஒரு பூங்காவும், நன்கு கரையில்லாத நீர் நிறைந்த ஏரியும், குற்றமின்றிக் கல்லாத கல்வியும், கற்பிக்கும் ஆசிரியன் இல்லாத கலைத் தெளிவும், கோவையான பலவகை விளையாட்டினர் அருகிலிருந்து புகழ்ந்து கூறாத விறலியர் ஆடும் கூத்தும், குளிர்ந்த நீர் நிறைந்து வருகின்ற ஆற்றோரத்திலே இருந்து வளரும் நீண்ட உயர்ந்த கொம்புகளை உடைய மரமும், அச்சாணி இல்லாத தேரும் இவையெலாம் ஒரே தன்மை உடையவனவாகும்.

இவையே போதுமெனல்

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர்
பூவலஞ் செய வேண்டுமோ
பொல்லாத கொலைகள விலாதநன் னெறியுளோர்
புகழறஞ் செய வேண்டுமோ

நையாத காமத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செய வேண்டுமோ
நன்மனோ சுத்தியுண் டானபேர் மேலுமொரு
நதிபடிந் திட வேண்டுமோ

மெய்யாநி னடியாரைப் பரவுவோ ருன்பதம்
விரும்பிவழி பட வேண்டுமோ
வேதியர் தமைப்பூச பண்ணுவோர் வானவரை
வேண்டி யர்ச்சனை செய்வரோ

ஐயா றுடன்கமலை சோணா சலந்தில்லை
யதிபனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 58

பொருள்: திருவையாறு, திருவாரூர், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய ஊர்களின் தலைவனே, அருமை .... தேவனே, அழியாத உண்மையும் ஒழுக்கமும் உடையவர்கள் உலகை வலம் வரவேண்டுமோ ? தீய கொலையும் களவும் அற்ற நல்லொழுக்கம் உடையவர்கள் புகழத் தக்க அறங்களைச் செய்தல் வேண்டுமோ ? மெலியாத ஆசையையும் ஈயாமையையும் விட்டவர்கள் வேறு நல்ல அறத்தை நாடுதல் வேண்டுமோ ? நல்ல உள்ளத் தூய்மை பெற்றவர்கள் வேறாக ஒரு தூய ஆற்றில் முழுகுதல் வேண்டுமோ ? உன் தொண்டரை உண்மையாக வணங்குவோர் நின் திருவடியைப் போற்றுதலும் வேண்டுமோ ? மறையவரை வணங்குவோர் வானவரை விரும்பி மலரிட்டு வழிபடல் வேண்டுமோ ?

நன்னெறியில் நிற்போர் வேறு அறங்கள் செய்ய வேண்டியதில்லை.

அரியயராவோர்

பதின்மரி லொருத்தர்சபை மெச்சிடப் பேசுவோர்
பாடுவோர் நூற்றி லொருவர்
பார்மீதி லாயிரத் தொருவர்விதி தப்பாது
பாடிப்ர சங்க மிடுவோர்

இதனருமை யறிகுவோர் பதினாயிரத் தொருவ
ரிதையறிந் திதய மகிழ்வா
லீகின்ற பேர்புவியி லேயருமை யாகவே
யிலட்சத்தி லேயொருவ ராம்

துதிபெருக வருமூன்று காலமு மறிந்துமெய்த்
தூயர் கோடியி லொருவராந்
தொல்லுலகு புகழ்காசி வேகாம் பரங்கைலை
சூழுமவி னாசிபே ரூர்

அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
யத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 59

வெண்காடு - திருவெண்காடு, செங்காடு - செங்காட்டங்குடி.

பொருள்: பழைமையான உலகம் போற்றுகிற காசியும் காஞ்சியும் கயிலையும் சூழும் அவிநாசியும் திருப்பேரூரும் பெருமையுடைய திருவெண்காடும் திருச்செங்காடும் திருக்காளத்தியும் இடமாகக் கொண்ட முதல்வனே, அவை

புகழும்படி பேசுவோர் பத்துக்கு ஒருவர், பாடுவோர் நூற்றுக்கு ஒருவர், முறை தவறாமல் பாடிச் சொற்பொழிவு செய்வோர் உலகத்தில் ஆயிரத்தில் ஒருவர், இந்தச் சொற்பொழிவின் சிறப்பைத் தெரிந்தவர் பதினாயிரவரில் ஒருவர். இதன் பெருமையை உணர்ந்து மனம் மகிழ்ந்து பொருள் அளிப்போர். உலகில் அருமையாக இலட்சத்துக்கு ஒருவர் ஆவர். புகழ் மிக வரும் முக்காலமும் உணர்ந்த உண்மையான நல்லோர் கோடி மக்களில் ஒருவர் ஆவர்.

கற்பு மேம்பாடு

தன்கணவ னுருவமாய்த் தற்புணர வந்தோன்
றனக்கிணங் காத நிறையாள்
தழற்கதி ரெழாமலும் பொதுவிடி யாமலுஞ்
சாபங் கொடுத்த செயலாள்

மன்னிவள ரழல்மூழ்கி யுலகரிய வேதனது
மகிழ்நனைச் சேர்ந்த பரிவாள்
மைந்தனைச் சுடவந்த விறைவன் தடிந்தவடி
வாள்மாலை யான கனிவாள்

நன்னதி படிந்திடுவ தென்னவா ரழழ் மூழ்கி
நாயகனை மேவு தயவா
ணானிலம் புகழ்சாலி பேர்பெரு நளாயினி
நளினமலர் மேல்வை தேகி

அன்னமென வருசந்த்ர மதிதுரோ பதையென்ப
ராதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 60

பொருள்: முதல்வனே, அருமை ...... தேவனே. தன்னுடைய கணவனின் வடிவத்துடன் தன்னைக் கூட வந்தவனுக்குச் சம்மதியாத கற்புடையாள் உலகம் புகழும் அருந்ததி. கதிரவன் தோன்றாமலும் இரவு கழியாமலும் சாபம் கொடுத்த செய்கையினால் புகழ்பெற்ற நளாயினி, பொருந்தி வளர்ந்த தீயினுள் புகுந்து உலகம் அறியுமாறு தன் கணவனை அடைந்த அன்பினாள் தாமரை மலர்மேல் இருக்கும் இலக்குமியின் அம்சமான சீதை. மகனைத் தீயிலிட வந்த போது தன் கணவன் வெட்டிய கூறியவாள் மலர் மாலையான கனிவுடையவள் அன்னம் போன்ற நடையினை உடைய சந்திரமதி, நல்ல ஆற்றிலே மூழ்குவது போல நிறைந்த தீயிலே முழுகித் தன் கணவனைக் கூடும் அன்புடையவள் திரௌபதி என்று கூறுவர்.

கோடியுடுக்கும் நாள்

கறைபடா தொளிசேரு மாதிவா ரந்தனிற்
கட்டலாம் புதிய சீலை
கலைமதிக் காகாது பலகாலு மழையினிற்
கடிது நனைவுற் றொழிதரும்

குறைபடா திடர்வரும் வீரியம் போமரிய
குருதி வாரந் தனக்குக்
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியிற்
குருவார மதி லணிந்தால்

மறைபடா தழகுண்டு மேன்மேலு நல்லாடை
வருமினிய சுக்கி ரற்கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு
வாழ்வுபோ மரண முண்டாம்

அறைகின்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 61

குருதி வாரம் - செவ்வாய்க்கிழமை, புந்தி - புதன், குருவாரம் - வியாழன், சுக்கிரற்கோ - வெள்ளி.

பொருள்: கூறப்படுகின்ற மறை வடிவாகவும் ஆகம வடிவாகவும் விளங்கும் தூயவனே அருமை ...... தேவனே. ஞாயிற்றுக்கிழமையில் புதிய ஆடை உடுத்தலாம். அவ்வாறு உடுத்தால் ஆடையில் கறை பிடிக்காது. தூயதாக ஒளிதரும். கலைகளை உடைய திங்களுக்கு ஆகாது. பல முறையும் மழையில் நன்றாக நனைந்து கிழிந்து போகும். நன்மைக்கு ஆகாத செவ்வாய்க்கிழமையில் மிகுந்த துன்பம் உண்டாகும். ஆண்மையும் நீங்கும். புதன் கிழமையில் சில நாட்களிலே கிழிந்துவிடும், வெற்றியும் நீங்கும். வியாழக்கிழமையில் உடுத்தினால் நீங்காத அழகு உண்டாகும். மேலும் மேலும் நல்ல ஆடைகள் கிடைக்கும். வெள்ளிக்கிழமையில் உடுத்தினால் நல்வாழ்வும் செல்வமும் உண்டாகும். தீய சனிக்கிழமையில் உடுத்தினால் வாழ்வு சிதையும், இறப்பும் உண்டாகும்.

சகுனம்

சொல்லரிய கருடன்வா னரமரவ மூஞ்சூறு
சூகரங் கீரி கலைமான்
துய்யபா ரத்வாச மட்டையெலி புன்கூகை
சொற்பெருக மருவு மாந்தை

வெல்லரிய கரடிகாட் டான்பூனை புலிமேல்
விளங்குமிரு நா வுடும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றியுண் டதிக நலமாம்

ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைதாக்க
லொருதுடை யிருத்தல் பற்ற
லொருதும்ம லாணையிட லிருமல்போ கேலன்ன
வுபசுருதி சொல்லிவை யெலாம்

அல்லல்தரு நல்லவல வென்பர்முதி யோர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 62

பொருள்: பெரியோர் வாழ்த்துகின்ற தூயவனே! அருமை .... தேவனே. சொல்லுதற்கு அரிய கருடனும், குரங்கும், பாம்பும், மூஞ்சுறும், பன்றியும், கீரியும், கலைமானும், தூயதான கரிக்குருவியும், அட்டையும், எலியும், இழிந்த கோட்டானும், மிகுதியாகப் பேசப்படும் ஆந்தையும், வெல்ல முடியாத கரடியும், காட்டுப் பசுவும், பூனையும், புலியும், மேலாக விளங்கும் இரு நாவை உடைய உடும்பும் என மிகுதியாகக் கூறப்படும் இவைகள் யாவும் வலத்தில் இருந்து இடப்பக்கம் போனால் வெற்றி உண்டாகும். மிகுதியான நலமும் உண்டாகும். விரைந்து வழிப்பயணம் செல்வோரின் தலையில் இடித்தல், ஒரு காலில் நிற்றல், வந்து கையைப் பிடித்தல், ஒற்றைத் தும்மல், ஆணையிடுதல், இருமுதல், போகாதே என்று காதில் விழும்படிக் கூறுதல் இவைகள் யாவும் துன்பமே தரும். நல்லன அல்ல என்பர்.

சகுனம் - 2

நரிமயில் பசுங்கிள்ளை கோழிக்கொக் கொடுகாக்கை
நாவிசிச் சிலியோந்தி தான்
நரையான் கடுத்தவாய்ச் செம்போத் துடன்மேதி
நாடரிய சுரபி மறையோர்
வரியுழுவை முயலிவை யனைத்தும் வல மாயிடின்
வழிப்பயண மாகை நன்றா

மற்றுமிவை யன்றியே குதிரையனு மானித்தல்
வாய்ச்சொல்வா வாவென் றிடல்

தருவளை தொனித்திடுதல் கொம்புகிடு முடிமுரசு
தப்பட்டை யொலிவல் வேட்டுத்
தனிமணி முழக்கெழுத லிவையெலா மூர்வழி
தனக்கேக நன்மை யென்பார்

அருணகிர ணோதயத் தருணபா னுவையனைய
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 63

மேதி - எருமை, நாடரிய சுரபி - பசுமாடு,
வரியுழுவை - வரிகளை உடைய வேங்கை.

பொருள்: சிவந்த கதிர்களை உடைய காலை இளஞ்சூரியன் போன்ற பெரியோனே, அருமை ..... தேவனே, நரியும் மயிலும் பச்சைக்கிளியும் கோழியும் கொக்கும் காக்கையும் கத்தூரி மிருகமும் கிச்சிலிப் பறவையும் ஓணானும் வல்லூறும் விரைந்து கத்தும் செம்போத்தும் எருமையும் சிந்தித்தற்கு அருமையான பசுவும் அந்தணரும், வரிப் புலியும், முயலும் ஆகிய இவைகள் யாவும் வலமாக வந்தால் வழிச் செலவு நன்மை தரும், மேலும் இவையில்லாமலும் குதிரை கனைத்தலும், வாய்ச்சொல்லாக வா வா என்று கூறுதலும், கொடுக்கின்ற சங்கு ஒலித்தலும், கொம்பும் கிடுமுடியும் முரசும் தப்பட்டையும் ஆகிய இவற்றின் ஒலியும், விரைந்து மணந்துகொண்ட ஒப்பற்ற மங்கல வாத்தியம் முழங்குதலும் இவை யாவும் ஊர்ச்செலவுக்கு நல்லது என்று அறிஞர் கூறுவர்.

சகுனம் - 3

தலைவிரித் தெதிர்வருத லொற்றைப் பிராமணன்
றவசிசன் னாசி தட்டான்
றனமிலா வெறுமார்பி மூக்கறைபுல் விறகுதலை

தட்டைமுடி மொட்டைத் தலை

கலன்கழி மடந்தையர் குசக்கலஞ் செக்கான்
கதித்ததில தைல மிவைகள்
காணவெதிர் வரவொணா நீர்க்குட மெருக்கூடை
கனிபுலா லுபய மறையோர்

நலமிகு சுமங்கலை கிழங்குசூ தகமங்கை
நாளும்வண் ணானழுக் கும்
நசைபெருகு பாற்கலச மணிவளையல் மலரிவைக
ணாடியெதிர் வர நன்மையாம்

அலைகொண்ட கங்கைபுனை வேணியாய் பரசணியு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 64

கறுத்த தில தைலம் – கறுத்த எள்ளின் எண்ணெய்.

பொருள்: அலையை உடைய கங்கையை அணிந்த சடையனே, மழு ஏந்திய பெரியோனே, அருமை..... தேவனே, தலைவிரி கோலமாக ஒருவர் எதிர் வருதலும், ஒற்றைப் பார்ப்பானும், தவம் புரிவோனும், துறவியும், தட்டானும், தனம் இல்லாத மார்பினளும், மூக்கில்லாதவனும், புல் தலையனும், விறகு தலையனும், சப்பைத் தலையும், மொட்டைத் தலையும், அணிகலன் இல்லாத பெண்களும், குசவன் பாண்டமும், வாணியன் மிகுந்த எண்ணையும் இவைகள் கண்காண எதிர்வருதல் தகாதன. நீர்க்குடமும், எருக்கூடையும், பழமும், இறைச்சியும், இரட்டைப் பார்ப்பனரும், நன்மை மிக்க மங்கல மடந்தையும், கிழங்கும், பூப்புப்பெண்ணும், நாளும் எடுக்கும் வண்ணான் அழுக்கும், விருப்பம் ஊட்டும் பாற்குடமும், மணியும், வளையலும், மலரும் இவைகள் தேடி எதிரே வரின் நலம் ஆகும்.

இக்கருத்துக்கள் இன்று நடைமுறையில் ஏற்கக் கூடியதாக இல்லை.

உணவில் விலக்கு

கைவிலைக் குக்கொளும் பாலசப் பால்வருங்
காராக் கறந்த வெண்பால்
காளான் முருங்கைசுரை கொம்மடி பழஞ்சோறு
காந்திக் கரிந்த சோறு

செவ்வையில் சிறுகீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல் லமலா வகஞ்
சீரிலா வெள்ளுள்ளி யீருள்ளி யிங்குவொடு
சிறப்பில்வெண் கத்திரிக் காய்

எவ்வமில் சிவன்கோயி னிர்மாலி யங்கிரண
மிலகுசுட ரில்லாத வூ
ணிவையெலாஞ் சீலமுடை யோர்களுக் காகா
வெனப்பழைய நூலுரை செயும்

ஐவகைப் புலன்வென்ற முனிவர்விண் ணவர்போற்று
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 65

அசப்பால் வரும் – வழி தவறி வரும், காரா – காராம் பசு, மலாவகம் – பிண்ணாக்கு, இங்கு – பெருங்காயம்.

பொருள்: ஐந்து புலன்களையும் வென்ற முனிவரும் வானவரும் வாழ்த்தும் தூயவனே, அருமை ..... தேவனே. கைவிலைக்கு வாங்கும் பாலும், ஆட்டுப்பாலும், வரும் காரா பசுவினிடம் கறந்த வெண்மையான பாலும், காளான், முருங்கை, சுரை, கொம்மடி, பழஞ்சோறு, காந்திக் காரித்த சோறு, செவ்வை இல் சிறுக்கீரை, பீர்க்கு, அத்தி, வெள்ளுப்பு,

தென்னை, வெல்லம், பிண்ணாக்கும், சிறப்பில்லாத வெள்ளைப் பூண்டும், வெங்காயமும், பெருங்காயத்துடன், சிறப்பில்லாத வெள்ளைக் கத்தரிக்காயும், குற்றம் அற்ற சிவபெருமான் திருக்கோயிலில் இருந்து கழிக்கப்பட்ட பொருளும், சூரியன் ஒளியும், விளங்கும் விளக்கும், இல்லாத காலத்து உணவும் இவைகள் யாவும் ஒழுக்கமுடையோர்க்குத் தகாதவை என்று பழைமையான நூல்கள் கூறும்.

நற்பொருளிற் குற்றம்

பேரான கங்கா நதிக்குமதன் மேல்வரும்
பேனமே தோஷ மாகும்
பெருகிவளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷ மாகும்

சீராந் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷ மாகும்
தீதின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்வ தவர்மேற் றோஷமாம்

தாராள மாமிகத் தந்துளோர் தாராமை
தானிரப் போர் தோஷமாஞ்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
தாலஞ்செய் தோஷ மாகும்.

ஆராயு மொருநான் மறைக்குமெட் டாதொளிரு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 66

பேனம் - நுரை, கைப்பது - கசப்பது, தாலம் - நாக்கு.

பொருள்: ஆராய்ச்சி செய்யப்படுகிற ஒப்பற்ற நான்கு மறைகளுக்கும் எட்டாத பெரியோனே, அருமை ...... தேவனே, புகழ்பெற்ற கங்கை ஆற்றுக்கும் அதன் மேல் வருகின்ற நுரை ஒன்றே குற்றம் எனப்படும். மிக வளர்ச்சியுடைய வெண்மையான திங்களுக்கு அதனுள் இருக்கின்ற கறுப்பே பெரிய குற்றம் எனப்படும். கீர்த்தி மிக்க தவத்தினர்க்கு மற்றவர்மேல் உண்டாகும் சினமே குற்றம் எனப்படும். குற்றமற்ற பேரரசர்கள் ஆராயாமல் ஒன்றினைச் செய்வது அவர்களுக்குக் குற்றம் எனப்படும். அளவின்றி கொடுத்தவர்கள் பின் கொடாமை இரவலரின் ஊழ்வினைக் குற்றம் எனப்படும். சிறப்புடைய நல்ல கருப்பஞ்சாறு கசப்பது பருகுவோருடைய நாவின் குற்றம் எனப்படும்.

மனை கோல்வதற்கு மாதம்

சித்திரைத் திங்கடனின் மனைகோல மனைபுகச்
செல்வமுண் டதினு நலமே
சேரும்வை காசிக்கு மேனா ளரன்புரந்
தீயிட்ட தானி யாகா

வெற்றிகொ ளிராகவன் றேவிசிறை சேர்கடகம்
வீறல்ல வாவணி சுகம்
மேவிடுங் கன்னியிர ணியன்மாண்ட தாகாது
மேன்மையுண் டைப்பசிக் கே

உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியி
லோங்கு பாரதம் வந்தநா
ளுயர்வுண்டு மகரத்தின் மாசிமா தத்தில்விட
மும்பர்கோ னுண்ட தாகா

தந்தநீ மாரனை யெரித்தபங் குனிதானு
மாகுமோ மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 67

வீறல்ல - நல்லதல்ல, கடகம் - ஆடி, கன்னி - புரட்டாசி, மகரம் - தை.

பொருள்: தலைவனே அருமை ..... தேவனே, சித்திரை மாதத்தில் வீடு கோலினாலும், வீடுகுடி புகுந்தாலும் செல்வம் உண்டாகும். சித்திரையினும், வைகாசி மாதத்தில் நன்மையே உண்டாகும். முற்காலத்தில் ஆனி மாதத்திலேதான் சிவபெருமான் முப்புரத்திற்கு நெருப்பிட்டது ஆகையால் ஆனி ஆகாது. வெற்றியைக் கொண்ட இராமன் மனைவி சிறை சென்ற ஆடித்திங்கள் சிறப்புடையது அன்று. ஆவணி மாதம் நலம் பொருந்தும். புரட்டாசி மாதம் இரணியன் இறந்தது ஆகையால் தகாது. ஐப்பசி மாதம் உயர்வு உண்டு. கார்த்திகை மாதத்தில் நன்மை, பெரிய பாரதச்சண்டை வந்த காலமான மார்கழி மாதம் ஆகாது. தை மாதத்தில் மேன்மை. வானவர் தலைவனான சிவபெருமான் நஞ்சுண்டதாகிய மாசி மாதத்தில் தகாது. நீ காமனை எரித்த பங்குனி மாதமும் தகாது.

கதிரவன் ஆடி மாதத்தில் கடக ராசியில் செல்கிறான். ஆகையால் கடகம் ஆடியாயிற்று. இவ்வாறே கன்னி, மகரம் ஆகியவற்றிற்கும் கொள்க.

விருந்து வாரம்

செங்கதிர்க் குறவுபோம் பகைவரும் விருந்தொருவர்
செய்யொணா துண்ணொ ணாது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந் தருந்தார்

பொங்குபுத னன்மையுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிக பகையாம்
புகரவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்ப்
போனவுற வுந் திரும்பும்

மங்குனிகர் சனிவார நல்லதா மிதனினு
மனமொத் திருந்த விடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்த்தநா ளென் றறியலாம்

அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 68

பொன்னவன் - வியாழன், புகரன் - வெள்ளி, வாலாயமாய் - விருப்பமுடன்.

பொருள்: அகங்கையில் விளக்கமுற்று ஒளிரும் தூய மழுவையுடையவனே, பெரியோனே, அருமை ....தேவனே, ஞாயிற்றுக்கிழமையில் ஒருவர் விருந்து செய்யவும் உண்ணவும் ஒவ்வாது. செய்தால் உறவு நீங்கிப் பகை உண்டாகும். திங்கட்கிழமையில் விருந்துண்டால் உறவு வரும். வேறு நன்மைகளும் உண்டாகும். செவ்வாய்க் கிழமையில் விருந்துண்ண மாட்டார். பகை உண்டாகும். நலமிக்க புதன்கிழமையில் நலம் உண்டாகும். உறவும் உண்டாகும். வியாழக்கிழமையில் விருந்துண்டால் மிகு பகை வரும். வெள்ளிக்கிழமையானால் நீண்ட நாட்களாகப் பகையான உறவினரும் திரும்புவர். முகில் அனைய சனிக்கிழமை நலம் உண்டாகும். மேலும் இந்த நாளே உளம் ஒத்து உள்ள இடத்தில் வழக்கமாகச் சென்று விருந்து உண்ணவும் செய்யவும் பொருந்திய நாள் என உணரலாம்.

சனியின் நிறம் கருமை ஆகையால் மங்குல் நிகர் சனி என்றார்.

பூப்பு வாரம்

அருக்கனுக் கதிரோகி யாவணற் சோமனுக்
கானகற் புடைய ளாவா
ளங்கார கற்குவெகு துக்கியா வாள்புந்தி
யளவில்பைங் குழவி பெறுவாள்

திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்தினொடு
சிறுவரைப் பெற்றெடுப் பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாந்
திருவுமுண் டாயி ருப்பாள்

கருத்தழிந் தெழில்குன்றி வறுமைகொண் டலைகுவாள்
காரிவா ரத்தி லாகில்
களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல னென்றுரை செய்வார்

அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட சோதியே
யண்ணலே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 69

பொருள்: அன்புடன் எளியவனாகிய என்னை அடிமையாக ஏற்ற பேரொளியே, பெரியோனே, அருமை .... தேவனே, ஞாயிற்றுக்கிழமையில் மிகு நோயுடையவள் ஆவாள். நல்ல திங்களில் மிகுதியான கற்புடையவள் ஆவாள். செவ்வாயில் மிகுந்த வருத்தமுடையவள் ஆவாள். புதனில் மிகுதியான குழந்தைகளைப் பெறுவாள். சிறப்புற்ற வியாழனில் அளவற்ற செல்வத்துடன் மக்கட்பேறும் உடையவளாய் இருப்பாள். புகழ்மிக்க வெள்ளியில் மிகவும் இன்பமுடையவளும், செல்வமுடையவளும் ஆவாள், சனிக்கிழமையில் ஆனால் மனம் கெட்டு, அழகு இழந்து, வறுமையுடன் திரிவாள். கலவைச் சந்தனம் பூசிய கொங்கைகளை உடைய பெண்கள் பூப்படைகிற வார கால பலன் இவை எனக் கூறுவர்.

இக்கருத்துக்கள் அக்காலத்தே எழுந்தவை. இன்று அறிவியலோடு ஒத்துப் போவதாக அறிய இயலவில்லை.

பூப்பு லக்கினம்

வறுமைதப் பாதுவரு மேடத்தி லிடபத்தின்
மாறாது விபசாரி யாம்
வாழ்வுண்டு போகமுண் டாகுமிது னங்கடகம்
வலிதினிற் பிறரை யணைவாள்

சிறுமைசெய மிடிசேர்வண் மிருகேந் திரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னி யென்னில்
செட்டுடைய டுலையெனிற் பிணியான் மெலிந்திடுவ
டேளினுக் குத் தனுசெனில்

நெறிசிதைவள் பூருவத் தபரநெறி யுடையளாம்
நீண்மகர மான மிலளாம்
நிறைபோக வதிகும்ப மெனின்மீன மென்னிலோ
நெடியபே ரறி வுடையளாம்

அறிவாளர் மடமாதர் தமையறியி ராசிபல
னதுவென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 70

பொருள்: அருமை .... தேவனே, மேட இராசியில் தவறாமல் வறுமை உண்டாகும். இடப ராசியில் தவறாமல் தீய ஒழுக்கமுடையவள் ஆவாள். மிதுனத்தில் வாழ்வும் இன்பமும் அடைவாள். கடகத்தில் தானே மற்றவரைத் தழுவுவாள். சிங்கத்தில் இழிவு தரும் வறுமை உடையவளாவாள். கன்னியில் ஆயின் புகழ்பெறுவாள். துலையாயின் சிக்கனம் உடையவளாயிருப்பாள். விருச்சிகத்தில் நோயால் இளைத்திடுவாள். தனுசில் ஆனால் ஒழுக்கம் கெடுவாள். முன்னும் பின்னும் தீய ஒழுக்கமுடையவளாகவே இருப்பாள். பெரிய மகரத்தில் பெருமை இழந்தவள் ஆவாள். கும்பத்தில் நிறைந்த இன்பம் உடையவள் ஆவாள். மீனத்தில் ஆனால் மிகுந்த பேரறிவு உடையவள் ஆவாள். இளமங்கையரை அறிவார் அறிவதற்குரிய இலக்கின பலன் இது என்று கூறுவர்.

இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பெண்களைக் குறைத்து மதிப்பிடும்படியாக உள்ளது. இதுவும் காலத்திற்குப் பொருந்தாததாகும்.

தீவுங் கடலும்

நாவலந் தீவினைச் சூழ்கருங் கடலளவு
லட்சம்யோ சனை யிதனையே
நாடொறுஞ் சூழ்வதில் வந்தீ வதைச்சூழ்த
னற்கழைச் சாற்றின் கடல்

மேவுமிது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்தன்
மிகுமதுக் கட லதனையே
விழைவுவொடுஞ் சூல்தல்கிர வுஞ்சதீ வம்மிதனில்
மேற்சூழ்த னெய்க் கடலதாம்

பூவிலிது சூழ்தல்சா கத்தீவ மிங்கிதைப்
போர்ப்பது திருப்பாற் கடல்
போதவது சூழ்தல்சான் மலிதீவ மாந்தயிர்ப்
புணரியப் பாலு மப்பால்

ஆவனுறு புட்கரந் தீவாமிதைச் சூழ்வ
தரும்புனற் றருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 71

பொருள்: அருமை .... தேவனே, நாவலந் தீவாகிய இதனைச் சூழ்ந்த கருங்கடலின் பரப்பு இலட்சம் யோசனை. இந்தக் கடலை எப்போதும் சூழ்ந்திருப்பது இலவந்தீவு. அதனைச் சூழ்ந்திருப்பது இனிய கருப்பஞ்சாற்றுக்கடல், பொருந்திய இதனைச் சூழ இருப்பது குசத்தீவு. குசத்தீவைச் சூழ்வது மிகுந்த மதுவின் கடல், மதுக்கடலை விருப்பத்துடன் சூழ்ந்திருப்பது கிரவுஞ்ச தீவு. கிரவுஞ்சத் தீவினைச் சூழ்ந்திருப்பது நெய்க்கடல் ஆகும். உலகில் இதனைச் சூழ்வது சாகத்தீவு. இவ்வுலகில் சாகத்தீவை வளைவது திருப்பாற்கடல், நன்றாக அதனைச் சூழ்வது சான்மலித் தீவு, அதற்கப்புறம் சூழ்வது தயிர்க்கடல், அதற்கப்புறம் சூழ்வது விருப்பமூட்டும் புட்கரத்தீவு, இதனைச் சூழ்வது அரிய நன்னீர்க் கடல்.

நாவல் அம் தீவு-நாவல் மரங்கள் நிறைந்த தீவு. இலவு அம் தீவு - இலவ மரங்கள் நிறைவான தீவு. குசம் - தர்ப்பை: தர்ப்பைத் தீவு. கிரவுஞ்சம் - அன்றில். கிரவுஞ்சப் பறவைகள் உடைய தீவு. சாகம் - தேக்கு: தேக்கு மரத்தீவு சான்மலி என்பதும் இலவ மரமேயாகும். புட்கரம் - பருந்து. நாவல், இலவம், குசம், கிரவுஞ்சம், சாகம், சான்மலி, புட்கரம் இவற்றை மிகுதியாகவோ சிறப்பாகவோ உடைய ஏழு தீவுகள். அதுபோன்றே கருங்கடல், கழைச்சாற்றுக் கடல், கட்கடல், நெய்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நறுநீர்க் கடல் என ஏழு கடல்கள். இவ்வாறு புராணங்கள் கூறுகின்றன.

மாணிக்கங்கள்

சுழிசுத்த மாயிருந் ததிலும் படைக்கான
துரகமோர் மாணிக்க மாஞ்
சூழ்புவிக் கரசனா யதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக்க மாம்

பழுதற்ற வதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக்க மாம்
பலகலைகள் கற்றறி யடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்க மாம்

ஒழிவற்ற செல்வனா யதிலே தியாகியா
முசிதனோர் மாணிக்க மா
முத்தம குலத்துதித் ததிலுமோ மெய்ஞ்ஞான
முடையனோர் மாணிக்க மாம்

அழிவற்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 72

துரகம் - குதிரை.

பொருள்: கெடுதல் இல்லாத மறைவடிவாகவும், ஆகம வடிவாகவும் விளங்குகின்ற தூயவனே, அருமை .... தேவனே, தூயசுழிகளுடன்போருக்கும் பயன்படும் குதிரை ஒரு மாணிக்கம் போன்றது. சூழும் உலகிற்கு மன்னனாகி மேலும் அறிவும் உடைய தலைவன் ஒரு மாணிக்கம் போன்றவன். குற்றமற்ற சிறந்த அழகும் கற்பும் உடைய மங்கை ஒரு மாணிக்கம் போன்றவள். பலவகையான கலைகளைப் படித்தறிந்து, அடக்கமாகவும் இருக்கும் பாவலன் ஆராயின் ஒரு மாணிக்கம் போன்றவன் அளவில்லாத செல்வத்துடன் மேலும் கொடையாளியுமான உயர்ந்தோன் ஒரு மாணிக்கம் போன்றவன். நல்ல குடியில் பிறந்து மேலும் மெய்யறிவும் உடையவன் ஒரு மாணிக்கம் போன்றவன்.

உண்டியிலையும் முறையும்

வாழையிலை புன்னைபுர சுடனற் குருக்கத்தி
மாப்பலாத் தெங்கு பன்னீர்
மாசிலமு துண்ணலா முண்ணாத வோவரசு
வசனஞ் செழும் பாடலம்

தாழையிலை யத்தியா லேரண்ட பத்திரஞ்
சகதேவ முண் முருக்குச்
சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனினுமுண் டிடவொ ணாதால்

தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள் பல வருந்தல்
சற்றுண்டன் மெத்தவூ ணித்தனையு மெய்ப்பிணி
தனக்கிட மெனப் பருகிடார்

ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலக
னாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 73

ஒணாதால் - கூடாததால்.

பொருள்: நாற்புறமும் கடல் சூழ்ந்த உலகில் வேளாளர் மரபில் சிறப்புற்றவன் ஆகிய எமது அருமை .... தேவனே, வாழையிலை, புன்னை, பரசுடன், நல்குருக்கத்தி, மா, பலா, தெங்கு, பன்னீர் ஆகிய இலைகளில் குற்றமற்ற உணவை உண்ணலாம். உண்ணத்தகாதனவோ எனில் அரசு, வனசம், செழும்பாடலம், தாழையிலை, அத்தி, ஆல், ஏரண்ட பத்திரம், சகதேவம். முள்முருக்கு பொருந்திய இவற்றிலே அன்றி, வெண்மையான பாலை உடைய எருக்கிலை, இச்சில் இலைகளிலும் உண்பது தகாது ஆகும். இடைவிடாத சிற்றுண்டியும் அடிக்கடி நீர் பருகலும் பலவகைச் சோறுண்ணலும் சிறிதாக உண்பதும் மிகுதியாக உண்பதும் உடல்நோய்க்கு இடமாகும் என்பதால் இம்முறையில் உண்ணார்.

வனசம் - தாமரையிலை. செழும்பாடலம் - வளமிக்க பாதிரி. ஏரண்ட பத்திரம் - ஆமணக்கு இலை. இச்சில் இலை- இத்தியிலை. "மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்ற குறளின் கருத்திற்கேற்ப சற்றுண்டல் மெத்தவூண் கெடுதி என்றார். இச்செய்யுளில் இந்நூலாசிரியரை ஆதரித்த மதவேளின் குலம் வேளாளர் குலம் என்று அறியப்படுகிறது.

கவிஞர் வறுமை

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
யிணையிலாச் சேட னென்று
மீவதில் லாதகன லோபியைச் சபையதனி
லிணையிலாக் கர்ண னென்றும்

அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
யதிவடிவ மார னென்று
மாயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
யாண்மைமிகு விஜய னென்றும்

முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழியரிச் சந்த்ர னென்றும்
முதுலகி லிவ்வண்ணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்ப தென்னோ

அழலென வுதித்துவரு விடமுண்ட கண்டனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 74

பொருள்: நெருப்பைப் போல தோன்றிவந்த நஞ்சினை உண்ட கழுத்தை உடையவனே, குற்றமற்றவனே, அருமை .... தேவனே, எழுதவும் படிக்கவும் வழியறியாத பேதையை ஒப்பற்ற ஆதிசேடன் என்றும், கொடுத்து அறியாத பெரிய அழுக்கனை அவையிலே ஒப்பற்ற கொடையில் சிறந்த கர்ணன் என்றும், அழகு இல்லாத மிகுந்த அருவருப்பான உருவமுடையவனைப் பேரழகுடைய காமன் என்றும், படையேந்திடவும் பழகாத ஆண்மையற்றவனை வீரத்தில் சிறந்த விசயன் என்றும், முற்றிலும் பொய் சொல்லித் திரியும் வஞ்சகனைச் சொல்லில் அரிச்சந்திரன் என்றும் பழைமையான இந்த உலகத்தில் பாவலர்கள் புகன்று தகுதியின்றி இரப்பது என்ன காரணமோ?

கவீஞன்

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடை திறந்த தெனவே
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொரு
டெரிந்துரைசெய் திறமை யுடனே

விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
விரிவிலக் கண விகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்குமுல கத்தியல்பு
மிக்கப்ர பந்த வண்மை

உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
யொத்ததிக சபை கண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற்ப்ர சங்கம
துரைப்பவன் கவிஞ னாகும்

அள்ளிவிட முண்டகனி வாயனே நேயனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 75

பொருள்: நஞ்சினை அள்ளிப்பருகிய கனிபோலும் சிவந்த வாயினை உடையவனே, உயிர்களிடம் அன்புடையவனே. தூயவனே, அருமை .... தேவனே, தெளிந்த அமுதவொழுக்குப் போலவும், இனிமை மிகுந்த புதிய தேன் மடைதிறந்தது போலவும், சொல்லப்படும் முத்தமிழுடன், நால்வகைக் கவிகளையும் நால்வகைப் பொருளையும் அறிந்து கூறும் ஆற்றலோடும், கூறுதற்கரிய காவியத்தின் உட்பொருளையும் அணியையும் விரிவான ஐந்து வகை இலக்கணத்தையும் மற்றும் இருக்கின்ற பழைமையான நூல் வழக்கையும் உலக வழக்கையும் மிகுந்த பிரபந்தங்களின் சிறப்பையும் மேலும் உள்ள யாவற்றையும் அறிந்து அலை அடங்கிய கடலைப் போல இருந்து பேரவையைப் பார்த்த காலத்தில் பேரலை முழங்கும் கடலைப் போலச் சொற்பொழிவு செய்பவன் கவிஞன் ஆவான்.

முத்தமிழ்: இயல், இசை, நாடகம். நாற்கவிதை: ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். நாற்பொருள்: அறம், பொருள், இன்பம், வீடு. இலக்கண விகற்பம்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

நற்சார்பு

காணரிய பெரியோர்க டெரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய் புண்ணியங்
கருணையா யவர்சொன்மொழி கேட்டிட லபிப்பதி
ருகாதுசெய் திடு புண்ணியம்

பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய் புண்ணியம்
பிழையாம லவர்தமைத் தொழுதிட லபிப்பதுகை
பெரிதுசெய் திடு புண்ணியம்

வீணெறி செலாமலவர் பணிவிடை லபிப்பதுதன்
மேனிசெய் திடு புண்ணியம்
விடைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்கபூ ருவ புண்ணியம்

ஆணவ மெனுங்களைக ளைந்தறிவி னைந்தந்த
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 76

பொருள்: நான் என்னும் களையை எடுத்துஅறிவினை யருளிய பெரியோனே, அருமை .... தேவனே, பார்த்தற்கரிய பெரியோர்களின் சேவை கிடைப்பது இரு விழிகளின் நல் வினையாகும், அவர்கள் அருளுடன் கூறும் மொழியைக் கேட்கக்கிடைப்பது இரு காதுகளும் செய்த நல்வினையாகும். அவர்களுடைய புகழையே விரும்பிப் போற்றிடக் கிடைப்பது கூறினால் வாய்செய்த நல்வினையாகும். அவர்களைத் தவறாமல் வணங்கக் கிடைப்பது கைகள்

பெரிதும் செய்த நல்வினையாகும். பயனற்ற வழிகளில் செல்லாமல் அவர்களுக்குத் தொண்டு செய்யக் கிடப்பது தன் உடல் செய்திட்ட நல்வினையாகும். விருப்பத்துடன் அவர் கூறியவாறு நடந்திடும் பேறு கிடைப்பது முற்பிறப்பில் செய்த பெரிய வினையாகும்.

பிறந்த நாளுடன் வரும் வாரத்தின் பலன்

சென்ம நக்ஷத்திரத் தாதிவா ரம்வரிற்
நீரா தலைச்ச லுண்டாந்
திங்களுக் காகில்வெகு சுகபோ சனத்தினொடு
திருமாதி னருளு முண்டாம்

வன்மைதரு மங்கார வாரம்வந் தாற்சிறிதும்
வாராது சுகம தென்பார்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனும்
வாரத் துடன் கூடினால்

நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை
நன்மையுட னே வந்திடும்
நாரிய ருடன்போக மிகவுமுண் டொருவெள்ளி
நல்லவா ரத்தில் வந்தால்

அன்மருவு பீடையுண் டாமென்பர் சனியனுக்
கமலனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 77

பொருள்: தூயவனே, அருமை .... தேவனே, பிறந்த நாளுடன் ஞாயிற்றுக்கிழமை வந்தால் நீங்காத அலைச்சல் உண்டாகும். திங்கள் வந்தால் மிகவும் நல் உண்டியோடு

திருமகளின் அருளும் கிடைக்கும். வலிய செவ்வாய்க் கிழமை வந்தால் சற்றும் நலம் கிடையாது என்று கூறுவர். உயர்வான புதன்கிழமையுடன் சேர்ந்தால் குற்றமற்ற பல நூல்களையும் ஆராய்வர். நலந்தரும் வியாழக்கிழமை சேர்ந்து வந்தால் ஆடைகள் நலம் பெறக் கிடைக்கும். ஒப்பற்ற வெள்ளிக் கிழமையில் வந்தால் பெண்களின் இன்பம் மிகவும் கிடைக்கும். சனிக்கிழமை வந்தால் மயக்கந்தரும் நோய் உண்டாகும் என்பர்.

ஏது ?

பொன்னாசை யுள்ளவர்க் குறவேது குருவேது
பொங்குபசி யுள்ள பேர்க்குப்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
பொதுமாதர் விழி வலையிலே

எந்நாளு மலைபவர்க் கச்சமொடு வெட்கமே
தென்றென்று முறு கல்விமே
லிச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
வெளிதா யிருந்து கொண்டே

பன்னாளு மலைபவர்க் கிகழேது புகழேது
பாரிலொரு வர்க் கதிகமே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
பகர்நிறைய மொன்று ளதுகாண்

அன்னாண வருகரி யுரித்தணியு மெய்யனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 78

கரி - யானை.

பொருள்: இருள் நாணுமாறு வந்த யானையின் தோலை உரித்து அணியும் மேனியனே. குற்றம் அற்றவனே, அருமை...தேவனே, பொருளாசைப் பிடித்தவர்க்குச் சுற்றமும் ஆசிரியரும் இல்லை. மிகுந்த பசியுடையவருக்கு நிறைந்த தூய்மையும் உணவு இனிமையும் பார்த்தல் இயலாது. பொதுப் பெண்களின் கண்வீச்சில் எப்போதும் அகப்பட்டு உழல்பவர்க்கு அச்சமும் நாணமும் இல்லை. எப்போதும் சிறந்த கல்வியின் மேல் விருப்பம் உடையோர்க்கு மிக வசதியிலும் தூக்கத்திலும் மனம் நாடாது. எளிய வாழ்வில் இருந்து பல நாளும் திரிபவர்க்கு இகழ்ச்சியும் புகழ்ச்சியும் இல்லை. உலகில் ஒருவருக்குத் துன்பத்தையே செய்திடும் பேதையருக்குப் பாவமன்றிப் புண்ணியம் இல்லை. கூறப்படும் நரகம் ஒன்று இருக்கிறது.

மழைநாள் குறிப்பு

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேனல்ல
　　சீரான பரணி மழையுந்
தீதில்லை காசியிற் பூரணை கழிந்தபின்
　　சேருநா ளாநா ளினில்

ஒத்துவரு மழையுமவ் வானியிற் றேய்பிறையு
　　ளோங்கு மேகா தசியினி
லொளிர்பரிதி வீழ்பொழுதின் மந்தார மும்மழையு
　　முண்டா யிருந் தாடியில்

பத்திவரு தேதியைந் தினிலாதி வாரமும்
　　பகருமா வணி மூலநாள்
பரிதியு மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
　　பாரில்வெகு விளைவு முண்டாம்

அத்தனே பைங்குவளை மாலையணி மார்பனா
மண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 79

பொருள்: தலைவனே, பசிய குவளை மலர் மாலை அணிந்த மார்பனாகிய பெருமைமிக்க எம் அரிய மதவேள், அனுதினமும் ..... தேவனே! சித்திரைத் திங்களில் பதின்மூன்று நாட்களுக்கு மேல் புகழ்பெற்ற பரணி நாளில் பெய்யும் மழையும் குற்றம் அற்ற வைகாசித் திங்களில் முழுமதிக்குப் பிறகு வரும் நாலாம் நாளில் சரியாகி வரும் மழையும் அந்த ஆனித் திங்களில் தேய்பிறையிலே சிறப்புறும் ஏகாதசியில் ஒளிவிடும் ஞாயிறு மறையும்போது மந்தாரத்துடன் பெய்யும் மழையும் பெய்திருந்து ஆடித் திங்களில் ஒழுங்காக வரும் ஐந்தாம் நாளில் ஞாயிற்றுக் கிழமையும் கூறப்படும் ஆவணித் திங்களில் மூல நாளில் ஞாயிறு மறைந்த பிறகு பெருமழை பெய்தலும் நேர்ந்தால் உலகில் மிகுந்த விளைவு உண்டாகும்.

குவளை மலர்மாலை வேளாளருக்கு உரியது.

இருந்து முதவாமை

சமயத்தி லுதவாத நிதியமேன் மிக்கதுயர்
சார்பொழு திலாத கிளையேன்
சபைமுகத் துதவாத கல்வியே னெதிரிவரு
சமயத் திலாத படையேன்

விமலனுக் குதவாத பூசையே னாளுமிருள்
வேளைக் கிலாத சுடரேன்
வெம்பசிக் குதவாத வன்னமே னீடுகுளிர்
வேளைக் கிலாத கலையேன்

தமதுதளர் வேளைக் கிலாதவோர் மனைவியேன்
சரசத் திலாத நகையேன்
சாமரண காலத்தி லுதவாத புதல்வனேன்
றரணிமீ தென்பர் கண்டாய்

அமரர்க்கு முனிவர்க்கு மொருவர்க்கு மெட்டாத
ஆதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 80

பொருள்: வானவர்க்கும் முனிவர்க்கும் பிறர் எவருக்கும் நெருங்க இயலாத முதல்வனே, அருமை ... தேவனே, உலகில் வேண்டிய காலத்தில் பயன்படாத செல்வம் எதற்கு ? மிகுந்த துன்பம் உண்டானபோது பயன்படாத உறவு எதற்கு ? அவைக்களத்தில் பயன்படாத படிப்பு எதற்கு ? பகைவன் எதிர்த்த போரில் பயன்படாத படை எதற்கு ? தூயவனான இறைவனுக்குப் பயன்படாத வழிபாடு எதற்கு ? எப்போதும் இருட்பொழுதில் ஒளி தராத விளக்கு எதற்கு ? கொடிய பசியைத் தணிக்கப் பயன்படாத உணவு எதற்கு ? நீண்ட குளிர் காலத்திற்குப் பயன் தராத ஆடை எதற்கு ? தங்களின் சோர்வு காலத்தில் உடன் இல்லாத ஒரு மனைவி எதற்கு ? விளையாட்டின் போது இல்லாத நகைப்பு எதற்கு ? உயிர்விடும் இறுதிப் பொழுதில் பயனற்ற மகன் எதற்கு ? என்று அறிஞர் கூறுவர்.

மறையோர் சிறப்பு

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
யொன்று தப்பாது புரிவா
ருதயாதி யிற்சென்று நீர்படிகு வார்கால
மொருமூன்றி னுக்கு மறவா

தாராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்நாளு
மதிதி பூசைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரகிரி யாலோப
மின்றியே செய்து வருவார்

பேராசை கொண்டிடார் வைதிகநன் மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர்
பெய்யென பெய்யுமுகி லவர்மகிமை எவர்களும்
பேசுதற் கரிதரிது காண்

ஆரார் நெடுஞ்சடில வமலனே யெனையாளு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 81

பொருள்: ஆத்தி மாலை தரித்த நீண்ட சடையினை உடைய தூயவனே, என்னைக் காக்கும் பெரியோனே, அருமை .... தேவனே, மறை நெறியாகிய நல்ல வழியிலே தவறாது செல்லும் மறையவர்கள் ஆறு தொழில்களையும் விடமாட்டார். தூய்மை விதிகளை ஒன்றேனும் விடாமல் செய்வார். வைகறையிலே போய் நீராடுவார். முக்காலத்திலும் மறவாமல் காயத்ரி மந்திரத்தைத் தெரிந்து ஓதுவார். எப்போதும் விருந்தினரை ஓம்புவார். வேள்வி முதலிய தொழில்களை மந்திரமும் செயலும் குறைவு இல்லாமல் செய்து வருவார். பேராசை கொள்ள மாட்டார். இவர்கள் பெய் என்று கூறியவுடன் பெய்யும் மழை. அவருடைய மேன்மை யாவராலும் கூற இயலாதது.

ஆறு தொழில் : ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், (வேட்டல் - வேள்வி செய்தல். வேட்பித்தல் - வேள்வி செய்வித்தல்)

அரசர் சிறப்பு

மனுநீதி முறைமையும் பரராசர் கொண்டாட
வருமதிக ரண வீரமும்
வாள்விஜய மொடுசரச சாதன விசேஷமும்
வாசி மதகரி யேற்றமும்

கனமா மசைச்சரும் பலமான துர்க்கமுங்
கைகண்ட போர்ப் படைஞருங்
கஜரத பதாதியுந் துரகப்ர வாகமுங்
காலதே சங்க ளெவையும்

இனிதா யறிந்தஸ்தா னாபதிக ளொடுசமர்க்
கிளையாத தளகர்த் தரு
மென்றுவற் றாததன தானிய சமுத்திரமும்
மேற்றமுள குடி வர்க்கமும்

அனைவோரு மெச்சவிங் கிவையெலா முடையபே
ரரசரா மருவை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 82

துர்க்கம் - கோட்டை.

பொருள்: அருமை .... தேவனே, மனுவினால் ஏற்படுத்தப் பெற்ற அரச நெறி ஒழுங்கும் மற்ற மன்னவர்கள் புகழுமாறு காணப்படும் சிறந்த போர் வீரமும் வாள் கொண்டு வெற்றி பெறுவதுடன் இனிய முறையிலே தொழிலை முடித்துக் கொள்ளும் சிறப்பும், குதிரையேற்றம், யானையேற்றங்களில் பயிற்சியும், பெருமை மிக்க மந்திரிகளும், உறுதியான அரணும் பயிற்சி பெற்ற போர் வீரர்களும், யானை தேர் காலாட்களும், குதிரை வெள்ளமும், காலம் இடம் முதலானவற்றை எல்லாம் நன்றாக உணர்ந்த

தானைத் தலைவருடனே, போருக்குப் பின்னடையாத படைத் தலைவரும், எப்போதும் குறையாத பொன்னும் தானியமும் ஆகிய பெருக்கும், வந்து சேரும் இயல்புடைய பலவகைக் குடிகளும் ஆகிய இங்குக் கூறப்பட்ட இவற்றை எல்லாம் யாவரும் புகழப் பெற்றவர்களே மன்னராவர்.

வணிகர் சிறப்பு

நீள்கடல் கடந்திடுவர் மலையாள மும்போவார்
 நெடிது தூரந் திரிந்து
நினைவுதடு மாறார்கள் சலியார்கள் பொருடேடி
 நீணிலத் தரசு புரியும்

வாளுழவ ரைத்தமது கைவசஞ் செய்வார்கள்
 வருமிடம் வராதவி டமும்
மனதையு மறிந்துதவி யொன்றுநூ றாயிட
 வளர்ப்பர்வரு துலை துலைக்கும்

ஆள்விடுவர் மலிவுகுறை வதுவிசா ரித்திடுவ
 ரளவில் பற்பல சரக்கு
மவைவுறக் கொள்வர்விற் பார்கணக் கதிலணுவு
 மறவிடார் செலவு வரிலோ

ஆளியொத் தேமலையி னளவுங் கொடுத்திடுவ
 ரருள்வைசிய ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. 83

வாள் உழவர் - அரசர்.

பொருள்: அருமை .... தேவனே, அருளுடைய மனத்தவரான வணிகர். வணிகத்திற்குப் பெருங்கடலையும் கடந்து செல்வர். மலை நாடுகளையும் சுற்றுவர். நீண்ட

தொலைவு அலைந்தாலும் எண்ணத்திலே கலக்கம் அடையார். சோர்வு அடையார். பொருளைத் தேடி வைத்துக்கொண்டு பெரிய நாட்டினை ஆளும் வாளேந்திய மன்னர்களைத் தம் கையில் போட்டுக்கொள்வார்கள். வரும் இடத்தையும், வராத இடத்தையும் உள்ளத்தையும் தெரிந்து கொடுத்து, ஒரு பொருள் நூறாக வளரும்படி ஈட்டுவர். வரக்கூடிய நீண்ட தொலைவுக்கும் ஆளைச் செலுத்துவர். மிகுதியையும் குறைவையும் கேட்டறிவர். எல்லையற்ற பல வகையான பொருள்களையும் பொருத்தம் அறிந்து வாங்குவர். விற்பவர்கள் கணக்கினில் இம்மியும் பிசகவிட மாட்டார்கள். செலவு வந்தாலோ சிங்கம் போல அஞ்சாமல் மலையள வாயினும் செலவழிப்பார்கள்.

வேளாளர் சிறப்பு

யசனாதி கருமமுந் தப்பாமல் வேதிய
ரியற்றிநல் லோர் பெறுவதும்
ராச்யபா ரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்
டென்றுநல் லோர் பெறுவதும்

வசனாதி தப்பாது தனதானி யந்தேடி
வசியர்நல் லோர் பெறுவதும்
மற்றுமுள பேரெலா மிடியென் றிடாததிக
வளமைபெற் றேர் பெறுவதும்

திசைதோறு முள்ளபல தேவா லயம்பூசை
செய்யநல் லோர் பெறுவதும்
சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனை வேளாளர்
செய்யுமே ழிப் பெருமைகாண்

அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 84

பொருள்: வெள்ளி மலையில் எப்போதும் பொருந்தி வீற்றிருக்கும் பெரியோனே, அருமை ... தேவனே, மறையவர் வேள்வி முதலிய தொழில்களைத் தவறாமல் செய்து பேரழகு பெறுவதும், முடிமன்னர் எப்போதும் பகைவரை வெற்றிகொண்டு ஆட்சி புரிந்து பேரழகடைவதும், வணிகர் சொல் முதலிய பிறழாமல் பொன்னும் தானியமும் ஈட்டி பேரழகு பெறுவதும், மேலும் உள்ள யாவரும் வறுமை என்று கூறாமல் மிக்க வளம் பெற்று அழகுறுவதும், எல்லாத் திக்கிலும் இருக்கும் பல திருக்கோயில்களும் வழிபாடு பெற்று நல்லழகு பெறுவதும், புகழ் பெற்ற பசிய குவளை மலர் மாலை அணிந்த வேளாளர் புரியும் உழவின் பெருமை யாகும்.

தானாபதி மந்திரி சேனாபதிகளின் இயல்பு

தன்னரசர் வலிமையும் பரராச ரெண்ணமுஞ்
சாலமேல் வரு கருமமுந்
தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினோன்
றானாதி பதியாகு வான்

மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும்
வாழ்குடி படைத்தி றமையும்
மந்திரா லோசனையு மெல்லா மறிந்தவன்
வளமான மதி மந்திரி

துன்னிய படைக்குணங் கரிபரி பரிக்ஷையே
சூழ்பகைவர் புரி சூழ்ச்சியுந்
தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
சூரனே சேனா திபன்

அன்னையிலு நல்லமலை மங்கைபங் காளனே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 85

பொருள்: தாயினும் நல்லருள் புரியும் மலைமகளை இடப் பாகத்தில் கொண்டவனே, தூயவனே, தன் அரசனுடைய ஆற்றலும் மாற்றரசர் நினைவும் நன்றாகப் பின்வரும் அலுவலும் ஆராய்ந்து, சிறந்த அறிவும் சூழ்ச்சியும் பொருந்தியவன் தானைத் தலைவன் எனப்படுவான். மன்னர்களின் கருத்தையும், காலத்தையும் இடத்தையும், வாழ்கின்ற குடிபடைகளின் ஆற்றலையும் ஆராய்ச்சித் திறனையும் தெரிந்தவன் தேர்ச்சிபெற்ற அறிவுடைய அமைச்சனாவான். செறிவான படைகளின் இயல்பும், யானை குதிரைகளின் தேர்ச்சியும், சூழ்ந்துள்ள பகைவர் செய்யும் சூழ்ச்சியும், பின்வாங்காத வெற்றியும், உறுதியான சித்தியும் உடைய வீரனே படைத்தலைவன் ஆவான்.

அரசவைக் கணக்கர்

வருமோலை யுத்தரத் தெழுதிவ ருபொருளினால்
வரவிடுப் போன மனதையும்
மருவிவரு கருமமுந் தேசகா லத்தையும்
வருகரத லாமலக மாய்

விரைவா யறிந்தரச ரெண்ணிலெண் ணினையள
விடவெழுத வாசிக் கவும்
வெற்றிகொண் டேபெரிய புத்தியுடை யோன்புவியின்
மேன்மை ராயச காரனாம்

கருவா யறிந்துதொகை யீராரு நொடியினிற்
கடிதேற் றிடக் குறைக்கக்
கடுகையொரு மலையாக மலையையொரு கடுகுமாக்
காட்டுவோன் கருணீ கனாம்

அருவாகி யுருவாகி யொளியாகி வெளியாகு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 86

கரதலாமலகமாய் - அனைத்து விவரங்களையும் வைத்திருத்தல்.

பொருள்: அருவமாகவும் உருவமாகவும் ஒளியாகவும் வெளியாகவும் உள்ள பெரியோனே, அருமை ... தேவனே, வருகின்ற ஓலையின் புறத்திலே எழுதிவிட்ட பொருளைக் கொண்டு, ஓலையை விட்டவன் உள்ளத்தையும், அவன் விரும்பிய தொழிலையும், இடத்தையும், காலத்தையும் உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனியாக நொடியில் உணர்ந்து, மன்னருடைய கருத்தில் உள்ள கருத்தை மதிப்பிடவும் எழுதவும் வாசிக்கவும் தேர்ச்சி பெற்றுப் பேரறிவு உடையோன் உலகிலே பெருமை பெற்ற அரசாங்க எழுத்தாளன் ஆவான். ஒரு தொகையை மனத்தில் உணர்ந்து பன்னிரு விநாடியில் விரைவாகக் கூட்டவும் குறைக்கவும் கடுகை மலை போலவும், மலையைக் கடுகு போலவும் ஆக்கிக் காண்பிக்க வல்லவன் அரசாங்கக் கணக்கன் ஆவான்.

கோபத்தின் கொடுமை

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்குங்
கோபமே வொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்

கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுற வறுக்குங்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்

கோபமே யீனமாங் கோபமே யெவரையும்
கூடாம லொருவ னாக்குங்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற் றள்ளுமாம்

ஆபத் தெல்லாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 87

மறலி – எமன்.

பொருள்: இடையூறுகளை எல்லாம் நீக்கி என்னை ஏற்றுக்கொண்டருளும் பெரியோனே, அருமை ... தேவனே, சினமே எல்லாப் பாவங்களுக்கும் அன்னையும் தந்தையும் ஆகும். சினமே குடியைக் கெடுக்கும். சினமே எதனையும் அடைய விடாது. சினமே துயரம் தரும். சினமே கெட்டது. சினமே புகழைக் கெடுப்பது. சினமே உறவைத் தவிர்க்கும். சினமே பழியினை உண்டாக்கும். சினமே பகையாளி. சினமே அருளைக் கெடுக்கும். சினமே இழிவாகும். சினமே ஒருவரையும் கூட சேர்க்காமல் தனி ஆளாக்கும். சினமே காலன் முன் இழுத்துச் சென்று கொடிய நரகக் குழியிலே வீழ்த்தும்.

“ஆறுவது சினம்” என்றார் ஔவையார். “தீராக் கோபம் போராய் முடியும்” என்றார் நறுந்தொகையார். ஆதலால் சினத்தைத் தவிர்த்தல் வேண்டும்.

பல் துறை

தான்புரி தவத்தையுங் கொடையையும் புகழுவோர்
தங்களுக் கவை தழைவுறாது
சற்றுமறி வில்லாம லந்தணரை நிந்தனைசெய்
தயவிலோ ராயுள் பெருகார்

மேன்படு நறுங்கலவை மாலைதயிர் பால்புலால்
வீடுநற் செந்நெ லிவைகள்
வேறொருவர் தந்திடினு மனுமொழி யறிந்தபேர்
விலைகொடுத் தே கொள்ளுவார்

தேன்கனி கிழங்குவிற கிலையிவை யனைத்தையுந்
தீண்டரிய நீச ரெனினுஞ்
சீர்பெற வளிப்பரே லிகழாது கைக்கொள்வர்
சீலமுடை யோரென்ப ரால்

ஆன்கொடி யுயர்த்தவுமை நேசனே யீசனே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 88

பொருள்: ஏற்றுக்கொடியை உயர்த்திய உமையன்பனே, செல்வத்தை அளிப்பவனே, பெரியோனே, அருமை .... தேவனே, தாங்கள் செய்த தவத்தினையும் ஈகையையும் புகழ்ந்து கூறிக்கொள்வோருக்கு அவை கிடையாமல் போய்விடும். சிறிதும் அறியாமல் அந்தணரைப் பழிக்கும் இரக்கமிலோர்க்கு ஆயுள் குறையும். உயர்ந்த மணம் மிக்க கலவைச் சந்தனம், மாலை, தயிர், பால், ஊண், வீடு, நல்ல செந்நெல் ஆகிய இவற்றை மற்றொருவர் கொடுத்தாலும் மனு கூறிய முறையை அறிந்தவர்கள் விலை கொடுத்துத்தான் வாங்குவார்கள். தேனையும், கனியையும், கிழங்கையும், விறகையும், இலையையும் இவைபோன்ற யாவற்றையும் தீண்டத்தகாத இழிந்தோரானாலும் சிறப்புறக் கொடுத்தாரானால் ஒழுக்கம் உடையோர் பழிக்காமல் ஏற்றுக் கொள்வர்.

தத்துவத் திரயம்

பூதமோ ரைந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்துமிந் திரிய மைந்தும்
பொருவில்கன் மேந்திரிய மைந்துன மாதியாம்
புகலரிய கரண நான்கே

ஓதினோ ரிவையாத்ம தத்துவ மெனச்சொல்வ
ருயர்கால நியதி கலையோ
டோங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயையென்
றுரைசெய்யு மோ ரேழுமே

தீதில்வித் யாதத்வ மென்றிடுவ ரிவையலாற்
றிகழ்சுத்த வித்தை யீசன்
சீர்கொள்சா தாக்கியஞ் சத்திசிவ மைந்துமே
சிவதத்வ மென் றறைகுவார்

ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள்செய்
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 89

பொருள்: முற்காலத்தில் கல்லால மரத்தின் நிழலில் சனகர் முதலானோருக்கு அருள் புரிந்த பெரியோனே, அருமை ... தேவனே, ஓர் ஐம் பூதங்களும், அவற்றுடன் ஐம்புலன்களும் ஞான இந்திரியங்கள் ஐந்தும், உவமை யில்லாத கன்ம இந்திரியங்கள் ஐந்தும், மனம் முதலிய சொல்லற்கரிய கரணங்கள் நான்கும் ஆகிய இவற்றை ஆன்ம தத்துவம் என்று கற்றறிந்தோர் கூறுவர். உயர்வாகிய காலம், நியதி, கலைகளோடு கூறப்படும் ஏழினையும் குற்றமற்ற வித்யாதத்துவம் எனக்கூறுவர். இவையல்லாமல் விளங்கும்

சுத்த வித்தை. ஈசன், சிறப்புடைய சாதாக்கியம், சத்தி, சிவம் ஆகிய ஐந்தினையும் சிவதத்துவம் என்று கூறுவர்.

பூதம் ஐந்து: மண், நீர், தீ, வளி, வான். புலன் ஐந்து: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். ஞான இந்திரியம் ஐந்து: மெய், வாய், கண், மூக்கு, செவி. கன்ம இந்திரியம் ஐந்து: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம். கரணம் நான்கு: மனம், புத்தி, சித்தம், அகங்காரம். சனகாதியர்: சனகர், சனந்தகர், சனத்குமாரர், சஹ்யஜாதர். ஞான இந்திரியம்: அறிவுப்பொறி. கன்ம இந்திரியம்: தொழிற் பொறி.

மன்மத பாணமும் அவற்றின் குணங்களும்

வனசஞ் செழுஞ்சூத முடனசோ கந்தவள
மலர்நீல மிவை யைந்துமே
மாரவேள் கணைகளா மிவைசெயுங் குணமுளரி
மனதிலா சையை யெழுப்பும்

வினவிலொண் சூதமலர் மெய்ப்பசலை யுண்டாக்கு
மிகவசோ கந் துயர்செயும்
வீழ்த்திடுங் குளிர்முல்லை நீலமுயிர் போக்கிவிடு
மேவுமிசை செயு மவத்தை

நினைவிலது வேநோக்கம் வேறொன்றி லாசையற
நெட்டுயிர்ப் பொடு பிதற்ற
னெஞ்சத் திடுக்கிடுத லனம்பெறுத் திடல்காய்ச்ச
னோர்தன் மௌனம் புரிகுதல்

அனையவுயி ருண்டில்லை யென்னவீ ரைந்துமா
மத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 90

பொருள்: தலைவனே, அருமை .. தேவனே, தாமரை, வளம் மிகுந்த மா, அசோகு, முல்லை, மலர்ந்த நீலம் ஆகிய இவை ஐந்து மலர்களும் காமன் அம்புகள் ஆகும். இவை உயிர்களுக்கு ஊட்டும் குணம். தாமரை மனத்தில் காமத்தை உண்டாக்கும். வினவுமிடத்துச் சூதமலர் உடலிலே பசலை நிறத்தைக் கொடுக்கும். அசோக மலர் மிகவும் துன்பத்தைக் கொடுக்கும். குளிர்ந்த முல்லை மலர் படுக்கையில் விழச் செய்யும். நீல மலர் உயிரை ஒழிக்கும். பொருந்தும் இவை உண்டாக்கும் நிலைகளாவன எண்ணத்தில் அதுவே கருதுதல் மற்றொன்றில் ஆசை நீங்கல். பெருமூச்சுடன் பிதற்றுதல், உள்ளம் திடுக்கிடல். உணவில் வெறுப்பு, உடல் வெதும்புதல், மெலிதல், பேசாதிருத்தல், ஆசையுற்ற உயிர் உண்டோ இல்லையோ என்னும் நிலையடைதல் ஆகிய இவை பத்தும் ஆகும்.

மன்மதனுபகரணங்கள்

வெஞ்சிலை செழுங்கழையி னாரிகரு வண்டின
மேல்விடுங் கண்க ளலராம்
வீசிடுந் தென்றறேர் பைங்கிள்ளை யேபரிகள்
வேழங் கெடாத விருளாம்

வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாணெடி
வண்மைபெறு கடன் முரசமாம்
மகரம் பதாகைவரு கோகிலங் காகளம்
மதனே பெரும் போர்க்களம்

சஞ்சரிக விசைபாடல் குமுதநே யன்கவிகை
சாரதி யேமனைவி யாந்
தறுகண்மட மாதரிள முலைமகுட மாமல்கு
தவறா திருக்கு மிடமாம்

அஞ்சுகணை மாரவேட் கென்பரெளி யோர்க்கெலா
மமுதமே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 91

பொருள்: எளியவர்க்களுக்கெல்லாம் அமுதம் போன்றவனே. அருமை தேவனே, செழுமையான கரும்பு வில்லாம் பெண்கள் மேல் மன்மதன் விடும் கணைகள் அவர்களுக்கு அலரை உண்டாக்கும். வீசிடும் தென்றல் அவனுக்குத் தேர், கிளி, குதிரைகள் ஆகும். யானை இருளாகும். இவன் போருக்குரிய படைஞர் மங்கையர் ஆவர். வாள், தாழை மடல், நெடிய வண்மை மிக்க கடல் முரசு ஆகும். காமனின்கொடி மகரம். கிளி, குயில், குரங்கு எக்காளம். வண்டுகளின் இசைப்பாடல். இரதி இவன் மனைவியாம். அஞ்சாமை கொண்ட மாதர் இடமுலை குடமாம். அங்குல் தவறாது இருக்குமிடமாம். இத்தகு மாரனின் அம்பு தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்னும் ஐந்து மலர்கள்.

பகைகொளத் தகாதவர்

மன்னவ ரமச்சர்துர்ச் சனர்கோளர் தூதரொடு
மாறாத மர்ம முடையோர்
வலுவர்கரு ணீகர்மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையர் மந்திர வாதியர்

சொன்னமுடை யோர்புலைய ருபதேச மதுசெய்வோர்
சூழ்வயித் தியர் கவிதைகள்
சொற்றிடும் புலவரிவர் பதினைந்து பேரோடுஞ்
சொற்பனந் தனி லாகிலும்

நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்களிந்
நானிலத் தென்பர் கண்டாய்
நாரியோர் பாகனே வேதாக மம்பரவு
நம்பனே யன்பர் நிதியே

அன்னமூர் பிரமனுங் கண்ணனுங் காணாத
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 92

பொருள்: பார்வதியை தன் உடலில் ஒரு பாகமாகக் கொண்டவனே. வேத, ஆகமங்களைப் போற்றும் புரவலனே. உன் அன்பர்களுக்கு எல்லாம் மாநிதியமாய்த் திகழ்பவனே. அன்னம், ஊர், பிரமனும், கண்ணனும் காணாத தலைவனே. அருமை .... தேவனே. மன்னவர், அமைச்சர், தீயவர், தூதர், இரகசியப்பணியில் இருப்போர், வலிமை பொருந்தியவர். அரசாங்க கணக்கர். மிக்க பாகம் செய்து அன்னம் வழங்கக் கூடிய சமையற்காரர். மந்திரம் செய்யக்கூடியவர்கள். தங்கத்தை உடையவர்கள், கீழ் மக்கள் அறிவுரைகளை கூறத்தக்க உயர்ந்த நிலையில் இருப்போர், மருத்துவர், கவிதைகள் இயற்றிடும் புலவர்கள் ஆகிய இவர்கள் பதினைந்து பேரோடும் நன்னெறி அறிந்தவர்கள் கனவில் கூட பகை செய்திட மாட்டார்கள். இவ்வுலகில் இதுவே உண்மை.

இதாகிதஞ்செய்து பயன்கொள்வன

சுவைசேர் கரும்பைவெண் பாலைப் பருத்தியைச்
சொல்லுநன் னெல்லை யெள்ளைத்
தூயதெங் கின்கனியை யெண்ணாத துட்டரைத்
தொண்டரைத் தொழு தொழும்பை

நவைதீரு மாறுகண் டித்தே பயன்கொள்வார்
நற்றமிழ்க் கவிவா ணரை
நலமிக்க செழுமலரை யோவிய மெனத்தக்க
நயமுள்ள நாரியர் தமைப்

புவிமீதி லுபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீ ரரைத் தூயரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்ய மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர் கண்டார்

அவமதி தவிர்த்தென்னை யாட்கொண்ட வள்ளலே
யண்ணலே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 93

பொருள்: என்னை அவமதிக்காமல் ஆட்கொண்ட வள்ளல் பெருமானே. தலைவனே, அருமை ... தேவனே. சுவைமிக்க இனிய கரும்பினை, நல்ல வெண்மையானப் பாலைத்தருகின்ற பருத்தியை, சொல்லக்கூடிய நல்ல நெல்லை, எள்ளை, தூய்மையான தெங்கின் கனியை எண்ணாத தீயரை, தொண்டரை, அடிமையை குற்றம் தீரும்படி கண்டித்தே பயன் கொள்வர். நற்றமிழ்க் கவி வாணரை, நலம் மிகுந்த செழுமையான மலரை, ஓவியம் என்று போற்றத்தகுந்த அழகிய மங்கையை, இவ்வுலகில் உதவும் மனம் கொண்டவரை, சிறுவரை, நாட்டுக்காகப் போர் செய்யும் வீரர்களை, தூய்மையான உள்ளம் கொண்டவர்களை ஆறுதலும், பரிவும் கொண்டு மிகுந்த பயனை புகழ் பெறக் கொள்வர்.

தருமம்

பெறுமல்பெறு வித்தலொடு காளோலை நாடொறும்
பிள்ளைக ளருந்திடும் பால்
பேசரிய சத்திர மடமா வுரிஞ்சுகல்
பெண்போக நாவிதன் வண்ணான்

மறைமொழிகண்ணாடி தண்ணீர் தலைக்கெண் ணெய்பசு
வாயினிறை பிண மடக்கல்
வாவியிறு முயர்மீட்ட றிண்பொரு ளடைக்காய்
வளிங்கல்சுண் ணாம்பு தவுதல்

சிறையுறு பவர்க்கமுது வெற்றிலங் காத்தல்பொழில்
செய்தன்முன் னூவின் மணந்
திகழ்விலங் கூண்பிச்சை யறுசமய ருக்குண்டி
தேவரா லயமவு ஷதம்

அறைதல்நற் போர்க்கன்ன நாலெட் டறங்களுமு
னன்னைசெய லருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 94

பொருள்: மகவு பெறுதற்கு வீடு விடுதல், அதோடல்லாமல் மகவு பெறுவதற்கு வேண்டியவற்றை உதவுதல், காதணி அளித்தல், நாள்தோறும் குழந்தைகள் பருகும் பால் அளித்தல். சொல்லற்கரிய சத்திரம் அமைத்தல், மடம் கட்டி வைத்தல், பசுக்களின் தினவு நீக்கும் கல் நடுதல். பெண்களுக்கு இன்பம் அளித்தல், நாவிதனுக்கு உதவுதல், வண்ணானுக்கு உதவுதல், மறையில் கூறுமாறு கண்ணாடி ஈதல், நீர் வேட்கையைத் தணித்தல், தலைக்கு எண்ணெய் கொடுத்தல், பசுக்களுக்குத் தீனி, பிணத்தை அடக்கம் செய்தல், உயிர் மீட்டல், தின்பண்டம் வழங்கல், வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு கொடுத்து உதவுவதல், சிறையில் அகப்பட்டவர்க்கு உணவு கொடுத்தல், பிறர் துயரைப் போக்குதல், சோலைகள் அமைத்தல், பழைய நூல் முறைப்படி திருமணம் செய்து வைத்தல், விளங்கும் விலங்குகளுக்கு உணவு அளித்தல். இரப்போர்க்கு ஈதல் அகச்சமயத்தாருக்கும் உணவு அளித்தல், திருக்கோயில் கட்டுதல், மருந்து கொடுத்தல், கல்வி பயில்வோருக்கு உணவு வழங்குதல் ஆகிய முப்பத்திரண்டு அறங்களும் முற்காலத்தில் உமையம்மையார் காஞ்சியில் செய்தவை ஆகும்.

இல்லறம்

தந்தைதாய் நற்குருவை யிட்டதெய் வங்களைச்
சன்மார்க்க முள மனைவியைத்
தவறாத சுற்றத்தை யேவாத மக்களைத்
தனைநம்பி வருவோர் களைச்

சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்
தென்புலத் தோர் வறிஞரைத்
தீதிலா வதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர் தமைச்

சந்ததஞ் செய்கடனை யென்றுமிவை பிழையாது
தான்புரிந் திட வில்லறஞ்
சாறுநல முடையராந் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியா யிடார்

அந்தரி யுயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவட்
கன்பனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 95

பொருள்: உயிர்களுக்கு எல்லாம் தாயினும் மேலாகக் கருணை புரியும். பார்வதி மணாளனே, அருமை .... தேவனே, தாய் தந்தையரை, தன் கல்விக்கு உதவிய குருவை தனக்குப் பிடித்த கடவுளர்களை, நல்லொழுக்கம் உள்ள மனைவியை, தவறாத உறவினர்களை, ஏவாத மக்களை, தன்னை நம்பி வருவோர்களை உள்ளம் மகிழச்செய்து பணிவிடை புரிவோர்களை, பிதிர்களை, எளியவரை, குற்றமற்ற விருந்தினர்களை, பரிவுமிக்க துணைவரை, அந்தணர்தமை எப்போதும் அவர்கள் செய்கின்ற செயலை என்றும் அவை தவறாது தான் புரிந்திட்டால் இல்லறம் மிகுந்த நலமுடையவராவர். துறவு நிலையிலே உள்ளோர்கூட இவர்களுடன் சமமாக இருக்கமாட்டார்.

புராணம்

தலைமைசேர் பௌடிக மிலிங்கமார்க் கண்டம்
சாரும் வாமன மச்சமே
சைவம் பெருங் கூர்மம் வருவரா கங்காந்த மெழில்
சரிதமே பிரமாண்ட மும்

நிலைமைசே ரிப்பத்து முயர்சிவ புராணமா
நெடியமால் கதை வைணவம்
நீதிசேர் காருட நாரதம் பாகவத
நீடிய புராணம் நான்காம்

கலைவளர்சொல் பதுமமொடு பிரமவகை வர்த்தமே
கமலா லயன் காதையாம்
கதிரவன் காதையே சூரிய புராணமாங்
கானல் காதை யாகினேயம்

அலைகொண்ட நதியும்வெண் மதியுமறு கும்புனையு
மத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 96

பொருள்: அலைகொண்ட கங்கையையும், வெண்மையான பிறைச்சந்திரனையும், புலியின் தோலை ஆடையாகவும் புனையும் சிவபெருமானே, அருமை ..... தேவனே, சிவனது மகிமையைக் கூறும் புராணமான சிவபுராணத்தின் தலைமைசேர் பௌடிகம், இலிங்கம், மார்க்கண்டேயம், வாமனம், மச்சியம், சைவம், பெருங்கூர்மம், வரும் வராகம், காந்தம், பிரமாண்டம் இவை பத்தும் உயர் சிவபுராணம் ஆகும். நெடிய திருமாலின் கதையே வைணவம் ஆகும். நீதி கூறும் கருட புராணம். நாரதர் புராணம், பாகவதம் ஆகிய நான்கும் நீண்ட புராணங்களாம். கலை வளர் சொல் தாமரையொடு, பிரமம், கைவர்த்தமே கமலாலயன் கதையாம். கதிரவன் கதையே சூரிய புராணமாம், நெருப்பின் கதையே அக்னி புராணம் ஆகும்.

புகழ்ச்சி

பருகாத வமுதொருவர் பண்ணாத பூஷணம்
　　பாரின்மறை யாத நிதியம்
பரிதிகண் டலராத கமலம் நிலவுகண் டலராத
　　பண்புடைய பங்கே ருகம்
கருகாத புயல்கலைக ளருகாத திங்கள்வெங்
　　கானி லுறையாத சீயங்
கருதரிய விக்குண மனைத்துமுண் டானபேர்
　　காசினியி லருமை யாகும்
தெரியவுரை செய்யின்மொழி கீர்த்திவழி கல்வியொடு
　　சீதரிய மீகை வதனந்
திடமான வீரமிவை யென்றறிகு வார்களிச்
　　செகமெ லாங்கொண் டாடவே
அருள்கற்ப தருவென்ன வோங்கிடுந் தானதுரை
　　யாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளீ சுர தேவனே. 97

பொருள்: கற்பக மரம் போன்று அருள்செய்து வழங்குகின்ற எமது அருமை மதவேளே, தேவனே, பருகாத அமுது, ஒருவர் அணியாத அணிகலன், உலகில் என்றும் மறையாத பெருஞ்செல்வம், கதிரவன் கண்டு அலராத தாமரை, நிலவு கண்டு அலராத தாமரை, கருகாத புயல், கலைகள் அருகாத திங்கள், கடும் கானலில் உறையாத எருக்கம் பால் ஆகிய இக்குணம் அனைத்தும் உண்டான பேர்கள் உலகில் அருமையாகும். தெளிவான உரை செய்யும் மொழி புகழ் வரும் கல்வியோடு, நல் இதயம், கொடைத் தன்மை, அழகிய முகம், திடமான வீரம் கொண்டவர்களை இவ்வுலகம் கொண்டாடும்.

திருமாலவதாரம்

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தது மச்சமாஞ்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டி மாநில மெடுத்தே
போம் கனகன் யுயிருண்ட தேனமாம்
பொல்லாத கனக னுயிரைப்
போக்கியது நரசிங்க மூலகளந் தோங்கியது
புனிதவா மன மூர்த்தியாம்
ஏமுறு மிராவணனை வென்றவ னிராகவ
னிரவிகுலம் வேர றுத்தோ
னேர்பரசு ராமன்வரு கண்ணனொடு பலராம
னிப்புவியு பயர்ந்தவிர்த் தோர்
ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்து
மருவடிவ யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 98

பொருள்: அருமை மதவேள் அனுதினமும் மனதில் நினைதரு சதுரகிரிவளர் அறப்பளீசுர தேவனே, சோமுகாசுரனை முன்னர் வதைத்து வானோர் துயரம் போக்கியது மச்ச அவதாரத்தில். பாற்கடலைக் கடைந்து வானோர்க்கு அமுதம் அளித்தது கூர்ம அவதாரத்தில். வராக அவதாரத்தில் பாய் போல் பூமியைச் சுருட்டியது. பொல்லாத இரணியாக்கதன் உயிரை எடுக்கத் தோன்றியது நரசிம்ம அவதாரம். மூன்றடி மண் மாபலியிடம் கேட்டது வாமன அவதாரத்தில். இறுமாப்புடன் திகழ்ந்த இராவணனை வென்றவன் இராமன். சூரிய குலத்தை அழித்தவன் ஏர் போன்ற பரசுராமன். கண்ணனொடு, பலராமன் போன்றோர் இவ்வுலகில் பயம் தவிர்த்தோர் ஆவார். இனிய கல்கி அவதாரம் வருவது இனிமேல். இவையனைத்தும் அரிய பத்து அவதாரங்கள் ஆகும்.

சிவமூர்த்தி

பிறைசூடி யுமைநேசன் விடையூர்தி நடனமிடும்
பெரியனுயிர் வதுவை வடிலன்
பிச்சாட னன்காம தகனன்மற லியைவென்ற
பெம்மான் புரந்த கித்தோன்

மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வெளவினோன் வீரே சுரன்
மருவுநக சிங்கத்தை வென்றவர னுமைபாகன்
வனசரன் கங்கா ளனே

விறன்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்கசக் கரமுதவி னோன்
விநாயகற் கருள்செய்தோன் குகனுமை யுடன்கூடி
மிளிரேக பாதன் சுகன்

அறிவரிய தக்ஷிணா மூர்த்தியொ டிலிங்கமா
பையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 99

பொருள்: தலைவனே, அருமை ...தேவனே, பிறையினைச் சூடி விடை ஏறி நடமிடும் உமை நேசன், உமாசக மூர்த்தி, பிச்சாடன மூர்த்தி, காமதகன மூர்த்தி, மயக்கத்தை வென்ற பெரியோனான திரிபுரசம்ஹார மூர்த்தி, பிரம்மாவின் கழுத்தினைப் பிடித்து நெறித்த ஜலந்தரனை அழித்த ஜலந்தராகி, நரசிங்கத்தை வென்ற உமைபாகனான சரபமூர்த்தி, கங்காளமூர்த்தி, சுகாசனமூர்த்தி, சக்கரப் பிரதான மூர்த்தி, ஏகபாத மூர்த்தி, தட்சிணாமூர்த்தி, லிங்கமூர்த்தி என சிவனின் வடிவங்களைப் பல்வேறு சிவ மூர்த்திகளாகக் குறிப்பிட்டு வழிபடுவர்.

கவி வணக்கம்

மலரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
மருக்கொழுந் துயர் கூவிளம்
மற்றுமுள வாசமலர் பத்திரஞ் சிலர்சூட
மணிமுடி தனிற் பொறுத்தே

சிலரேருக் கொடுவனத் துட்பூளை பச்சறுகு
செம்முள்ளி மலர் சூடவே
சித்தம்வைத் திடவுமங் கீரரித் திடுமகா
தேவதே வா தெரிந்தே

கலைவல ருரைக்குநன் கவியொடம் பலவாண
கவிராய னாகு மென்புன்
கவியையுஞ் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
கடனாகு மடனாக மும்

அலைபெருகு கங்கையுஞ் செழுமதிய மும்புனையு
மமலனே யருமை மதவே
ஏனுதினமு மனதினினை தருசதுர சிரிவள
ரறப்பளீ சுர தேவனே. 100

பொருள்: கொல்லும் தன்மையுடைய நாகப் பாம்பினையும், அலைகள் பெருகும் கங்கை நதியையும், செழுமையான சந்திரனையும் சூடிய தலைவனே, அருமை ....தேவனே. மலரிதழ் சிறந்த பைங்குவளை, மென்மையான முல்லை, மல்லிகை, மருக்கொழுந்து, உயர்ந்த கூவிளம் மற்றும் உள்ள மணம் மிக்க மலர் அழகுடன் சிலர் சூட மணிமுடியினில், சிலர் அருக்கு, காட்டுப்பூளை, பச்சறுகு, செம்முள்ளி மலர் சூடவே மனம் வைத்திடவும் அவற்றை அங்கீகரித்திடும் மகாதேவ தேவா, தெரிந்தே கலைவளர்உரைக்கு நல்லகவியோடு அம்பலவாண கவிராயன் ஆகும் என் அற்பமான கவியையும் சூடியே மனம் மகிழ்ந்திடுவதுஉன்னுடைய கடனாகும்.

இச்சதகத்தில் உள்ள பாடல்கள் அனைத்தும் பன்னிரு சீர் ஆசிரிய விருத்தப் பாக்களால் ஆனவை.

ஜஇ

சங்க இலக்கியத்தில்
கொல்லி

சங்கத் தமிழ் நூல்களான அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து போன்றவற்றில் கொல்லி குறித்துப் பேசப்பெற்றுள்ளது. வல்வில் ஓரி பற்றியும், சேரனது பெருமை பற்றியும், தலைவியின் அழகு குறித்தும், கொல்லிப்பாவை பற்றியும், கொல்லியிலிருந்த சங்க காலப் புலவர் பற்றியும் கிட்டத்தட்ட இருபதுக்கும் மேற்பட்ட பாடல்கள் காணக்கிடைக்கின்றன.

அகநானூற்றில், மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் பாடிய பாடல்,

வெல்போர் வானவன் கொல்லி மீமிசை
நுணங்குஅமை புரையும் வணங்குஇறைப் பணைத்தோள்
வரிஅணி அல்குல் வாய்எயிற் றோள்வயின்
பிரியாய் ஆயின் நன்னுமன் தில்ல (33:14-17)

போர்த்திறன் மிக்க சேரனது கொல்லி மலையில், விளைந்த மூங்கில் போன்ற அழகிய தோளையும் தேமலுடைய இடைப்பகுதியையும் வெண்மையான பற்களையும் உடைய தலைவியை அன்றே பிரியாம லிருந்தால் நன்றாய் இருந்திருக்கும் என்பது பாடலின் பொருள். இதில் வீரமிக்க சேரனது கொல்லி மலையின் மூங்கில் தலைவியின் தோளிற்கு உவமையாகக் கூறப்பெற்றுள்ளது.

பரணர் பாடிய பாடலில்,

ஆகம் அடைதந் தோளே வென்வேல்
களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறுநீர் அடுக்கத்து வியல்அகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின். (62:12-15)

வேற்படையும் யானைப் படையும் உடைய சேரனுக்கு சொந்தமான கொல்லி மலையில் தீட்டப் பெற்றுள்ள தெய்வத் தன்மை வாய்ந்த பெண் தெய்வம் போன்ற முருந்தன்ன பற்களும், பவள வாயும், அரும்பிய மார்பும், மூங்கில் போன்ற தோளும், குவளையன்ன கண்களும் உடைய தலைவி என்பதாக உள்ளது.

பரணர் பாடலில்,

.... ஓரி
பல்பழப் பலவின் பயம்கெழு கொல்லிக்
கார்மலர் கடுப்ப நாறும்
ஏர் நுண், ஓதி மாஅ யோனே. (208:20-23)

நம் தலைவி மாந்தளிர் நிறத்தாள். அவளது அழகிய மென்கூந்தல் பழங்கள் பல தொங்கும் பலா மரங்களை உடையதும் ஓரி என்பவனுக்கு உரிமை உடையதுமான கொல்லிமலையில் கார்காலத்தில் மலரும் மலரைப் போன்ற மணத்தை உடையது என்பதாக கொல்லி குறிக்கப்பெற்றுள்ளது.

கல்லாடனார் பாடலில்,

முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி
செல்லா நல்இசை நிறுத்த வல்வில்
ஓரிக்கொன்று சேரலர்க்கு ஈந்த
செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவை அன்னநின் நலனே. (209:12-17)

முள்ளூர் மன்னனும், சிவந்த வேலேந்தியவனும், வீரவளை அணிந்தவனுமாகிய மலையமான் திருமுடிக்காரி, வள்ளண்மை பூண்டு மாயாப்புகழ் கொண்டவனும், வில் வல்லோனுமாகிய ஓரியைக் கொன்று, சேர மன்னனுக்கு மீட்டுக் கொடுத்தது கொல்லிமலை. வேர்ப்பலா மரங்கள் மலை. அங்குத்

தெய்வச் சிற்பி செய்து நிறுவிய பேரழகுப் பாவையைப் பலரும் புகழ்வர். அதனை ஒத்த உன் அழகை, நம் தலைவர் தம் கடமையை மறந்து நினைக்காமல் இருக்க முடியாது என்பதாக உள்ளது.

தாயங்கண்ணனார் பாடலில்,

.... பகல் செலப்
பல்கதிர் வாங்கிய படுசுடர் அமையத்துப்
பெருமரம் கொன்ற கால்புகு வியன்புனத்து
எரிமருள் கதிர திருமணி இமைக்கும்
வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை (213:11-15)

பகல் பொழுது முடிவடைய சூரியன் மறைந்த ஒளி மங்கிய அந்தி நேரத்தில் கொல்லி மலையில் மரங்களை வெட்டித் தள்ளியதால் காற்று நன்கு வீசும் வெளியாகக் கிடக்கும். அங்கு அழகிய இரத்தினங்கள் தீப்போன்ற ஒளியை வீசும். அம்மலை சேர மன்னருக்கு உரியது.

ஒளவையார் பாடியதில்,

...................வென்வேல்
மறம்மிகு தானை பசும்பூண் பொறையன்
கார் புகன்று எடுத்த சூர்புகழ் நனந்தலை
மாஇருங் கொல்லி உச்சித் தாஅய்
ததைந்துசெல் அருவியின் அலர்எழப் பிரிந்தோர்.
(303: 3-7)

வெற்றி தரும் வேலையும் வீரம் மிக்க சேனையையு முடைய போரில்பட்ட புண்களையே அணிகலனாகக் கொண்ட சேரனது, மேகம் விரும்பி மழைபெய்வதும் தெய்வம் விரும்பி உறைவதுமான பெரிய அகன்ற கரிய கொல்லிமலை தெய்வத்தன்மை உடையது. அதன் உச்சியில் பரவி, நெருங்கி விழும் அருவியின் ஓசைபோல யான் மறைத்திருந்த களவு அலராகி ஊரெங்கும் பரவும்படி அவர் பிரிந்து சென்றுவிட்டார்.

மதுரைக் கணக்காயனார் பாடலில்,

ஒன்னார் தேஎம் பாழ்பட நூறும்
துன்னருந் துப்பின் வென்வேற் பொறையன்
அகல்இருங் கானத்துக் கொல்லிபோல. (338:12-14)

பகைவரின் நாடுகள் பாழாகும்படி அழிக்கும், பகைவரால் நெருங்குவதற்கு அரிய வலிமை பொருந்திய வெற்றிவேலை உடைய சேரனது அகன்ற கரிய காட்டில் உள்ள அவனது கொல்லி மலையைப் போல, என்பதாக உள்ளது.

புறநானூற்றில் சேரமான் யானைக்கண் சேய் மாஞ்தரஞ் சேரல் இரும்பொறையை, குறுங்கோழியூர் கிழார் பாடியது.

வேந்துதந்த பணி திறையால்
சேர்ந்தவர் கடும்பார்த்தும்
ஓங்கு கொல்லியோர் அடுபொருந. (22:26-28)

பகையரசன் பணிந்துதந்த கப்பத்தால் தம்மை அடைந்தவர் சுற்றத்தை வாழச்செய்யும் கொல்லி மலையினரின் வலிய வீரனே, என்று கொல்லி சிறப்பாகப் பேசப்பெறுகின்றது.

வல்வில் ஓரியை வன்பரணர் பாடிய பாடல்,

ஓங்கிருங் கொல்லிப் பொருநன்
ஓம்பா ஈகை விறல்வெய் யோனே. (152:30-31)

குகைகளை உடைய உச்சியைக் கொண்ட உயர்ந்த கொல்லிமலைத் தலைவனான வல்வில் ஓரி கொடையும் பேராற்றலும் விரும்புவன்.

குமணனை பெருஞ்சித்திரனார் பாடியது,

.... பிறங்கு மிசைக்
கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்
காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும் (158:4-7)

விளங்கும் உச்சியையுடைய கொல்லி மலையை ஆண்ட வலிய வில்லையுடைய ஓரியும், காரி என்னும் பெயரையுடைய குதிரையைச் செலுத்திப் பெரிய போர் வென்ற மழை போலும் கொடையும் மிக்க பேராற்றலும் வாய்ந்த மலையமான் திருமுடிக் காரியும் என்பதாக வந்து கொல்லி பேசப்பெறுகின்றது.

குறுந்தொகையில் பரணர் பாடல்,

பெரும்பூண் பொறையன் பேஎம் முதிர்கொல்லிக்
கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய
நல்லியல் பாவை அன்ன இம்
மெல்லியல் குறுமகள் .... (89:4-7)

பெரிய அணிகலனைப் பூண்ட சேர மன்னனது, அச்சம் மிக்க கொல்லி மலையில், கரிய கண்களை உடைய தெய்வமாகிய அம்மலையின் மேற்குப் பக்கத்தில் சிலையாக வடித்து வைத்த நல்ல அழகிய கொல்லிப் பாவை போன்ற இம் மென்மை மிக்க இயல்புடைய இளையவளாம் எம் தலைவி என்கிறது.

கபிலர் பாடலில்,

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருஇலைக் குளவியொடு பசுமரங்கட்கும்
காந்தல் வேலிச் சிறுகுடி பசிப்பின்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத்து உண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற்கு அரிய பணைப்பெருந் தோளே. (100: 1-7)

அருவி பாயும் நிலப்பரப்பில் மலை நெல்லை விதைத்து, பருத்த இலைகளை உடைய காட்டு மல்லிகையையும், பசிய கற்றாழைச் செடியையும் களையெடுப்பர். இவ்வாறு பயிர் செய்யும் செங்காந்தளை உயிர்வேலியாக உடைய சிற்றூரில் உள்ள மலைவாழ் மக்கள்

பசி மிகுமானால், வலிமை மிக்க யானைகளின் தந்தங்களை விற்று உணவு உண்பர். அத்தகைய மக்கள் வாழும் வல்வில் ஓரி என்னும் வள்ளலது கொல்லி மலையிலுள்ள, மலையைக் குடைந்து செய்த கொல்லிப் பாவைபோல, இளமை தவழும் அழகு பொருந்தியவள் என் தலைவி அவளது பருத்த பெரிய தோள்கள் தழுவிக் கூடுதற்கு அரியனவாகும் என்று கொல்லியின் சிறப்பு கூறப்பெறுகின்றது.

குறுந்தொகையின் 34வது பாடலைப் பாடியவர் கொல்லிக் கண்ணனார் என்ற புலவர் ஆவார். தலைவன் தலைவியை வரைவு வேண்டி வந்த நிலையில் அவனது வரைவு மலிவினைத் தோழி ஊர்மேலிட்டுத் தலைவிக்கு உணர்த்தும் நுட்பம் இவர் பாடலில் அழகுற அமைந்து உள்ளது. "தலைவனொடு சேர்தற்கியலாது பிரிந்திருந்து வருந்தும் நிலையில் அவ்வருத்தம் உணராது தமர் ஒறுக்கவும் அது கண்டு அவ்வருத்தத்தினின்றும் நீங்காத வராயும்இப்படி வருந்துதல் தகாதென்று தோழியர் பல காரணங்கள் கூறி மறுக்கக் கேட்டுத் தெளியாதவராயும் தமியராய் உறங்கும் துன்பமின்றி இனி இவ்வூரார் தலைவனின் வரைவுச் செய்தி கேட்டு மகிழ்ச்சியடைக" என்று இவர் அத்தோழியரைப் பேச விடுத்துள்ளார். இவர் பாடலில், கடற்கரையில் உள்ள யானையங் குருகின் பெரிய கூட்டம் பகைவரைக் கொன்ற வீரரது வெற்றி முழக்கத்தினை அஞ்சுதற்கிடமான குட்டுவனுக்குரிய மரந்தை நகர் பற்றிய குறிப்பு வந்துள்ளது. இப்புலவர் கொல்லியைச் சார்ந்தவர்.

நற்றிணையின் 185 ஆம் பாடல்,

.... பாணர்
பரிசில் பெற்ற விரியுளை நன்மான்
கவிகுளம்பு பொருத கல்மிசைச் சிறுநெறி
இரவலர் மெலியாது ஏறும் பொறையன்
உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்

அகல்இலைக் காந்தள் அலங்குகுலைப் பாய்ந்து
பறவை இழைத்த பல்கண் இறாஅல்
தேன்உடை நெடுவரைத் தெய்வம் எழுதிய
வினைமாண் பாவை அன்னோள். (185:3-11)

பொறையனிடம் விரிந்த பிடரி மயிருடன் கூடிய குதிரையைப் பாணர்கள் பரிசாகப் பெறுவர். பொறையனுடைய ஊரின் பெயர் கொல்லி மலையாகும். அம்மலை உயரமானது. அம்மலை மீது ஏறிக் கடப்பதற்கு, ஆங்காங்கே சிறிய வழிகள் காணப்படுகின்றன. பல பாணர்கள் அந்த சிறு வழிகளிலே தாங்கள் பெற்ற குதிரைகள் மீது ஏறிச் செல்வர். அக்குதிரைகளின் குளம்பு அவ்வழியில் மீண்டும் மீண்டும் படுதலினால் அந்தக் கற்பாறைகளில் சிறு வழி ஏற்படும். அவ்வழியைப் பின்பற்றி ஏறிச் செல்வதில் துன்பம் இருக்காது. ஆயினும், அகன்ற இலைகளைப் படைத்ததும் காந்தளின் உயரிய தேனை எடுத்துத் தேன்கூடு கட்டும். அந்த இனிமையான சூழலில்தான் தெய்வத்தால் செய்து வைத்தது போன்ற சிலை அழகு படைத்த நகைத்தே கொல்லுகின்றதுமாகிய கொல்லிப்பாவை இருக்கும். அதுபோன்ற அவளைக் கண்டேன் என்று கொல்லி மலையும் கொல்லிப் பாவையும் பேசப்பெறுகின்றது.

192 ஆம் பாடலில்,

.... அரிவை
பயம்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதுஇயல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றி யன்னநின்
ஆய்நலம் உள்ளி வரின் எமக்கு
ஏமம் ஆகும் மலைமுதல் ஆறே. (192:7-12)

காட்டு வழியில் இரவு நேரத்தில் நீ வரக் கூடாது என்று சொல்லி அழுகின்ற பெண்ணே, கொல்லி மலையில் உள்ள பாவையைப் போன்று தோன்றுகின்ற

மாமை நிறம் படைத்த நின் மேனி, இளவெயிலைப் போல ஒளி தருகிறது. அந்த ஒளியே நான் வரும் வழியில் காவலாக நிற்கிறது. எனவே, எனக்கு எந்தத் துன்பமும் நேரிடாது என்று தலைவன் கூறினான்.

இவ்வாறாக, கொல்லிமலையும், கொல்லிப் பாவையும் பேசப்பட்டுள்ளது.

பரணரின் பாடலில்,

செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வங் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு
அவ்வெள் அருவிக் குடவரை அகத்துக்
கால்பொருது இடிப்பினுங் கதழுறை கடுகினும்
உருமுடன்று எறியினும் ஊறுபல தோன்றினும்
பெருநிலங் கிளரினுந் திருநல உருவின்
மாயா வியற்கைப் பாவையிற். (201:5-11)

மலையிலே வசிக்கின்ற அந்தப் பெண்ணின் தந்தை தன் மகள் மீதுஅளவுகடந்த அன்பு வைத்துள்ளான். அவனுடைய பாதுகாப்பில் வளருகின்ற பெண் எப்பொழுதும் காவலின் கட்டுக்கோப்பில் இருக்கிறாள். அதனால், அவளை உன்னால் அடைய முடியாது. இந்தச் சூழலில் நீ அவளை மறந்து விடு என்று கூறினான். அது கேட்ட தலைமகன் காற்று மோதி அடித்தாலும், பெருமழை பெய்தாலும், இடி இடித்தாலும், நிலநடுக்கம் போன்ற பேரிடர்கள் நேரிடினும் கொல்லிப்பாவையின் அழகு கெடாதது போல என் நெஞ்சிலே குடியேறிய அவளை எக்காலத்தும் என்னால் மறக்க இயலாது என்று கூறினான் என்பதாக அமைந்துள்ளது.

பரணரின் மற்றொரு பாடலில்,

.... மிஞிலி காக்கும்
பாரத்து அன்ன ஆர மார்பின்
சிறுகோற் சென்னி ஆரேற் றன்ன
மாரி வண்மகிழ் ஓரி கொல்லிக்

கலிமயில் கலாவத்து அன்ன இவள்
ஒலிமென் கூந்தல் நம்வயி னானே. (265:4-9)

காய்ந்த புல்லை மேய்கின்ற புள்ளிமான் தன் கொம்பை இழந்து காணப்படுகிறது. அதனைத் தன் அம்பினால் எய்யும் வலிமை படைத்த கவசம் அணிந்த மிஞிலி என்பவன் காவல் செய்து வருகின்ற பாரம் என்னும் ஊரைப் போன்ற அழகி இவள். மழை போன்ற கொடை தரும் ஓரி என்ற வள்ளலுக்குச் சொந்தமான கொல்லி மலையில் உள்ள மயில் போன்ற அழகிய கூந்தல் உடையவள் என்பதாக உள்ளது.

வரலாற்றுச் சிறப்பு இப்பாடலில் காணப்படுகிறது. கொண்கான நாட்டு நன்னனின் படைத்தலைவன் மிஞிலி. கரிகாலனின் தந்தையாகிய இளஞ்சேட்சென்னி, கொல்லி மலைத் தலைவன் ஓரி போன்றோர் குறிப்பிடப் பெற்றுள்ளனர்.

எயிந்தை மகன் இளங்கீரனார் பாடிய பாடலில்,

இன்றுநக் கனைமன் போலா என்றும்
நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்
பெருந்தண் கொல்லிச் சிறுபசுங் குளவிக்
கடிபதம் கமழும் கூந்தல்
மடமா அரிவை தடமென்தோளே. (346:7-11)

இன்றைக்கு நிறைவோடு பொருந்தியிருக்கிற மதியம் நிறைந்திருக்கிறது. பொறையனது தண்மை கொண்ட கொல்லி மலையிடத்திலே சிறிய மலைப் பச்சை நிறமுள்ள இலைகளைச் சூடுவதானாலே என் தலைவியின் கூந்தல் கமழுகின்றது. அவளின் வளைந்த தன்மை உடைய தோள் என் உள்ளத்துள் நின்று நிலவி மகிழ்ச்சி தருகின்றது என்பதாக கொல்லி மலை பேசப் பெறுகின்றது.

பதிற்றுப்பத்து, எட்டாம் பத்தின் மூன்றாம் பாடல், அரிசில் கிழார் பாடியது. பெருஞ்சேரல் இரும்பொறையின்

பன்முகத் திறன்களையும், அவனது வெற்றிச் சிறப்பினையும் போற்றுவதாக உள்ளது. இதில்

கழைவிரிந்து எழுதரும் மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந ! கொடித்தேர்ப் பொறைய! நின். (73:10-11)

மூங்கில் பரவி வளர்வதும், மேகம் தவழும் உச்சிகளை உடையதுமான கொல்லி மலைக்குத் தலைவனே! கொடிகள் அசையும் தேர்ப்படை கொண்ட சேர வேந்தனே! என்று கொல்லி மலை பேசப் பெறுகின்றது.

ஒன்பதாம் பத்தின் முதல் பாடல், பெருங்குன்றூர் கிழார் பாடியது. குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் போற்றிப் பாடியது.

காந்தள்அம் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்
கலிமகிழ் மேவலர் இரவலர்க்கு ஈயும்
சுரும்பார் சோலைப் பெரும்பெயல் கொல்லிப்
பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து
மின்உமிழ்ந் தன்ன சுடர்இழை ஆயத்துத்
தன்நிறம் கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்கு ஈர் ஓதி ஒண்ணுதல் அணிகொளக். (81:22-28)

காந்தள் மலர்க் கண்ணி அணிந்த வளமிக்க குடியில் பிறந்த செல்வர்கள், முழவினைப் போன்ற பலாப் பழங்களை உண்டு, விழா கொண்டாடினாற்போல, மூங்கில் குழாயில் விளைந்த கள்ளினைக் குடித்து, ஆரவாரம் கொண்ட மகிழ்ச்சி மிக்கவர்களாய், இரவலர்க்கு அவர்கள் வேண்டுவனவற்றைக் கொடுக்கும் இயல்புடையது கொல்லிமலை.

இத்தகு கொல்லிமலையில் உண்டான இருவாட்சி மலரோடு பச்சிலையினையும் தொடுத்து அணிந்து, மேகம் மின்னலை உமிழ்ந்தாற்போல ஒளி வீசும் அணிகலன்கள் அணிந்த மகளிர் புடைசூழத் தன் நிறம்

மாறும்படி வண்டு மொய்க்கும் கூந்தலையும், சுருள்முடி தவழும் ஒளிமிக்க நெற்றியினையும் என்பதாக கூறிச் செல்லும் பாடலில் கொல்லி மலை பேசப்பெறுகின்றது.

அரிசில் கிழார் பாடிய பதிற்றுப்பத்தின் எட்டாம் பதிகத்தில்,

பொய்இல் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்றமகன்
கொல்லிக் கூற்றத்து நீர்சுடர் மீமிசைப்
பல்வேல் தானை அதிக மானோடு
இருபெரு வேந்தரையும் உடன்நிலை வென்று
முரசும் குடையும் கலனும் கொண்டு. (எட்டாம் பதிகம்: 1-6)

பொய்படுதலில்லாத செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் சேர வேந்தனுக்கு, வேளாவிக் கோமான் பதுமன் என்பவன் மகள் பெற்றெடுத்த மகன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை ஆவான். அவன் கொல்லி மலையினைச் சார்ந்த கொல்லிக் கூற்றத்தின் மலைகள் கொண்ட நாட்டில் நீர்வளம் மிக்க உச்சிப் பகுதியில் இருந்து ஆள்பவனும், பல வேற்படைகளை உடையவனும் ஆகிய அதிகமான் என்னும் சிற்றரசனோடு சேர்ந்து எதிர்த்த ஏனைய சோழ, பாண்டியர்களைப் போரில் வென்றான். அவர்களை வென்று, அவர்கள் தம் முரசம், கொடி, குடை ஆகியவற்றைக் கைப்பற்றினான். என்று கொல்லி மலையினை ஆண்ட சேரன் சிறப்பிக்கப் பெறுகின்றான்.